தமிழ்த் தேசியத்தின் உரிமைக்குரல்

# காக்கை



கற்போம் - கற்பிப்போம் - களமாடுவோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குரல் 1

# காக்கை

- தமிழ்த் தேசியத்தின் உரிமைக்குரல் -

## உள்ளடக்கம்


அன்புள்ள தமிழ் பேசும் மக்களுக்கு ! 1

கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு (Structural Genocide) என்பதன் மெய்ப்பொருளினை அறிந்து செயற்படுவது இக்காலத்தின் கட்டாயம் - தம்பியன் தமிழீழம் - 3

கிழக்கின் உணர்வுகளை புரிதலிலேயே தாயக விடுதலை தங்கியிருக்கிறது. தெரிதலின் தடுமாற்றந்தணிய உளப்பாங்கினை செம்மையாக்குங்கள்! - கொற்றவை 10

புலிகள் ஒப்படைத்த போராட்டத்தின் தற்போதைய நிலை - ஆதவன் 15

மறம்சார் படைப்புவெளியை பொருளுடையதாக்கும் மண்டியிடாத வீரம் : ஒரு பார்வை - செல்வி 18

ஊன்றிவிட்டுச் செல்லுங்கள் - திரு – 25

அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகளுடன் மட்டும் நின்றுவிடாத இஸ்ரேலின் முடிவில்லாத குற்றங்கள் - மொழிபெயர்ப்பு: - முல்லை 28

உரிமை மீட்க வீறு கொண்டெழ வேண்டுமெனின் எழுதாத வரலாற்றை உள்வாங்க முன் வர வேண்டும்! - வண்டார்குழலி 33

தமிழீழ விடுதலை நோக்கிய தாய்த் தமிழ்நாட்டின் இயங்காற்றல் குறித்த மீளாய்வு - நெடுஞ்சேரன் 40



வள்ளுவராண்டு 2048 விடைத்திங்கள், யஅ
2017.05.18

**பதிப்பு :**
வானகம் பதிப்பகம்



**பதிப்புரிமை :**
காகம் குழுமம்



**தொடர்புகளுக்கு :**
kaakammedia@gmail.com : மின்னஞ்சல்
http://www.kaakam.com/ : இணையம்
kaakam inaiyam : முகநூல்


தமிழின விடுதலைக்கான தமிழ்த் தேசியக் கருத்தியலை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து, காகம் இணையத்தின் ஆய்வுப்படைப்புகளின் தொகுப்பு "காக்கை" சிறப்பு இதழாக வெளிவருகின்றது. தமிழ்த் தேசியம் நோக்கி ஒருமித்துப் பயணிக்க எம்மோடு இணைந்து வலுச் சேர்க்குமாறு மக்களை உரிமையுடன் வேண்டுகின்றோம்.

- காகம் குழுமம் -

கற்போம் - கற்பிப்போம் - களமாடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18-6-2017





# அன்புள்ள தமிழ் பேசும் மக்களுக்கு !

# வணக்கம்.

**இலங்கைத்தீவில் இன்று தமிழ்த்தேசிய இனமானது இடியப்பச் சிக்கலான அரசியல் பொறிக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. இனப்படுகொலைக்குள்ளாகி ஒடுக்குண்டிருக்கும் தமிழினமானது குரலற்றதாக, வலுவிழந்ததாக இலங்கைத்தீவில் தனது அடிப்படையான அரசியலுரிமைகளைக் கூட அனுபவிக்காது ஒரு இருண்மையான கால கட்டத்திற் பயணித்துக் கொண்டிருக்கிறது.**

சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறையை எதிர்த்துப் போரிடும் வலுவிழந்ததாகத் தமிழினத்தை மாற்றுவதற்குச் சாத்தியமான அத்தனை கோர முறைகளையும் எல்லாத் தளங்களிலும் முடுக்கி விட்டிருக்கிறது சிறிலங்கா அரசு. ஒரு தேசிய இனமாகத் தனக்குரித்தான தன்னாட்சி உரிமை அளவுக்கல்ல, வெறும் மாந்தகுலத்தின் அடிப்படை உரிமைகள் கூடத் தனக்கு மறுக்கப்பட்டிருப்பதைப் பேசுவதற்கேனும் ஒரு கருத்துவெளி தமிழர்களிடம் இல்லாதிருப்பதானது வாழ்நாள் அடிமையாகத் தமிழினத்தை மாற்றிவிடக் கூடிய பேராபத்தினை உணர்த்துகின்றது.

தமிழினம் தனது தேசிய இன விடுதலை வேண்டித் தன்னையும் தனது விடுதலைக்கான தமிழ்த் தேசியக் கருத்தியலையும் கட்டமைத்துவிடக் கூடாது என்பதற்காகக் கொச்சையான, கெடுதியான, விடுதலைச் சிந்தனையற்ற கருத்துகளைக் காவும் கருத்தியல் ஊடகங்கள் சிறிலங்கா மற்றும் இந்திய அரச பயங்கரவாதங்களின் முழு ஒத்துழைப்புடன் தமிழர்கள் மத்தியில் உலவ விடப்படுகின்றன.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது சிறுவர்களாகவிருந்து இன்று தமது இளமைப் பருவத்தில் உள்ள சமூகம் இத்தகைய நாசகாரக் கருத்தியல் வலையில் சிக்குண்டு போவதற்கான பேராபத்துகள் குறித்துத் தமிழர்கள் விழிப்படைய வேண்டும்.

**இலங்கைத் தீவில் பின்வரும் தமிழ் பேசும் சமூகங்கள் வாழுகின்றன:**

- வடக்கு- கிழக்கினைத் தமது பூர்வீக நிலமாகக் கொண்டுள்ள ஈழத்தமிழர்கள்
- மலையகத் தமிழர்கள்
- தமிழ் பேசும் இஸ்லாமியர்கள்

இந்த மூன்று தமிழ் பேசும் சமூகங்களும் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கக் கூடாது என்பதனை சிறிலங்கா மற்றும் இந்திய அரச பயங்கரவாதங்கள் விரும்புகின்றன. புத்தளம் முதல் வடகிழக்கோடு அம்பாறை வரை விரிந்து கிடக்கும் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய நிலத்தின் அரசியல் இருப்புத்தான், மலையக தமிழ் மக்களினதும் உரிமைக்கும் குரல் கொடுக்கக் கூடியதாக அமையும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழ் பேசும் சமூகம், இன்று பல இடங்களில் சிறுபான்மையாக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பாரிய அளவிலான மாற்றங்களை சிறிலங்கா அரசு ஏற்படுத்திவிட்டது. இதே பாணியிலான ஆக்கிரமிப்பை, சிறிலங்கா அரசானது தற்போது வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

**இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்பதற்கு தமிழ்பேசும் மக்களுக்கு தடையாக இருப்பது என்ன?**

இந்தக் கேள்விக்கு பதில் மிக இலகுவானது. அதாவது கட்சி ரீதியாகத் தமிழர்கள் பிளவடைந்து தமக்குள் பலவாறு அக முரண்களை வளர்த்து வருகின்றார்கள். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒடுக்கல்களிலிருந்து தம்மை விடுவித்துத் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிப்பதற்காக ஒன்றுபட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட வேண்டிய தமிழ் பேசும் சமூகங்கள், ஒற்றுமையின்றிப் பலவாறு பிளவடைந்து ஒரு பெரும் அரசியற் சக்தியாக உருவாகி விடாதவாறு தமது பிரித்தாளும் நரபலிச் சூழ்ச்சியினைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியிற் புகுத்தி, அதில் ஓரளவு வெற்றியும் கண்டு வருகின்றன சிறீலங்கா மற்றும் இந்திய அரச பயங்கரவாதங்கள். இதனால் பொது எதிரியை வெல்வதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான வேலைத் திட்டமுமின்றித் தமிழ் பேசும் மக்களின் அரசியல் இலங்கைத் தீவில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

அத்துடன், பதவி மோகத்திற்காக, மக்களைத் திசை திருப்பி அரசியல் பிரச்சினைகளை மேலும் மேலும் சிக்கலாக்கி, சிறீலங்கா அரசாங்கத்திடம் இந்த இனத்தை நிரந்தர அடிமையாக்கும் வேலைகளே இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.

**நாம் ஏன் தனித்துவமானவர்கள்?**

இந்த நிலத்தில் வாழும் தமிழர்களுக்கு என்றொரு பாரம்பரியம் அறிவியல், கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், மருத்துவம் எல்லாமே காணப்படுகின்றன.

மற்றைய தேசத்து இஸ்லாமியர்கள் போலல்லாது, ஈழத்துத் தமிழ் இஸ்லாமியர்களுக்கு என்று தனித்துவமான உடை, உணவுப் பழக்கவழக்கம், இலக்கியம் ஆகியன காணப்பட்டன.

**ஏன் பொது எதிரியை நோக்கி ஒன்றி திரளவேண்டும்?**

சிறீலங்கா அரசானது இஸ்ரேலிய மற்றும் இந்திய அரசுகளின் ஆலோசனைப்படி, தமிழ் பேசும் சமூகங்களை கட்சி ரீதியாக, மத ரீதியாக பிளவடையச் செய்வதில் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டிருக்கிறது. இந்தப் பிளவுகளைச் சாக்காக வைத்து புத்தளம், அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் பேசும் சமூகங்களை சிறுபான்மையினராக மாற்றிவிட்டார்கள். புத்தளம், அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இலங்கை அரசு செய்த சிங்களக் குடியேற்றங்களானவை, பலஸ்தீனத்தில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் குடியேற்றங்களை ஒத்தன.

**இஸ்ரேஸ் இலங்கையில் அறிமுகப்படுத்திய குடியேற்ற மாதிரிகள்:**

(1) மாவட்ட எல்லைகளை மாற்றுதல்

(2) ஆறுகளை அண்டிய குடியேற்றங்களை கொண்டுவருதல் (மகாவலித் திட்டம்)

(3) தமது எதிரியை குழுக்களாக உடைத்து அவர்களிடம் இருந்து நிலங்களை வாங்கி குடியேற்றுதல்.

தவிர:

(1) தமக்கென கலாச்சார விழுமியங்களைக் கொண்டிருந்த ஈழத்துத் தமிழ் இஸ்லாமியர்களுக்குள், இறக்குமதி செய்யப்பட்ட அரேபிய மோகங்களைத் திணித்து, அவர்களை மற்றைய தமிழ் பேசும் மக்களிடத்தில் இருந்து அந்நியப்படுத்தி தமது தேவைகளை நிறைவேற்றுவதிலும் இஸ்ரேலிய அமைப்புகள் தீவிரமாக வேலை செய்து வருகின்றன.

இப்படி, தமிழ் பேசும் சமூகங்களை கட்சி அரசியலுக்கூடாகப் பிரித்து அந்த அரசியலில் கவனம் செலுத்தப்பண்ணிவிட்டு, தமது ஆக்கிரமிப்புகளை எந்தவொரு தடையுமின்றிச் செய்துவருகிறது சிறீலங்கா அரசு.

**பொது எதிரியை நோக்கி எப்படி ஒன்று சேர்வது? "காக்கையின்" பங்கு எப்படியாயிருக்கும்?**

பொது எதிரி நோக்கி ஒன்று சேர்வதற்கு, ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் அறிவியல், பொருளாதாரம், கலை, இலக்கியம், வாழ்வியல், அரசியல் என்பவற்றை மிக ஆக்க பூர்வமாகத் தேட வேண்டும். அதன் மூலம் ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் மண் விடுதலை பற்றிய தேவையும் அக்கறையும் உணரப்படும். ஈழத் தமிழ்த் தேசியத்தின் இளம் சமுதாயமானது சரியான தெளிவுடன் வளருமிடத்து, பொது எதிரி நோக்கி ஒன்று சேர்ந்து மண்ணை விடுதலை பெறச் செய்வதென்பது சாத்தியமற்றதல்ல என்ற உறுதியுடன் காக்கை பயணிக்கும் .

**ஒன்றாகச் சேருவோம்.. ஒன்றிற்காக சேருவோம்!**

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு (Structural Genocide) என்பதன் மெய்ப்பொருளினை அறிந்து செயற்படுவது இக்காலத்தின் கட்டாயம் - தம்பியன் தமிழீழம் -

**ஈழத்தமிழர்கள் மீது அரைநூற்றாண்டு காலமாகத் தொடர்ச்சியாக தமிழினவழிப்பு நடவடிக்கைகளானவை சிங்கள பௌத்த பேரினவாத அரச பயங்கரவாதத்தால் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் உச்சமாக, பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொத்துக் கொத்தாக வகைதொகையின்றிப் படுகொலை செய்யப்பட்டதுடன், தமிழர்களின் இறைமையை உலகிற்குப் பறைசாற்றியிருந்த நடைமுறைத் தமிழீழ அரசானது சிங்கள பௌத்த பேரினவாத அரச பயங்கரவாதத்தின் ஆக்கிரமிப்பினால் 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 18 ஆம் நாள் இல்லாதொழிக்கப்பட்டது.**

இந்த சிங்களத்தின் தமிழர்கள் மீதான இனவழிப்பைச் (Genocide) செய்து முடித்த பின்னரான இனச் சுத்திகரிப்பு (Ethnic Cleansing) நடவடிக்கைகளை முற்றிலுமாகச் செய்து முடிப்பதற்கு, இனப்படுகொலைக் கூட்டுப் பங்காளிகளான அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளும், இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் போதிய கால இடைவெளியை, தமது அதிகார வெறியை உலக அரங்கில் உறுதிப்படுத்த உதவும் ஐ.நா போன்ற அமைப்புகளின் மூலம் வழங்க, அதனையும் செய்து முடிக்கும் தறுவாயில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு உள்ளது. போர்க்காலங்களில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகள் மற்றும் இரசாயன ஆயுதங்கள் மூலமான சிறிலங்காவின் முப்படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மூலமும், கைதுகள், கடத்தல்கள், காணமலாக்கப்படுதல், பாலியல் வன்கொடுமைகள், பொருண்மியத்தடைகள், கல்விக் கூடங்கள் மற்றும் வழிபாட்டிடங்கள் போன்றவற்றின் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் போன்ற நேரடி வன்செயல்கள் மூலம் தமிழினவழிப்பை ஓரளவிற்கு வெளிப்படையாகத் தங்குதடையின்றி முன்னெடுத்த சிங்கள பௌத்த அரச பயங்கரவாதமானது, தமிழர்களின் மீதான இனச்சுத்திகரிப்பைச் செய்யும் இக்காலகட்டத்தில், நுணுக்கமாகக் கட்டமைக்கப்பட்ட கட்டங்கட்டமான இனவழிப்பு நடவடிக்கைகளை வெளிப்படையாகத் தெரியாத வண்ணம் ஆனால் அகலப்படுத்திச் சகல தளங்களிலும் வியாபித்து முனைப்புறுத்தி வருகின்றது. எனவே, இனவழிப்பு என்றால் என்ன என்ற சரியான புரிதலின் வாயிலாகக் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு என்றால் என்ன என்பதன் மெய்ப்பொருளினை அதன் உள்ளார்ந்த கருத்தின் அடிப்படையில் விளங்கிக்கொண்டு அது குறித்த எச்சரிக்கை உணர்வை உடையவர்களாக வேண்டிய தேவை ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு.



முழு விளக்கத்துடன் ஆய்ந்தறிந்து சிந்தையில் நிறுத்த வேண்டிய இந்தக் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு என்ற விடயம் குறித்த போதிய ஆய்வுகளும் தேடல்களும் இல்லாமல், தமக்கேயுரிய கற்பனைப் பாணியில், மெய்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரித்துத் தவறான கருத்துருவாக்கத்தினை சமூக வலைத்தளங்களிலும் தரமற்ற ஊடகங்களிலும் சிலர் செய்து வருகின்றனர். இவர்களின் இவ்வாறான அரைவேக்காட்டுத்தனங்களால், ஏலவே தோல்வி மனப்பாங்கில் துவண்டு கொண்டிருக்கும் தமிழினம், எதற்கெடுத்தாலும் ஒரு நிலைத்த உளவியல் அஞ்சுகைக்கு உட்படுமே தவிர, கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக் குறித்த அதனது உள்ளார்ந்த மெய்நிலைப் புரிதல் குறித்த தெளிவும் அதன் விளைவாக வேண்டிய எச்சரிக்கை உணர்வும் தமிழர்கள் மத்தியில் ஏற்பட வாய்ப்பில்லாமல் போகும்.

எனவே, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு என்றால் என்ன என்பதனையும் அதனது அழிப்பு முறையானது எங்ஙனம் தமிழர்களின் வாழ்வியல் நெடுகிலும் குடைந்துள்ளது என்பதனையும் அதனது மூல வேர் எங்கிருந்து இழையோடுகின்றது என்பதனையும் ஆய்ந்தறிந்து அடுத்த கட்டம் குறித்துத் தமிழர்கள் விழிப்பு நிலை பெறுதலே தமிழர்கள் இந்தக் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளும் முதற்படி எனக் கணித்து, இப்பத்தி வரையப்படுகின்றது.

ஒரு தேசம் என்பது ஒரு பொதுவான மொழி, தொடர்ச்சியான நிலப்பரப்பு, பொருண்மிய வாழ்வு மற்றும் பொதுப் பண்பாட்டில் வெளிப்படும் பொதுவான மன இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான மக்கள் சமூகமாகும் என வரையறுக்கப்படுவதற்கு அச்சொட்டான எடுத்துக்காட்டாக இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய இனம் இருக்கின்றது. இதனடிப்படையில் தேசிய இனங்களிற்கே உரித்தான தன்னாட்சி அடிப்படையில் தனது தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை ஈழத்தமிழர்களுக்குண்டு. எனவே, தம்மைத் தாமே தமது மண்ணில் ஆள நினைக்கும் தன்னாட்சியுரிமைக்கு உரித்துடையதான மரபுவழித் தமிழ்த் தேசிய இனமான ஈழத்தமிழர்களை, இனவழிப்பினை முனைப்புறுத்தி இல்லாதொழித்தலே, தமிழர்கள் தாயகத்தை வல்வளைப்புச் செய்து, இலங்கைத்தீவை சிங்களவர்கள் மட்டுமே வாழும் சிங்கள பௌத்த நாடாக்குவதற்கான ஒரே வழியெனத் திடமாக நம்பும் சிங்கள பௌத்த பேரினவாத சிறீலங்கா அரச பயங்கரவாதமானது, கட்டமைக்கப்பட்ட தமிழினவழிப்பை தேசத்தின் கூறுகளையும் அதனது அடிப்படைகளையும் சிதைக்கும் நோக்குடன் அதனது ஒவ்வொரு படிநிலையிலும் நன்கு திட்டமிட்டு இனவழிப்பு உத்திகளைச் செலுத்தி அதனை நிலைத்த கட்டமைப்பாக்கி, இனப்படுகொலையின் தொடர்ச்சித் தன்மையினை உறுதிப்படுத்தியவாறு மேற்கொண்டு வருகின்றது.

எனவே தொடர்ச்சியானதான தாயக நிலப்பரப்புக்கள், தொன்மமான தமிழ்மொழி, தமிழர்களின் பொருண்மியம் மற்றும் நீண்ட நெடிய மேம்பட்ட பண்பாடு என்பனவற்றை சிதைத்தழிக்கவல்லவாறு, சிறிலங்கா அரச பயங்கரவாதமானது தனது ஒவ்வொரு அரச கட்டமைப்பையும், கட்டமைக்கப்பட்ட தமிழினவழிப்பைத் தொடர்ச்சியாகச் செய்யக் கூடிய வகையில் கட்டமைத்துள்ளது. இதனால், தமிழர்களின் தனித்த தேசியம் என்ற மரபுவழித் தமிழீழத் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை இல்லாதொழித்து, இலங்கைத்தீவை சிங்கள பௌத்த நாடாக்கலாம் என்று கங்கணம் கட்டிச் செயலாற்றி வருகின்றது.

## இனப்படுகொலை (Genocide) என்ற சொல்லுருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணியும் அதனது வரைவிலக்கணமும்

யூத இனப்படுகொலையின் போது தனது சகோதரன் தவிர குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இழந்த ரபேல், இனப்படுகொலையானது பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றமாக இனங்காணப்பட வேண்டும் என்று பிரச்சாரங்களை முன்னெடுத்து வந்தார். இதனை அடுத்து 1948 ஆண்டு மார்கழி மாதம் ஐநா தீர்மானத்தில் இது உள்வாங்கப்பட்டு, பின்னர் 1951 ஆம் ஆண்டு தை மாதத்தில் நடைமுறைக்கு வந்தது. 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை குறித்த ஐ.நா வின் தீர்மானத்தின் (UN Convention) சரத்து (Article) 2 இன் படி இனப்படுகொலையானது கீழ்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு தேசிய, இன, மத குழுக்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழித்தொழிக்கும் எண்ணத்துடன் கீழ்க்காணும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது:

- குழுவின் உறுப்பினர்களைக் கொலைசெய்வது
- குழுவின் உறுப்பினர்களுக்கு உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ தீங்கிழைப்பது
- அவர்களின் வாழ்வாதாரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாகவோ பகுதியாகவோ அழிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் வலிந்த தாக்குதல்

- குழுவில் குழந்தைப்பிறப்புகளைத் தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்
- ஒரு குழுவிலிருந்து வேறொரு குழுவிற்கு குழந்தைகளை வலுக்கட்டாயமாக மாற்றுதல்

இந்த வடிவிலான இனப்படுகொலையானது ஒரு இனத்தினைப் பேரழிவுக்குட்படுத்தும் என்பது துலாம்பரமானதே. ஆனால், ஒப்பீட்டளவில் கண்ணிற்குத் தெரியாத, ஒரு எல்லை வரைக்கும் அதனது அபாயகரமான தாக்கம் வெளித் தெரியாதமையால் இனவழிவுக்குள்ளாகும் இனத்தால் ஏற்றுக்கொண்டதாக நடைமுறையில் இருக்கின்ற, இனப்படுகொலை என்ற ஐ.நாவின் வரையறைக்குள்ளாகும் விடயங்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமாக நடந்தேறிவருகின்ற, ஆனால் பேசு பொருட்களாக அரசியற் செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் ஊடகங்களிலும் அதிகம் ஆய்வுக்குட்படுத்தப்படாததுமான இனவழிப்பு வடிவங்கள் இருக்கவே செய்கின்றன. இவை வெற்றுக்கண்ணிற்கு இலகுவிற் புலப்பட்டுவிடாத அபாயகரமான புற்றுநோய்க்கொப்பான இனவழிப்பு வடிவங்களாகும். இவ்வாறான இனவழிப்பு வடிவங்களைக் குறித்து நிற்கும் இனவழிப்புக் குறித்த கருத்துருவாக்கங்களே கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு என வகைப்பட்டு நிற்கின்றன.



நேரடியாக இராணுவரீதியாக ஏற்படுத்தும் பௌதிகச் சிதைப்பிற்குப் புறம்பாக நின்று, அரச இயந்திரத்தின் அனைத்துக் கட்டமைப்புக்கள் மூலமாக விளையும் சமூகக் கட்டமைப்பில் நிகழும் தாக்கங்களை, ஒரு சமமற்ற ஏற்றத் தாழ்வான இனவடிப்படையில் அமையும் சமூகக் கட்டமைப்புக்களாக்கி அதன் வழியில் ஒரு இனத்தின் தொடர்ச்சியான சிதைவு அதன் தனித்த தேசிய அங்கிகாரக் கூறுகளை இழந்துவருவதால் நிகழ்ந்து வருகின்றது என்பதை உறுதிப்படுத்தும் கட்டமைப்பு சார்ந்த வடிவமைப்பால் நிகழும் இனவழிப்பு வடிவங்களையே கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு எனலாம். பன்னாட்டுப் பொருண்மிய ஒழுங்கின் வழி விளைந்த உலக ஒழுங்கு என்று சொல்லப்படும், உலக வல்லாண்மையாளருக்கான உலக ஒழுங்கானது, நாடற்ற தேசிய இனங்களின் இருத்தலைப் பெரிதும் கேள்விக்குள்ளாக்கியதோடு மட்டுமல்லாது, அந்த இனக்குழுக்களில் அங்கம் வகிப்பது என்ற ஒரே காரணத்தினால், பட்டினிச்சாவையும் அடையாள இழப்பையும், வாழ்நாள் ஏதிலி என்ற அடையாளத்தையும் அந்த மக்களிற்கு இந்த உலக ஒழுங்கு எனப்படும் பாகுபாடான உலகக் கட்டமைப்பு வாரி வழங்குகின்றது. தமது பொருண்மிய நலன்கள் என்ற உற்பத்தியின் பக்க விளைவுகளே இந்த நாடற்ற தேசிய இனங்களின் ஒழிப்பு என்பதெல்லாம் எந்த உலக வல்லாண்மையாளர்களுக்கும் நன்கு தெரியாமல் நிகழ்வதில்லையே. (Chalk and Jonassoh 2001)

ஒரு இனக் குழுவின் அடிப்படைகளை அழித்தொழிக்க வல்லவாறு ஒருங்கிணைந்த கட்டமைப்புத் திட்டமாக இனவழிப்பு மேற்கொள்ளப்படுவதாக 1940களில் லெம்கின் கூறிவந்தமையானது, கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக் குறித்தான கருத்துருவாக்கத்திற்கும் இனப்படுகொலை குறித்த மறுகருத்துருவாக்கத்திற்கும் வழிகோலி உதவியுள்ளது எனலாம்.

இனப்படுகொலைச் செயற்பாட்டிற்கான வன்முறை வடிவங்கள் வெளிப்படையாக வெளித் தெரியாமல், அதே நேரம் அவற்றின் மூலம் அல்லது செய்வி எங்கிருந்து கருக்கிளம்பியது என்பதன் அடிச் சுவட்டினையும் இலகுவில் அடையாளம் காணமுடியாததெனின், அது மிகவும் நுணுக்கமாக இழைக்கப்பட்ட அரச இயந்திரத்தின் கட்டமைப்புக்கள் வழி வந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். இந்த வடிவிலான இனப்படுகொலைக் கூறுகளையே கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் வழி விளைந்ததெனலாம். (Galtung, 1975)

அரச இயந்திரத்தின் கட்டமைப்புக்கள் கட்டமைக்கப்பட்ட விதமே, பாகுபாடுகளை இயல்பாகவே ஒரு குழுவின் மீது ஏற்படுத்துவதாக அமைவதுண்டு. அப்படி அமையுமிடத்து, குறிப்பிட்ட சாரார் அகமகிழ்வாயும், தற்திருப்தியுடனும் நல்ல வாழ்க்கைத் தரத்துடனும் வாழ இயலுமாவதோடு, ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தோர் அணுவணுவாகத் துன்பப் பூட்டுக்குள் சிக்கித் தவிப்பதாகவே அவர்களது வாழ்நிலையின் ஒவ்வொரு படிநிலையும் அமைந்துவிடுகின்றது. அதாவது பசி, பட்டினி, போசாக்குக் குறைவு, வேலையின்மை, உறுதியற்ற வாழ்நிலைச் சூழல், காத்திருப்புகள், உறுதியற்ற வாழ்வியல் கூறுகள், அதனால் விளையும் கூட்டு உளவியற் சிதைவு போன்றவற்றினால் கடும் பாதிப்புக்களை அனுபவிக்கும் பரிதவிப்பு நிலையில் ஒரு குழுவைச் சார்ந்தோர் அல்லலுறுவதற்கு, அரச இயந்திரமும் அதன் கட்டமைப்புக்களும் கட்டமைக்கப்பட்ட விதமே காரணங்களாக அமைந்துவிடுகின்றன என Galtung மேலும் விளக்குகின்றார். இப்படி அரச இயந்திரத்தின் ஒவ்வொரு கட்டமைப்பும் கட்டமைக்கப்பட்ட விதத்தால் ஓரங்கட்டப்பட்ட ஒரு குழுவில் இறப்புக்கள் அதிகரித்து, அந்தக் குழுவின் தொடர்ச்சியான இருப்பு கேள்விக்குள்ளாகிவிடும். (Waters, 1994)

இலங்கைத்தீவிலே தமிழர்கள் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்குள் தொடர்ந்து ஆட்பட்டு வருகின்றமை மற்றும் வருகின்ற விதத்தினை மேற்கூறிய அறிஞர்களின் கூற்றுக்கள் அப்படியே மெய்ப்படுத்துவதாக அமைகின்றன. இவ்வாறு அரச இயந்திரம் கட்டமைக்கப்பட்ட விதத்தால் உருவாகும் பாகுபாடு, திட்டமிடாமல் உத்தேசிக்காமல் ஆனால் இடைவிடாமல் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமுமே இருக்கும் என்று விளக்கம் கொடுப்பதன் வாயிலாக, அதன் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் வீரியத்தை எடுத்துக் கூற முயல்கின்றார் Galtung.

தமிழர்களின் தொடர்ச்சியான நிலப்பரப்பு, தொன்மமான மொழி, பொருண்மிய வாழ்வு, தனித்தன்மையான பண்பாடு போன்ற தனித் தேசியமாக தமது தமிழர் தாயகத்தில் வாழத் தேவையான மூலகங்களை (Elements) சிதைத்தழிப்பதன் மூலம், தமிழ்த் தேசியத்தின் இருத்தலைத் தமிழர் தாயகப் பகுதிகளிலே இல்லாதொழித்து, ஒட்டுமொத்த இலங்கைத்தீவையும் சிங்கள பௌத்த நாடாக்குவதற்கு சிறிலங்காவின் அரச இயந்திரமும் அதனது கட்டமைப்புகளும் எவ்வாறு நுணுக்கமாக இழைக்கப்பட்டு, தொடர்ச்சியான தமிழர் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் சாத்தியமாக்கப்படுகின்றது என்பதனைத் தமிழீழ தமிழ்த் தேசியத்தின் ஒவ்வொரு தேசிய மூலகங்களும் எவ்வாறு நுட்பமாகச் சிதைத்தழிக்கப்படுகின்றன என்பதனைத் தொகுத்து நோக்கில் துலங்கச் செய்யலாம்.

**தமிழர்களின் தொடர்ச்சியான நிலப்பரப்பு என்ற தமிழீழத் தமிழ்த் தேசிய மூலகம் எப்படி சிதைத்தழிக்கப்படுகின்றது (Demographic Genocide)?**

தமிழர்களின் வளமான விளைநிலங்கள் சிறிலங்கா அரச படைகளால் அபகரிக்கப்பட்டு, அவை உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, நாளடைவில் இராணுவம் அதில் வேளாண்மை செய்து, அந்த மண்ணிற்குரியவர்களின் வாழ்நிலையை அந்த மண்ணிலேயே கேள்விக்குள்ளாக்குதல் தொடர்ச்சியாக நடந்தேறி வருகின்றது.

- தமிழ் எல்லைக் கிராமங்களில் ஊர்காவல் படையினரின் குடும்பங்களிற்கு நிலம் வழங்குதல் என்ற போர்வையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அமைத்தல்
- தமிழர் தாயகத்திலுள்ள தனியார் நிலங்களைக் கைப்பற்றுவதற்காக நகரம் மற்றும் நாட்டுத் திட்டமிடல் கட்டளையின் படி சட்ட அமுலாக்கம் செய்தல்.
- வடகிழக்கில் சிறிலங்காவின் தொல்லியல் துறை தனது நடவடிக்கைகளைக் குவியப்படுத்தி தமிழர் நிலங்களை அபகரித்தல்
- தமிழ்க் கிராமங்களை சிங்களக் கிராமங்களுடன் இணைத்து, தமிழர்களின் இருப்பையே எல்லைக் கிராமங்களில் கேள்விக்குள்ளாக்குதல்
- மகாவலி அபிவிருத்தி அமைச்சானது துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் துரிதமாக சிங்களக் குடியேற்றங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் தாயக நிலப்பரப்பில் ஏற்படுத்தல்.

- தமிழர்களின் சுடுகாட்டு நிலங்களைக் கூட அபகரித்து மாற்றாருக்குக் கொடுத்தல்
- பாரிய படைத்தளங்களை அமைப்பதற்காக தமிழர் தாயக நிலங்களை அபகரித்தல்
- தமிழர் வாழ்விடங்களில் சிங்கள நிருவாக அலகுகளை ஏற்படுத்தல்
- தமிழர்களின் மீள்குடியேற்றத்துடன் சேர்த்து சிங்களவர்களையும் குடியேற்றி, வளமான நீர்நிலைகளை அண்டிய பகுதிகளை சிங்களவர்களுக்குக் கொடுத்தல்.
- ஏக்கர் கணக்கான தமிழர் தாயக நிலங்களை கோடிக்கணக்கான பணத்திற்கு வெளிநாட்டு நிறுவனங்களிற்கு, அவர்கள் நட்சத்திர விடுதிகள் அமைப்பதற்காக விற்பனை செய்ய சுற்றுலாத்துறை ஒழுங்குகளை மேற்கொள்ள, அதற்கிசைவாக நில அளவைத் திணைக்களமும் அதற்குரிய பாதுகாப்புகளை வழங்க சிறிலங்கா அரசின் படைகளும் கூட்டாக இணைந்து தமிழர் விரோத செயலாற்றுதல்.
- கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், சுற்றுலாத்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு போன்ற சிறிலங்கா அரச இயந்திரத்தின் கட்டமைப்புகள் கூட்டாக இணைந்து தமிழர்களின் தாயக நிலங்களை வெளிநாடுகளிற்கு குத்தகைக்குக் கொடுத்தல். இவற்றிற்கான அரச வர்த்தமானி அறிவிப்புத் தேவைப்படின் காணி அமைச்சும் இணையும்.
- பெருந்தெருக்கள் அமைச்சானது, தமிழர் தாயக நிலப்பரப்புகளில் உள்ள காடுகளை ஊடறுத்துத் தெருக்களை அமைத்துச் சிங்களப் பிரதேச மக்களை தமிழர் தாயக நிலங்களை நோக்கி அசையச் செய்து தமிழர் நிலங்களைச் சிங்களமயப்படுத்தல்.

1957 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் மூலம் டி.எஸ். சேனநாயக்காவால் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் தாயகங்களில் சிங்களக் குடியேற்றமானது இடைவிடாது தொடர்ச்சியாக நடந்தேறியே வருகின்றது. வடக்கு- கிழக்குத் தமிழர் இணைந்த தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதற்காக எல்லைப் பகுதிகளை சிங்களமயமாக்கி சிங்கள இடமாக்க, சிறிலங்காவின் தொல்லியல் துறை, மீள்குடியேற்ற அமைச்சு, மகாவலி அமைச்சு, புத்தசாசன அமைச்சு, சிறிலங்காவின் வனத்துறை, பெருந்தெருக்கள் அமைச்சு, ஊர்காவற்படை மற்றும் முப்படைகள் இணைந்து செயலாற்றுகின்றன. இவ்வாறு ஒட்டுமொத்த சிறிலங்காவின் அரச இயந்திரத்தின் அமைப்பு முறையே கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைத் தமிழர்கள் மீது தொடர்ச்சியாக எப்போதுமே மேற்கொள்ளத்தக்கவாறே அமைந்துள்ளது.

**தொன்மமான தமிழ்மொழி என்ற தமிழீழத் தமிழ்த் தேசிய மூலகம் எப்படி சிதைத்தழிக்கப்படுகின்றது** (Lingual Genocide)?

- தமிழ்க் கிராமங்களை சிங்கள நிருவாகப் பிரிவுக்குள் உள்ளடக்குவதன் மூலம், அலுவல்கள் மொழியாக சிங்களத்தை திணிப்பதோடு, சிங்களத்தை உள்வாங்காதோர் அரச நிருவாகங்களுடனான தொடர்பறுந்தவராவார்.
- அரச நிருவாகங்களின் உயர் பதவிகளை சிங்களம் மட்டுமே தெரிந்த சிங்களவருக்கு வழங்குவதன் மூலம் தமிழை அலுவல்கள் மொழி என்ற நிலையிலிருந்து இல்லாதொழித்தல்.
- நிருவாகக் கூட்டங்களைச் சிங்களத்தில் நடத்துதல்.
- அமைச்சுக்களின் சுற்றறிக்கைகளைச் சிங்களத்தில் அனுப்பி வைத்தல்.
- தமிழ் மொழியையும் பெயர்ப்பலகையில் சேர்க்க வேண்டிய சூழலில், எழுத்து மற்றும் கருத்து வழுக்களுடன் தமிழினைக் கொச்சைப்படுத்தும் வகையில் தமிழினைப் பயன்படுத்தல்.
- தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் தமிழின் தொன்மையையும் அதனது உலகாண்ட சிறப்புக்களையும் அறிவியல் நுணுக்கங்களையும் திட்டமிட்டு மறைக்கும் வகையில் பாடத்திட்டத்தினைத் தயாரித்தல்
- தமிழ் மொழி குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்காக எந்த ஒரு ஏற்பாடுகளையும் செய்யாமல் திட்டமிட்டுத் தவிர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு, பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு, ஊடக அமைச்சு, தேசிய சுகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சு போன்ற அமைச்சுகள் அடங்கிய எல்லா மட்டங்களிலும் இந்த தமிழ் மொழி விரோதச் செயற்பாடுகள் விரவிக் காணப்படுகின்றன. எனவே கட்டமைக்கப்பட்டு இருக்கும் இந்த சிங்கள பௌத்த அரச இயந்திரம் தான் கட்டமைக்கப்பட்ட விதத்திலேயே தமிழினவழிப்பை தன்னிச்சையாகத் தொடர்ந்து மேற்கொண்ட வண்ணமே இருக்கும்.



**தமிழர்களின் பொருண்மிய வாழ்வு என்ற தமிழீழத் தமிழ்த் தேசிய மூலகம் எப்படி சிதைத்தழிக்கப்படுகின்றது** (Economic Genocide)?

- வேலைவாய்ப்புகளில் தமிழர்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுதல்.
- தமிழர்களை மீள்குடியேற்றும் போது வளமான விளைநிலங்கள், நீர்நிலைகள் போன்றவற்றைச் சிங்களமயப்படுத்தி, தமிழர்கள் பொருண்மிய வாழ்நிலையை இழத்தலை உறுதிப்படுத்தல்.
- வேளாண்மை, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என வாழும் தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்தல்.
- அரச நியமனங்களில் பாகுபாடு.
- நிதி ஒதுக்கீட்டில் தமிழர்களின் பகுதிகள் திட்டமிட்டு வஞ்சிக்கப்படுதல்.
- காடுகளை வெட்டித் தமிழர்களின் வளங்களைச் சுரண்டுதல்.
- போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு வரும் ஒதுக்கீடுகள் மற்றும் கொடுப்பனவுகளை (வீட்டுத் திட்டம், விவசாயம், மீன்பிடி, கல்வி) என்பனவற்றைத் திசை திருப்பி சிங்களவர்களுக்குக் கிடைக்கச் செய்தல்.
- கொழும்புமைய அமைச்சுக்களினூடாக உள்ளே வரும் வெளிநாட்டு உதவித் திட்டங்களில் கணிசமானவற்றைச் சிங்களவர்களுக்கு வழங்குதல்.
- சிங்கள கடற்படை மற்றும் இராணுவத்தின் பாதுகாப்பில், தமிழர் கடலில் சிங்களவர்கள் மீன்பிடித்தல்.
- எல்லைக் கிராமங்களில் மேய்ச்சலிற்குச் செல்லும் கால்நடைகளை வனத்துறையும் ஊர்காவல் படைகளும் சுட்டுக் கொல்லுதல் மற்றும் மேய்ச்சல் நிலங்களை அபகரிப்பதன் மூலம், தமிழர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்தல்.

பொருண்மிய அபிவிருத்தி அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, விவசாய அமைச்சு, ஊரக பொருளியல் அலுவல்கள் அமைச்சு அடங்கிய எல்லா மட்டங்களிலும் தமிழர்களின் பொருண்மியத்தைத் தமிழர்களிடம் இருந்து பறித்தல் என்பதை உறுதிப்படுத்தத் தக்கவாறான தொடர்ச்சியான செயற்பாடுகள் இடம்பெற்றே வருகின்றன.

**தமிழர் பண்பாடு என்ற தமிழீழத் தமிழ்த் தேசிய மூலகம் எப்படி சிதைத்தழிக்கப்படுகின்றது** (Cultural Genocide)?

- எல்லைக் கிராமங்களிலும் உயர் பாதுகாப்பு வலயங்களிலும் அமைந்துள்ள தமிழர் வாழ்விடங்களை அழித்து புத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் அமைத்தல்.
- கிராமங்களில் உள்ள சிறுதெய்வ வழிபாட்டிடங்களை நாசம் செய்தல்.
- தமிழர்களின் பாரம்பரிய சித்த வைத்திய கற்கைநெறியை கிழக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்திலிருந்து கொழும்பிற்கு மாற்றியதன் மூலம், தமிழர்களின் மருத்துவ அறிவியலின் தொன்மம் குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படாமையை உறுதிப்படுத்தல்.

- வடகிழக்கில் சிங்கள தொல்லியல் துறையின் நடவடிக்கைகளைக் குவியப்படுத்துவதன் மூலம் வரலாற்றுத் திரிபுகளை இயன்றவரை மேற்கொள்ளல்.

- ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான புத்தர் சிலைகளை தமிழர் தாயகப் பகுதியில் நிறுவுதல் (2013 ஆம் ஆண்டு மட்டும் 500 இக்கு மேற்பட்ட புத்தர் சிலைகள்)

கலாசார அலுவல்கள் அமைச்சு, சுற்றுலா ஊக்குவிப்பு அமைச்சு, புத்தசாசன அமைச்சு, சிங்கள தொல்லியல் துறை அடங்கிய எல்லா மட்டங்களிலும் தமிழர்களின் உயரிய பண்பாட்டைச் சிதைத்தழிக்கும் நடவடிக்கைகள் தொடரத்தான் செய்கின்றன.



தமிழர்கள் பலவகைகளில் கட்டாய ஒருமைப்படுத்தலுக்குள் (Forced Assimilation) உள்ளாக்கப்படுகின்றனர். தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள் சிதைக்கப்படும் வகையில் ஒரு வகைப் பல்லினக் கலாச்சாரம் தமிழர்கள் மத்தியில் புகுத்தப்பட்டுத் தமிழரின் பண்பாட்டுத் தனித்தன்மைகள் இழக்கப்படும் வகையில் இந்தக் கட்டாய ஒருமைப்படுத்தலுக்குள் தமிழர்கள் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

உலகின் அத்தனை அடக்குமுறை, ஆதிக்கசக்திகளின் மாதிரிகளையும் தேர்ந்தெடுத்து அத்தனை வழிகளிலும் தமிழர்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடர்ச்சியாகச் சாத்தியமாகும் வண்ணமே சிறிலங்கா அரச இயந்திரம் உலக வல்லாண்மையாளர்களால் வலுவாக்கப்பட்டுள்ளது.

மகாவம்சம் போன்ற வரலாற்றுப் பேழை வடிவில் புனையப்பட்ட புரட்டுக்களின் பாற்பட்டு விளைந்த சிங்கள பௌத்த பேரினவெறியின் மேலாதிக்கத்தின் உச்சத்தில் நின்று கட்டமைக்கப்பட்ட சிறிலங்கா அரச இயந்திரத்தினதும் அதனது கட்டமைப்புகளினதும் இயங்கியலானது, தமிழர்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை தன்னியல்பிலேயே தானியங்கியாகத் தொடர்ந்து மேற்கொள்ளவல்லது. சிங்கள பௌத்த பேரினவாதம் எப்போதும் தனது பேரின வெறியில் பரிணாம வளர்ச்சி கண்டே வந்துள்ளது. மேற்குலகின் போக்கிரித்தனத்தால் உருவான நல்லிணக்கப் போர்வையைப் போர்த்திச் சிங்கள பௌத்த பேரின வெறியிலிருந்து வெளிக்கிளம்பும் பிணவாடையை மறைத்துவிட முடியாது. எமக்குவப்பில்லாத வரலாற்றுச் சூழமைவில் பேரம் பேச வல்ல எல்லா வலுவையும் இழந்து பேதலித்த நிலையில் பதுங்கிப் பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, தமிழ் மக்களிற்கு ஒளிமயமான வாழ்க்கையை உருவாக்க அரசியலமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வந்து சாதித்துக் காட்டப் போவதாகச் சொல்லுவது போன்ற சிறுமைகளை நாம் கண்டிக்கத் தவறக் கூடாது. எனிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலத்தைக் கடத்துகின்றதே தவிர, எவ்வளவோ அருஞ் சாதனைகளை அந்த இடத்திலிருந்தால் செய்திருப்போம் என்று சொல்லும் மக்களால் இன்னும் தேர்ந்தெடுக்கப்படாதவர்களின் கவர்ச்சிகரமான அரசியற் சொற்பொழிவுகளைப் புலுடா என்று தான் வகைப்படுத்த வேண்டும். ஏனெனில் உலகின் மாபெரும் அதிசயமாக மைத்திரி, ரணில் போன்ற சிங்களத் தலைவர்களின் மனநிலை அசோகச் சக்கரவத்திக்கேற்பட்ட மனமாற்றம் போல மாறினாலும் கூட, சிறிலங்கா அரச இயந்திரம் கட்டமைக்கப்பட்ட விதத்தின் விளைவாக, அவர்களால் தமிழர்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைத் தடுத்து நிறுத்தவியலாது.

சிங்கள பௌத்த பேரினவாத சிறிலங்கா அரச இயந்திரத்தை ஆழக் கீறி, அடித்துத் தகர்த்துச் சிதைத்தெறியாமல், தமிழர்களின் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைத் தடுத்து நிறுத்துவதென்பது கல்லிலே நாருரிப்பதற்கு ஒப்பானது. எனவே, சிறிலங்கா அரச இயந்திரத்தைச் சிதைக்காமல், கட்டமைக்கப்பட்ட இனவழிப்பிலிருந்து தப்பித்து தமது தாயகத்தில் தமது இருப்பைத் தமிழர்களால் உறுதிப்படுத்த முடியாது என்பதே வெள்ளிடைமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் உணர்வுகளை புரிதலிலேயே தாயக விடுதலை தங்கியிருக்கிறது. தெரிதலின் தடுமாற்றந்தணிய உளப்பாங்கினை செம்மையாக்குங்கள்!

## - கொற்றவை -

**வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**

**வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?**

**வெள்ளைநிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**

**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது! - விபுலானந்தர்**

ஒரு மண்ணின் மாண்பு , மொழியின் அடியாழம், அதன் பழக்கவழக்கங்கள், உயரிய பண்புகள், இழப்புகள், ஈகைகள் எதுவென்றாலும், அதன் உண்மையின் உள்ளடக்கம் அம்மண் மாந்தரின் தொன்ம வாழ்வியலிலிருந்து வெளிப்படும் இலக்கியங்களில் எதிரொளி(லி)க்கும். மேற்சொன்ன பாடலின் வரிகள் வெறும் வரிகள் அன்று. கடவுள் என்றாலும் மனிதன் என்றாலும் அந்த அன்பு உள்ளன்பு அவ்வளவுதான். வேறெந்த பொய்யான, போலியான பாசாங்கு பிடித்த அந்நியத் தன்மைகள் எல்லாம் வேண்டாம் என மென்மையாக ஆனால் அதனுள்ளும் ஓர்மத்துடனான மெல்லிய உறுதியுடனும் சொல்லி இருக்கும் அழகுத்தமிழின் அற்புத வரிகள் பலரது மாற்றுப்பார்வையில் உள் நுழைந்து வியாபித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழத் தேசிய அரசின் தென்தமிழீழம் எனவும், இலங்கையின் கிழக்கு எனவும் அழைக்கப்படும் பிரதேசமானது, அம்பாறையுடன் இணைந்த மட்டக்களப்பு தொடங்கி திருகோணமலை வரை பரவி விரிந்திருக்கும் நிலத்தினைக் குறிக்கின்றது. இன்றைய சூழலில் கிழக்கு பற்றி பல விடயங்கள் பேசாப்பொருட்களாகவே இருக்கின்றன. வட-கிழக்கு இணைந்த தாயகம் என்ற அழுத்தம் சுருதி குறைந்து கொண்டு போகுமாப்போல் தெரிகிறது.

அரசியல் பொருண்மிய பண்பாட்டு சூழல் திட்டமிட்ட ரீதியில் மாற்றப்பட்டு அம்மக்களின் மண் அந்நியர்களால் காவு கொள்ளப்பட்டு வரும் நிகழ்வானது, துண்டுச் செய்திகளாகவும், காதோடு மட்டும் கூறும் இரகசியங்களாகவும் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. மக்கள் சரியாகவே சிந்திக்கின்றனர், கவலைப்படுகின்றனர். அவ்வளவுதான். அவர்களால் வேறு என்னதான் செய்து விட முடியும்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே மட்டக்களப்புடன் இணைந்திருந்து 1961 ஆம் ஆண்டு பிய்த்தெடுக்கப்பட்ட அம்பாறை மற்றும் மட்டக்களப்பு பற்றிச் சிறிது பார்க்கலாம்.

நிருவாக இலகு எனும் காரணத்தைக் காட்டி அன்று மட்டக்களப்பிலிருந்து அம்பாறை பிரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. முனைப்புப் பெற்ற சூழ்ச்சி அடிப்படை கொண்ட இனவாத செயற்பாடுகளும், அதற்கெதிரான தமிழ் மக்களின் எதிர்ப்பரசியல் முளைவிட்டுத் தீவிரமாக வளர்ந்த நிலையில், இப்படி வெட்டிப் பிளந்து, இரு மாவட்டங்களாக்கிய செயற்பாட்டினை எப்படித் தமிழர் தரப்பு பார்த்தது? அனுமதித்தது? என்பது புரியாத புதிராகத்தான் இருக்கிறது. பட்டிருப்பு தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டு உள்ளூர் அரசியல்வாதிகளை வாயடைக்கச் செய்த அதே வேளை, வெளியூர் அரசியல்வாதிகளும் சேர்ந்து நோகாமல் விழுந்த அடியில் ஓயாமல் அழுதது என்பது போல் சிங்களத்திற்கு பெரிய சவாலாக இல்லாமலிருந்தது என்பதும் ஈண்டு நினைவிலிருத்த வேண்டியவைதான். அரசியலும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் அன்றும் இன்றும் பாரிய மாறுபாடுகளைக் கொண்டிருக்காவிட்டாலும், இத்தனை பாடுகளைப் பயிற்சிகளாக பெற்றும் மாற்றங்கள் தற்போதும் பெறவில்லை, பெற முயற்சிக்கவில்லை என்பதே கவலைக்குரிய விடயங்களாகத் தொடர்கின்றன என்பதனைக் கூறாமல் இருக்க முடியவில்லை.

வடகிழக்கிற்கு வெளியே அதிகமான குடித்தொகையினை தமிழர்களாக கொண்டிருக்கும் நுவரெலியா மாவட்டத்தை பல நிருவாக சிக்கலுடன், பிரதேச செயலகங்களாகக் கூட பிரிக்காது வைத்துச் செயற்படுத்தி வருகின்றார்கள். காரணம் பிரித்தால் தமிழர்களுக்கு சாதகமாகி விடும் என்பதால் அன்றோ?. ஒரு கண்ணில் வெண்ணெய்யையும் மறு கண்ணில் சுண்ணாம்பையும் பௌத்த சிங்கள பேரினவாதம் முன் வைக்கும் போதெல்லாம் தமிழர் பக்கமிருந்து அழுத்தங்களும் எதிர்ப்புக்களும், நீண்ட தூரப் பார்வை கொண்ட நோக்கங்களும் அருகிக் காணப்பட்டன. காணப்படுகின்றன என்பது மட்டும் கண்கூடு.

இலங்கையின் வரலாறு என்பது மகாவம்சம் என்ற குண்டுச்சட்டிக்குள் குடி கொள்ள விடப்பட்டுள்ளது. சிங்கத்திற்கும் மனிதத்துக்கும் பிள்ளை பிறந்த கதை தொடக்கம் அனைத்தும் திரிபுபடுத்தப்பட்டு, பொய்யுரைகளுடன் எழுதப்பட்டுள்ளன. படிக்க நகைச்சுவையாக, திகைப்பாக இருந்தாலும். இலங்கையின் வரலாற்று நூல் எது எனக் கேட்டால் மகாவம்சம் என்பதே உறுதியான பதில். மிக அண்மையாக எமைக் கடந்து போன காலத்திலிருந்த, நாம் கண்களால் கண்ட சாட்சியங்களான தமிழர்களின் ஆளுமைகளின் எச்சங்கள் அனைத்தும் இல்லாதொழிக்கப்பட்டு விட்டன. எஞ்சியவைகளைக் களவாகச் சிதைக்கின்றனர். இருக்கும் என நினைப்பவைகளை, கிண்டாமல் கிளறாமல் வைத்திருக்கின்றனர். தற்போது இரவோடு இரவாகப் புதைத்து விட்டுத் தோண்டி எடுக்கும் பல நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. இன்று சிறிலங்கா தொல்பொருள் மையம் சிங்கள பௌத்த பேரின பிக்குகளின் கட்டுப்பாட்டினில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் அறிவோம். அன்று பரணவிதாரன சொன்னது தான் ஆய்வு என்பதை வழிமொழிந்தவர் எம்மவர் இந்திரபாலா. எனவே தான் இலங்கைத் தீவின் தமிழரின் காலம் அவர் தம் இருப்பு தொடர்பான அனைத்தும் கேள்விக்குறிகளாகவே தொக்கி நிற்கின்றன. அதையும் தாண்டி மறைக்க, மழுங்கடிக்க முடியாமல் சில விடயங்கள் மேவி நின்று சில உண்மைகளை எமக்கு வெளிக்காட்டிக் கொண்டு தான் இருக்கின்றன.

அந்த வகையில் கிழக்கு மாகாணத்திற்கு என நீண்டதும் தொன்மம் கொண்ட தனித்துவமானதுமான வரலாறு உள்ளது என்பது வெள்ளிடை மலை. அந்த வகையில் பெருங்கற்கால பண்பாடு, பிராமி எழுத்துக்களுடனான கல்வெட்டுக்கள் என்பன மிகத் தொன்ம சின்னங்களாக இருக்கின்றன. ஈமத்தாழி , கற்கிடை அடக்கங்கள், கருஞ்செம் கலவோடுகள் என பல பக்கங்களிலும் பரவிக்கிடக்கின்றன. கரடியனாறு, பளவெளி, வாகரை, கதிரவெளி, மண்டூர் கும்புக்கன் ஓயா, பாணமை மற்றும் உகந்தை ,சங்கமன்கண்டி என ஊர் பெயர்களை அடுக்கி கொண்டே போகலாம். பரணவிதாண வெளியிட்ட இலங்கை (கல்வெட்டுக்கள்) முதலாம் தொகுதியில் இலங்கை முழுவதும் இனங்காணப்பட்ட *1234* கல்வெட்டுக்களில், கிழக்கின் கல்வெட்டுக்கள் *182* எனவும், அதில் *16* கல்வெட்டுக்கள் திருகோணமலை மாவட்டத்திற்கு உரித்துடையன என்றும் ஏனைய *166ம்* மட்டு, அம்பாறைக்குரியன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று என்ற இடத்தில் கிடைக்கப்பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுத் தகவல்களின் படி சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் வாழ்ந்து வந்தமைக்கான தகவல்கள் அடங்கியிருக்கின்றன. பல தகவல்கள் மறைப்புகளுக்கு பின்னால்,பீறிட்டு எழும் உண்மைகளை மறைக்க முடியாதவிடத்து ஏற்றுக்கொண்டாக வேண்டிய நிலையும் ஏற்பட்டிருப்பதையும், அதன் பின்னால், அவ்விடங்களைத் திட்டமிட்ட வகையில் சிதைப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பதையும் நாம் ஊகிக்க முடிகிறது.

இப்பிரதேசங்களில் இன்றும் கூட பொதுவாக வைதீக சமயத்தினை மேல் தூக்கும் செயற்பாடுகளும், அவற்றைத் தத்தெடுத்துக் கொண்டு அது தான் தமிழரின் பண்பாட்டுக் கூறு என ஒழுகும் ஓர் மாயை மயக்கம் இல்லாமல் இருப்பதனைத் தொட்டுக் காட்ட வேண்டும். தமிழ் நாட்டையொத்த குல தெய்வ வழிபாட்டு முறைமை விரவியும் பரவியும் காணக்கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக கண்ணகி வழிபாட்டு முறைமை முக்கிய இடத்தினை வகிக்கின்றது. சோழ மண்டலக் கரையிலுள்ள காவிரிபூம்பட்டினத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட கடல் வழிப்பயணங்களினூடாக ஆதி இரும்புக்கற்காலத்துக்குரிய பண்பாடான பெருங்கற்பண்பாடு தோன்றியது என ஆய்வுகள் கூறுவதை, அம்மண்ணில் நிலவும் கண்ணகி வழிபாட்டு முறைமையினை நோக்கின் விளங்கிக் கொள்ள முடியும். ஆய்வுகள் என்பன இனத்துவ மேலாண்மை மற்றும் பல நெருக்குவாரங்கள், அறிவியல் வளர்ச்சிகளிலும் தங்கியுள்ளன. தமிழரின் தொன்மம் தமிழ் நாட்டிலும் சரி எம் நாட்டிலும் சரி திட்டமிட்ட ரீதியில் மறைக்கப்படுகிறது. ஆழிப்பேரலை அனுபவங்களுக்குப் பிறகு தமிழ்நாட்டுடனான தெடர்புகள் கடல் வழி மட்டுமே என்பதை மறுதலித்து, தரை வழி இணைப்பு இருந்தது என்ற வாதத்தினை உறுதி செய்கிறது.

வரலாற்று ரீதியான மரபு சார்ந்த பெரும் சிறப்புக்களைக் கொண்டிருக்கும் அம்மண்ணில் பேசப்படும் மொழியில், தமிழ் கூறும் நல்லுலகத்திலிருந்து மறைந்து விட்ட சொற்கள் விரவிக் கிடக்கின்றன. இன்றும் அவர்கள் பேசும் மொழியில் தனித்தமிழ் ஒருவித ஏற்ற இறக்கத்துடனான ஓசை இருப்பதையும், வட்டார வழக்குகள் இடத்திற்கு இடம் மாறுபட்டாலும், தூய தமிழ்சொற்களாக இருப்பதையும் கிராமங்களில் காணக்கூடியவனாக இருக்கின்றன. ஒவ்வொரு ஊரின் பெயரும் தமிழ் மணத்துடனான காரணப்பெயராகவே பெரும்பாலும் இருக்கின்றது. எழுவான் கரை, படுவான் கரை என பொழுது புலரும் பகுதியையும், பொழுது சாயும் பகுதியையும் அழகு தமிழில் தொன்று தொட்டு அழைத்து வரும் அழகே அழகுதான். இவை சிறு எடுகோள்கள் தான். மட்டக்களப்பாரின் "நாவிலும் கா தோளிலும் கா" என்பார்கள். "கா" வின் சிறப்பு சிலாகிக்கப்பட்டிக்கின்றது. இயல்பாக அன்பான மொழியில், மனே, மகள் மகன் எனச் சொல்லுக்குச் சொல்லு அழைக்கும் பண்பு, அதேபோல் விருந்தோம்பும் குணம் என்பன வெளிமாவட்டத்துக்காரர்களை வியக்கவே வைக்கும். ஏழ்மையால் காவு கொள்ளப்பட்ட கிராமச் சூழல் என்றாலும், இருப்பதைக் கொண்டு வந்தவருக்கு வயிறு நிறைக்கும் அவர்களின் பண்பினைத் தட்டிக்கழிக்க முடியாத திணறலை, அனுபவித்தவர்கள் உணர்வார்கள்.

தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கூறுகள் எவை எனத் தெரியாத பலர், தமிழ்த் தேசியம் என வாய்கிழியக் கத்தி வருவதும், தமிழ்த் தேசியத்தின் பால் உள்ளடக்கப்பட வேண்டிய, இழந்து போன எமது அரசியல் பெருண்மிய பண்பாட்டு மரபுகளைக் கட்டமைத்துத் தமிழ்த் தேசியத்தின் மூலம் தமிழ் மக்களை இணைக்க எந்த வேலைத் திட்டத்தினையும் செயற்படுத்தாமல் கூட்டத்தில் கோவிந்தா போட்டுக் கொண்டிருக்கும் வேளை, தமிழ்த் தேசியமோ எதுவோ அதற்கான வார்த்தைகளின் பொருள், பம்மாத்துப் பற்றிச் சிந்திக்காமல், ஆனால் பேரினவாதத்துக்கு விலை போகும் யாரையும் 2009 ற்குப் பிறகும் அதுவும் கருணா, பிள்ளையான் இன்னும் பல நாசகார கருத்துருவாக்கங்களை உமிழ்ந்தவர்களைக் கடந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் எப்படிப்பட்டதாக இருந்த போதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அன்று சுட்டு விரல் காட்டினார்கள் என்பதற்கும், தமிழர் என்ற ஒற்றுமைக்கும் இன்று வரை நாடாளுமன்றம் அனுப்புகின்றனர். அது அவர்களின் கொள்கை வழி வந்த தனித்துவத்தினை மேல்நிறுத்திக் காட்டுவதை பாராட்டாதிருக்க முடியவில்லை.

கிழக்கின் தனித்துவமான செல்வாக்கு மிக்க விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைத்துவமாக இருந்த, கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் என்பவரை தூக்கி வீசும் மன நிலைக்கு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வந்தார்கள் எனின், அதற்குக் காரணம் அவர்களின் ஆழமான வட-கிழக்கு இணைந்த தமிழர் நிலம் என்ற இறுதியான உறுதி கொண்ட எண்ணங்களே. பிளவிற்குப் பின்னரான காலங்கள் மற்றும் தேர்தல் காலங்களில் சென்று, அவர்களின் கருத்தறிந்த போதெல்லாம் அவர்கள் எந்தவித தயக்கமும் இல்லாமல் "நாம் தலைவர் பிரபாகரனை மதிக்கின்றோம். அவர் சொல்வதைத் தான் கேட்போம். தமிழர் ஒற்றுமைக்காகவும் எமது துன்ப தயரங்களை போக்குவதற்காகவுமே எம் பிள்ளைகளைத் தூக்கிக் கொடுத்து விட்டு இன்று கால் வயிற்றுக் கஞ்சி ஊற்ற பிள்ளைகள் இல்லாமல் தவிக்கின்றோம்" என்பவர்களிடம், "கருணா அப்படி சொல்கிறார். அவர் உங்கள் மண்ணைச் சேர்ந்தவர் அது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்"எனக் கேட்ட போது, அவர் புலியோடு இருக்கும் போது எமது தலைவராக ஏற்றுக் கொண்டோம். ஆனால் இப்போது அவரை நாங்க வெறுக்கிறோம்" என்றே பதில்கள் வந்தன.

இக்கருத்துக்கள் ஒன்றும் நகர்ப்புறத்தாரின் கருத்துக்கள் அல்ல. அதற்கு அப்பால், குடும்மலை, வாகரை, கொக்கட்டிச்சோலை, வாழைச்சேனை, மத்தியமுகாம், வீரமுனை, தம்பிலுவில், சேனைக்குடியிருப்பு என்பன போன்ற இடங்களில் அமைந்துள்ள குக்கிராமங்களிலிருந்து வந்தவை தான். ஊடகங்களின் பார்வைகள், அரசியல்வாதிகளின் அரசியல் கலந்த அக்கறை, எதுவுமே அற்ற, இந்த மக்களின் எண்ணங்கள் இப்படித்தான் இருக்கின்றன. ஒருபுறம் சிங்களத்தாலும், மறுபுறம் முஸ்லீம்களாலும் அடியும் இடியும் பட்ட அந்த மக்களுக்குப் பட்டறிவு பாடஞ்சொல்லித் தந்ததோடு மட்டுமல்லாது, அவர்களின் தொன்ம மரபுக் கூறுகள் என்பனவும், இணைந்தே அவர்களைச் சிந்திக்கவும் செயற்படவும் வைக்கின்றன என்று சொன்னால் மிகை இல்லை. இல்லாமையும் ஏழ்மையும், துன்பங்களும், ஏக்கங்களும் அவர்களை நொந்து போக, நிலை குலைய வைத்தாலும், அன்பான அப்பாவித்தனமான அம்மக்களின் தெளிவும் உறுதியும் மேன்மையானது.

தான் தன் குடும்பம் என வட்டத்தினைக் கீறி சுய நலமாக சிந்திக்கத் தெரியாதவர்கள் வாழும் பூமியது. அதனால் தான் வயிற்றுப் பசியால் வாடி வந்தவன் எல்லாம் வயிறு முட்டத் தின்று விட்டு, அங்கு தங்கித் திருமணம் செய்து குடியும் குடித்தனமுமாகி விட்டான் என்றால், அவர்கள் பாயில் ஒட்ட வைத்து விட்டார்கள் என நக்கலடிக்கும் நிலையொன்று உள்ளது. முழங்கையைப் பிடித்து இருங்கள் சாப்பிட்டு விட்டுச் செல்லலாம் என்றும், தேநீர் குடிக்கின்றீர்களா? அரிசி போடட்டா? என்றும் விருந்தினரைப் பார்த்துக் கேள்வி கேட்கும் தமிழ்ச் சமூகங்களின் மத்தியில், அவர்களின் பண்பு மிக வித்தியாசமானதாக இருப்பதும், மற்றவர்களைக் கவர்ந்து விடுவதுமே இதன் உள்ளர்த்தம் என்பதைப் புரிவதற்குப் பரந்த மனப்பாங்கும் திறந்த உள வெளிப்பாடுகளும் வேண்டும் என்பது மிக முக்கியமானது.

போர்க்காலச் சூழலில், உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்கள், நிலமிழப்புக்கள் ஏற்பட்ட போதெல்லாம் நாளை விடிவு வரும் எனப் பொறுத்துக் கொண்டனர். எத்தனை கொத்துக்கொத்தான மனிதப் படுகொலைகள்? காணாமல் போனவர்கள் எத்தனை பேர்? வீரச்சா என சா காணாத வீடில்லை என்றளவிற்கு அவர்களின் இழப்புக்கள், ஈகைகள் எண்ணிலடங்காதவை.



சாதாரணமாக சில கிராமங்களில் ஒரு வீட்டில் நான்கு தொடக்கம் ஐந்து பேர் வரை காணாமல் போயிருப்பர் அல்லது சாவினைத் தழுவியிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனையும் நடந்து கொண்டிருக்கும் போதும் சங்க இலக்கியத்தில் வருவது போல் "நெற்றியில் வீரத்திலகமிட்டு" தமது பிள்ளைகளைப் போருக்கு அனுப்பி வைத்தார்கள். இறுதியில், உலகத்தின் இரண்டகம் ஊர் கருங்காலியுடன் இணைந்து அத்தனை கனவுகளையும் சிதறடித்தது. எத்தனையோ வார்த்தை விளையாட்டுக்களால், பிளவுபடுத்த முயற்சித்தும் அந்த மக்கள் சளைக்கவில்லை. திண்ணைப்பேச்சு வீரர்களாலும், நடப்புக்களை அறியாதவர்களாலும், காழ்ப்புணர்வாளர்களாலும், ஒரு தனி மனிதனின் செயல்கள் அவன் சார்ந்த பிரதேசத்தை, அந்த மக்களைத் தூற்றிப் பேசிச் சொல்லம்புகளால் மனதை சல்லடைக்கண்களாக துளைத்த போதும், "தேசியத்தலைவன்" என்ற அந்த தானைத் தலைவன் மீது வைத்திருந்த நம்பிக்கை, பற்று என்பதால் தாயகவிடுதலைக்காக பலர் அதுவும் பெண்கள் உட்பட பலர் புதிதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார்கள் என்பதை இங்கே அழுத்தமாகக் குறிப்பிட்டாக வேண்டியது கட்டாயக் கடமையாகும்.

நினைத்துப் பார்க்க முடியாத பல சோக நிகழ்வுகள் நிகழ்ந்தேறி விட்டன. இழப்பதற்கொன்றுமில்லை என்ற நிலையில் இருக்கும் அந்த மக்களின் துன்பங்கள், துயரங்கள் சொல்லில் அடங்கா. கொள்ளி வைக்கத்தான் பிள்ளை வேண்டும் என்பார்கள். ஆனால் வயிற்றில் எரியும் கொள்ளியை அணைக்க யாருமில்லை. பெற்றதை மண் விடுதலைக்காக அள்ளிக் கொடுத்து விட்டுக் கால் வயிற்றுக் கஞ்சிக்கு அல்லல் படும் அவலம் ஆயிரமாயிரம் வறுமையால் வாடும் அவர்கள் நிலை மட்டுமல்ல. அவர்களின் இழப்புக்கள், ஈகைகள் வெளி உலகத்திற்குத் தெரியவில்லை. பலர் தெரிந்துகொள்ளவும் விரும்பவில்லை. எத்தனை துன்பங்கள் கடந்தாலும் இளசுகளாகட்டும் முதுமைகளாகட்டும் தமது ஓர்மத்தை மட்டும் கிஞ்சித்தும் விட வில்லை. நீறில் பூத்த நெருப்பாக அவர்களின் மனதில் கனன்று கொண்டிருக்கும் தீயானது எரி பற்று நிலையை அடையும் என்பது மட்டும் திண்ணம்.

அவர்களின் கண்ணீராலும் செந்நீராலும் கற்காலம் தொட்டு இன்று வரை காப்பாற்றப்பட்டு வந்த மண் பறிபோய்க் கொண்டிருக்கிறது. கறையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருக்கும் கதையாகி வருகின்றது. எது எப்படி நடந்தாலும் நமது குறி பட்டம் பதவிகள் தான் என நாற்காலி கண்டு கொண்டிருக்கும் அரசியல்வாதிகள், சிங்களத்தின் இடியப்பச்சிக்கலுக்குள் மாட்டுப்பட்டு கூலிக்கு மாரடிக்கும் அரச உயர்தரப்புக்கள், ஓடேந்தி நக்கித்திரியும் கருங்காலிகள் என அத்தனை தரப்புக்களின் சின்னத்தனங்களினால் வெறுப்புற்றிருக்கும் அந்த மக்களின் உயிர்கள் இன்னும் உணர்வுகளைத் தாங்கி நிற்கின்றன என்பதை அவர்களுடன் நெருங்கி நின்று அவாவுபவர்களுக்கே புரியும். உள்ளக்கமலத்துடன் இயற்கையோடு,இயல்போடு, இலகு தமிழோடு வாழும் அவர்களை மிக நுணுக்கமாகப் புரிந்து கொள்ளல் வேண்டும்.! அந்தப் புரிதலும் தெரிதலுமே நாளைய தமிழீழத் தாயகத்தை இறுதியாக உறுதி செய்யும்!

அரசியலில் நீங்கள் தலையிடவில்லை
என்றால் அது உங்கள் வாழ்க்கையில்
தலையிடும்
–லெனின் –

தோல்வியை ஒப்புக்கொள்ள தயங்காதே,
அதிலிருந்து கற்றுக்கொள்ள
வேண்டியது நிறைய இருக்கிறது.
–லெனின் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் ஒப்படைத்த போராட்டத்தின் தற்போதைய நிலை

## - ஆதவன் -

**2008 காலப்பகுதிகளில் போரானது உக்கிரத்தை எட்டியிருந்த நிலையில் விடுதலைப்புலிகள் நிருவாக மற்றும் பன்னாட்டுச் செயற்பாடுகளில் பல முக்கியமான நகர்வுகளைச் செய்திருந்தார்கள் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையானது புலம்பெயர் இளையவர்களின் கைகளுக்கு மாற்றப்படுகிறது என்று தமிழீழ தேசியத்தலைவரே சொல்லுமளவுக்கு நகர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன..**

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் முக்கியமான அரசியல் பணிகள் புலம்பெயர் மக்களிடம் கைமாற்றப்பட்டு பத்து வருடங்கள் கடந்துள்ள நிலையில் உண்மையில் புலம்பெயர் மக்கள் அல்லது புலம்பெயர் அமைப்புகள் அந்தப் பணியைச் சரிவரச் செய்திருக்கின்றனவா என்பதை மிக ஆழமாக பார்க்க வேண்டிய தேவை போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு இருக்கிறது.

புலிகளால் ஒன்று சேர்க்கப்பட்டிருந்த மக்கள் இன்று அங்கயன், விஜயகலா, சந்திரகுமார், கஜேந்திரகுமார் என்று குழுப்பிரிந்து போகக் காரணம் புலம்பெயர் அமைப்புக்கள்தான் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

### பணியில் இருந்து தவறிய அமைப்புக்கள்

தமிழீழ விடுதலைப்போரின் அரசியல் பணியைச் செய்யுமாறு புலிகளால் பணிக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புகள், தமக்கு கொடுக்கப்பட்ட பணியிலிருந்து விலகி தத்தமது சொந்த நலன்களுக்காக சிறிலங்காவில் கட்சி அரசியல்களை ஆதரிக்கும் மிக சிறுமையான வேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர். 2009 வைகாசி 18 வரைக்கும் தமிழீழ விடுதலையை நோக்கி போராட்டம் நடாத்திய அமைப்புகள் த.தே.கூ ஆதரவு, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆதரவு என்ற நிலைப்பாடுகளில் முட்டி மோதிக் கொள்வது தமிழீழ மக்களை முட்டாள்களாக்குவது மட்டுமல்லாமல் சிறிலங்காவையும் திருப்திப்படுத்துகிறது.

த.தே.கூட்டமைப்பை ஆதரிப்பதாக ஒருசாரார், தமிழ்த்தேசிய கூட்டமைப்பை இல்லாமல் செய்து அதன் மூலம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸைக் கொண்டுவர வேண்டும் என்று ஒரு சாரார், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மூலம் பிரிக்கப்படும் த.தே.கூட்டமைப்பின் வாக்குகளால் தமக்கும் எப்படியாவது வாய்ப்புக் கிடைக்கும் என காத்திருக்கும் அங்கயன், விஜயகலா, சந்திரகுமார் தரப்பை ஆதரிக்கும் ஒருசாரார் என்று புலம்பெயர் அமைப்புகள் தத்தமது சொந்த நலன்களுக்கு ஏற்றாற்போல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் சில அரசியற் பிரிவுகள் மற்றும் சமாதான செயலகத்தால் கையாளப்பட்டு வந்த சில இணையத்தளங்கள், பத்திரிகைகளை தத்தமது செல்வாக்குகளிற்கு ஏற்றாற்போல் கையகப்படுத்திக் கொண்ட இந்த அமைப்புகள், இந்த ஊடகங்கள் மூலம் சொந்த நலனிற்கேற்றாற் போல் விசமத்தனமான செய்திகளைப் பரப்பி வருகின்றனர். இந்த அமைப்புகளைக் கையாண்டவர்கள், இந்த இணையங்களைக் கையாண்டவர்கள் யாருமே இப்போது இல்லை என்றும் புலிகளின் எந்தவொரு கட்டமைப்பும் இப்போது இயங்கு நிலையில் இல்லையென்று நினைத்துக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டு பால்குடிக்கிறார்கள் இந்த விசமிகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்திரனைத் தூக்கிவிட்டு கஜேந்திரகுமாரைக் கொண்டுவந்தால் சிறிலங்கா அரசும் ஐ.நாவும் பயந்து போய் தமிழர்களுக்கு தீர்வைத் தந்துவிடுவார்கள் என்பது போன்றதான அடிமுட்டாற்றனமான பிரச்சாரங்களை சில அமைப்புகளும் அதன் இணையங்களும் செய்துவருகின்றன.

மக்களை ஒரே அணிக்குள் வைத்துக் கொண்டு அடுத்தகட்ட வேலைகளை மிக வேகமாகவும் விவேகமாகவும் செய்ய வேண்டும் என்ற கட்டளை புலிகளால் புலம்பெயர் அமைப்புகளுக்கு கொடுக்கப்பட்ட நிலையில் அந்தப் பணியில் இருந்து தவறி, தாயகத்தில் மக்களை கட்சி ரீதியாக பிரிக்கும் இழி வேலைகளை செய்து வருகின்றன.

**சில புலம்பெயர் அமைப்புகளின் கள்ள உறவுகள்**

புலம்பெயர் அமைப்புகளின் பொறுப்பாளர்களில் பெரும்பாலானோர் சிறிலங்கா அரசியல் சாசனத்துக்கு உட்பட்ட கட்சிகளை ஆதரிக்கும் நிலைக்கு வந்துள்ள நிலையில், தவிர்க்க முடியாத கண்காணிப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர். இந்தியாவின் அதிகாரிகளுடன் சிலர் ரகசியமாகவும் சிலர் வெளிப்படையாகவும் கூட உறவுகளை வைத்துள்ளனர். கஜேந்திரகுமார் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் தமிழருக்கு விடிவு கிடைத்துவிடும் என பிரச்சாரம் செய்யும் புலம்பெயர் அமைப்புகளைச் சேர்ந்த சிலரின் வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றி காக்கையிடம் நிறையத் தகவல்கள் இருக்கின்றன. ஆதாரப்படுத்த முடியும். ஆனால் எல்லாவற்றிற்கும் உரிய நேரம் இருக்கின்றது. த.தே.கூட்டமைப்பை ஆதரிக்கும் சில புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகள் இரகசியமாக இந்தியாவிற்குச் சென்றுவரும் சம்பவங்களும் நடக்கின்றன.

இந்தியாவின் தேவைக்காக தாயகத்தில் மக்களை கட்சி ரீதியாக பிரித்துவிட வேண்டும் என்ற நோக்கில் செயற்படும் புலம்பெயர் அமைப்புகள் அதன் ஊதுகுழல் ஊடகங்களின் செயற்பாடுகள் இப்படியே தொடர்ந்து செல்ல அனுமதிப்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிர்காலத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும்.

கடந்த பத்துவருடங்களாக தமிழீழ விடுதலையை நோக்கி அடுத்த கட்ட வேலைத்திட்டத்தை நகர்த்தாமல் மக்களை குழுக்குழுவாக பிரிக்கும் இழிவேலையைச் செய்துகொண்டிருக்கும் தனிநபர்கள், அமைப்புகள், ஊடகங்கள் குறித்து கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கான காலம் கனிந்துவருகிறது.

தாயகத்தில் வாழும் அங்கவீனமுற்ற போராளிகள், குடும்பங்களை இழந்து அநாதரவாய் நிற்கும் போராளிகள், நீதிமன்றுகளில் விசாரணைகளைச் சந்திக்கப் பணமின்றி சிறைச்சாலைகளில் வாடும் போராளிகள், விடுவிக்கப்பட்டாலும் வெளியில் வரமுடியாமல் சிறைகளிலேயே சகாப்தங்களாக வாடும் போராளிகளை கவனத்தில் எடுத்து அவர்களுக்கான அடிப்படை வாழ்வாதார கட்டுமானத்தை ஏற்படுத்த வேண்டிய புலம்பெயர் அமைப்புகள், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தலில் வெல்ல வேண்டும் சிறிதரன் தேர்தலில் வெல்ல வேண்டும் என்று பணம் அனுப்புவது தமிழினத்திற்குச் செய்யும் துரோகமான செயலே.

**அனுமதியின்றி புலிகளின் இலட்சினைகளை பாவிப்பது தண்டனைக்குரிய குற்றம்**

புலிகளின் பெயரால் அறிக்கைகள் விடுவது, கௌரவங்கள் வழங்குவது அதிகரித்துள்ளது. புலிகளின் பெயரால் வெளியிடப்படும் அநாமதேய அறிக்கைகள் குறித்து கவனத்தில் எடுக்கத் தேவையில்லை. ஆனால் நன்கு அறியப்பட்ட யாரால் நடாத்தப்படுகிறது என்று அறியப்பட்ட ஊடகங்களில் புலிகளின் பெயரால் வெளியிடப்படும் அறிக்கைகள் பிரசுரிக்கப்படுகின்றன.

தமிழீழத் தேசியத் தலைவரால் வழங்கிக் கௌரவிக்கப்படும் "மாமனிதர்" கௌரவிப்பு இராணுவ நடவடிக்கையில் அல்லது அந்தப்பணியில் இருந்தபோது வீரச்சாவடைந்தவர்களுக்கு வழங்கப்படும் "இராணுவ தரநிலைகள்" கட்சி அதரவு அல்லது தனிநபர் மீதான ஆதரவு அறிக்கைகள் என புலிகளின் இலட்சினை பொறித்த அறிக்கைகளை சில இணையங்கள் வெளியிட்டுவருகின்றன.

மேலே சொன்னது போல இந்த இணையங்களை நடாத்தும் நபர்கள் இந்தியாவின் அதிகாரிகளுடன் நெருக்கமாக உள்ளார்கள். அவர்களின் நோக்கம் என்ன என்பதை இத்தனை படைக் கட்டுமானங்களை கட்டியெழுப்பிய புலிகள் புரிந்து கொள்ள மாட்டார்கள் என நினைத்தால் அது அவர்களின் முட்டாற்றனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புலம்பெயர் இளையவர்களே!

புலம்பெயர் இளையவர்களே! கட்சி ஆதரவு அல்லது தனிப்பட்ட ரீதியிலான அரசியல்வாதிகளை ஆதரிக்கும் அமைப்புகள் அல்லது தனிநபர்களிடம் இருந்து விலகுங்கள். உங்களுக்குள் சிறு சிறு குழுக்களாக இணைந்து தமிழீழ விடுதலைப்போராட்டம் குறித்துப் பேசுங்கள். விவாதியுங்கள். புலிகளின் தொழினுட்பங்களையும் இப்போது வளர்ந்திருக்கும் தொழினுட்பங்களையும் குறித்து நிறையப் படியுங்கள். வாய்க்கு வந்தபடி ஒருவரை ஒருவர் துரோகிப் பட்டம் கட்டும் புலம்பெயர் அமைப்புகள் ஊடகங்கள் மற்றும் கட்சி அரசியல் ஆதரவாளர்கள் குறித்து அக்கறை செலுத்தாதீர்கள். தமிழீழ விடுதலைப்போரின் அடுத்த கட்ட வேலைத்திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடும் நபர்கள் அதற்கான விலையை விரைவில் செலுத்தியே ஆகவேண்டும்.

அடுத்தகட்ட அரசியலை எப்படிச் செய்யலாம் என்பது பற்றி மட்டும் சிந்தியுங்கள். தாயகத்தில் வாழும் போராளிகளுக்கு பொருளாதார ஆதரவு தரக்கூடிய தொழில் வாய்ப்புத் திட்டங்கள் குறித்து ஆராயுங்கள்.

ஆயுதப்போராட்டம் தோற்று மீண்டும் ஆயுதப் போராட்டத்தை அரசியற் போராட்டத்தை நடத்தி வெற்றிகண்ட வரலாறுகளை தேடிப்படியுங்கள். ஒன்றிணையுங்கள்.

விதைத்தவன் உறங்கலாம். ஆனால் விதைகள் ஒருபோதும் உறங்குவதில்லை.
– பிடல் காஸ்ரோ –

நீங்கள் என்னைத் தண்டியுங்கள், அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. ஏனெனில் வரலாறு எனக்கு நீதி வழங்கும்
– பிடல் காஸ்ரோ –

இறந்த காலத்திற்கும் வருங்காலத்திற்கும் இடையே மரணத்திற்கான போராட்டம் தான் புரட்சி
– பிடல் காஸ்ரோ –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறம்சார் படைப்புவெளியை பொருளுடையதாக்கும் மண்டியிடாத வீரம் : ஒரு பார்வை

- செல்வி -

**தொன்மங்களின் இருப்பியலுக்கான போராட்டத்தில் தொன்ம அடையாளங்களின் இருப்பியல்கள் கேள்விக்குள்ளாகும் முரண்நிலையில் ஈழத்தமிழர்களின் வாழ்வியலில் இருத்தலியத்திற்கான முயலுகைகள் முடிவிலியாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் இந்த நிலைமாறுகாலச் சூழலில் தோல்விகளைப் பற்றிய பேசுபொருட்களைக் கருக்களாக்கி, எமக்கான அரசியல் வெளியினை வெறும் வார்த்தைக் காற்றுகளால் நிரப்புவதை விடுத்து, தோல்விகளின் பாடங்களிலிருந்து வெற்றிக்கான பாடத்திட்டங்களை வரைந்து, எமது வரலாற்றை மீள எழுதவேண்டிய தேவை எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.**

வெற்றுவெளியில் வெறும் சொற்கோலங்களைப் போடவேண்டிய திண்மையான வரலாறு இல்லாத இனமல்ல நாம். போர்க்களங்களின் தடங்கள் விரவிக்கிடக்கின்ற நீண்ட நெடிய வீர வரலாறு எமக்கென்று பதியப்பட்டிருக்கிறது. போரின் விளைவுகளின் நிகழ்தகவுகள் வெற்றிக்கும் தோல்விக்கும் சமமாக பகிரப்பட்டிருக்கின்றபோதிலும், வெற்றி தான் கொண்டாடுவதற்குரியதாக இருக்கின்றது. வீரமென்பது வெற்றிபெறுதலை மட்டுமே குறிப்பதாகாது. தோல்வியின் வீழ்ச்சியிலிருந்து எழுவதும் வீரம் தான். எந்த சந்தர்ப்பத்திலும் எதிரியிடம் விழுந்துவிடாததும் வீரமாகவே கருதப்படுகிறது. வரலாற்றின் வெளிகளில் எம் இனம் மண்டியிடாத தடங்களை இப்பத்தி பதிவுசெய்கின்றது.

புறநானூறு என்கின்ற சங்கத் தமிழரின் வரலாற்றியலானது, போரியலை மட்டும் பேசவில்லை. போர் சார்ந்த ஒழுக்கவியலையும் தமிழரின் மறத்தினையும் போராற்றலையும் தன்னுள்ளே பொதிந்து வைத்திருக்கின்றது. மொழியின் இலக்கணங்களுடன் படைக்கப்பட்டிருக்கும் தமிழ் இலக்கியங்கள் கருத்தியலின் களங்களாகவும் இருந்திருக்கின்றன. படைப்பின் வெளியீட்டுத்தன்மையானது படைப்பாளியின் பிரதியை அதன் காலப் பரிமாணங்கள் கடந்தும் நுகர்வோன் நகலெடுப்பதிலேயே புலப்படும். தமிழர் வரலாற்றின் பிரதிகள் மறத்தைப் பேசுபொருளாகக் கொண்டவை. வாசிக்கப்படவேண்டியவை.

வெற்றிக்கும் வீரமரணத்திற்குமிடையிலான வெளியில் எந்தவொரு உப பிரிவும் இருக்கவில்லை. போரில் தோற்றானாயினும் தோற்பதற்குரிய அறிகுறிகள் வருமிடத்தும் அந்த வீரன் தன்னைத்தான் மாய்த்துக்கொள்கிறான். வீரனுடைய இறப்பும் அவனுடைய வீரமும் அவனைச் சார்ந்தோராலும் மன்னனாலும் கொண்டாடப்படும் விடயங்களாக இருந்திருக்கின்றன. மாறாக, புறமுதுகிட்டாலோ அல்லது தோற்றுப்போய் திரும்பினாலோ இனத்தின் சாபக்கேடாக நோக்கப்படுகிறான்.



தொன்மங்களின் புனைவுகளை நியமங்களாகக் கருதமுடியாதெனினும் சம்பவங்களாகக் கருதலாம். மறத்தினாலும் மறத்தின் இயங்கியலாலும் கட்டியமைக்கப்பட்டிருக்கும் தமிழர் வாழ்வியலில் போர் என்பது மகிழ்வான கருத்தாக்கத்தை மட்டுமே கொடுத்திருக்கிறது. போருக்குப் போகும்பொழுதே எதிரிக்கு வஞ்சினம் உரைப்பதான பாடல்கள் பல காணப்படுகின்றன. வஞ்சினம் உரைத்தலென்பதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியலின் பின்னால், தீராக்கோபமும் பழிவாங்கும் உணர்ச்சியுமே இருந்திருக்க முடியும். மன்னன் வஞ்சினமுரைப்பதன் பின்னாலுள்ள அரசியல் அவன் தன்னையும் தன்சார்ந்த படையையும் வெற்றி என்ற இலக்கை நோக்கிச் செலுத்த விளைகின்ற ஆழ் உளவியலே ஆகும். பகைவனால் தன்னுடைய வீரமும் படைபலமும் கேள்விக்குள்ளாக்கப்படுதல் கண்ட அரசனுக்குத் தனது படைத்திறத்தையும் வெற்றி என்ற ஓர்மத்தையும் முரசறைவிக்கவேண்டிய தேவை இருந்திருக்கிறது. போரில் பகைவரை வெல்லமுடியாதவிடத்து களத்திலேயே தங்கள் உயிரை விட்டு வரலாற்றில் நிலையாகிவிடுவார்கள். இவ்வாறு போர்க்களத்தில் உயிரை மாய்த்துக்கொள்வது அவிப்பவி என்று இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



தமிழர்களின் வீரத்திற்குக் குறியீடாகச் சுட்டப்படும் புலியானது அதன் வீரத்தினால் மட்டுமல்லாது, வெஞ்சினம் கொண்டு பகைமுடிப்பதிலும் தமிழர்களை ஒத்திருக்கின்றதென்ற வீரம் சார் வகைப்பாடு புலவர்களால் முன்நிறுத்தப்பட்டிருக்கின்றது. வீரம் என்பது வெற்றி என்பதையும் தாண்டி, மானத்தைச் சார்ந்ததாகவும் பதியப்பட்டிருக்கிறது.

'கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென

அன்றவன் உண்ணா தாகி வழிநாள்

பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து

இருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்'

( புறம். 190)

ஒரு புலி தான் தாக்கிய பன்றியொன்று இடப்பக்கம் வீழ்ந்ததால் மான உணர்ச்சியால் தன் செயலுக்கு நாணி அதனை உணவாகக் கொள்ளாமல் யானை ஒன்றைத் தாக்கி வலப்பக்கத்தில் வீழச்செய்து பசியாறியது என உவமையாகக் குறிப்பிடப்படுகின்றது. அந்தப் புலி போன்ற ஒருவனையே தன் தோழனாக வரிக்கமுடியும் என பொருண்மொழிக்காஞ்சி கூறுகிறது. எதிர்ப்புக்கு மட்டுமல்ல நட்புக்கும் வீரத்தினை அளவுகோல்களாக வைத்திருந்தது எம் இனம் என்று பெருமைப்படலாம்.

போருக்குச் செல்லக் கூடிய அரசன் ஒரு இலக்கை முன்மொழிந்து தனக்கான காலக்கோட்டையும் தானே தீர்மானித்து, அந்தக் காலக்கட்டுப்பாட்டினுள் நின்று அதனை அடையாத நிலையில் தான் பெறவிருக்கும் கெடுதலையும் உடன்மொழிவது வஞ்சினம் ஆகும். இந்த வஞ்சினத்தைத் தொல்காப்பியர் காஞ்சித்திணையுடன் பொருத்தி வஞ்சினக்காஞ்சி என்னும் துறையாக அமைத்துள்ளார். காஞ்சி என்பது நிலையாமையைக் குறிக்கும். போரில் தனக்கோ அல்லது தம்மை எதிர்த்து வரும் பகைவருக்கோ ஏதோ ஒரு புறம் அழிவு உண்டு என்னும் நிலையாமையை உணர்த்துவதால் இத்துறை காஞ்சித் திணையின் கீழ் அடங்குகிறது. வஞ்சினக் காஞ்சி குறித்து,

'இன்னது பிழைப்பின் இதுவாகியரெனத்

துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும்'

( தொல்.பொருள்.புறத்.நூ - 19 )

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

'இன்று பகலோ னிறவாமு னொன்னாரை

வென்று களங்கொள்ளா வேலுயர்ப்பினென்று

மரணவியப் பாயு மடையார்மு னிற்பேன்

முரணவிய முன்முன் மொழிந்து'

அதாவது இன்று இரவு வரும் முன்னர் இந்தப் பகைவனை வெல்லமுடியாமற் போவேனாயின் களத்திலேயே விழுவேன் எனக் கூறும் இப்பாடலின் மூலம் "மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்"களான மன்னர்களின் ஓர்மம் சுட்டப்படுகின்றது. "அதிரப்பொருவது" என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைமொழியைக் கொண்டு குறிப்பிடப்படும் தும்பைத் திணையிலே பகை மன்னர்கள் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருப்பார்கள். அவ்வாறானதொரு போரிலே வீரன் தன்னுயிரை இழந்துவிட்டானாயின் அவன் அழியாக் காவியமாகி விடுகின்றான்.

'மீன் உண் கொக்கின் துவி அன்ன

வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்

களிறு எறிந்து பட்டனன்; என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே '

(புறம்.277:1-4)

என்ற பாடலில் உணர்த்தப்பட்டுள்ளது. மீனை உண்ணும் கொக்கினுடைய இறக்கைகளைப் போல வெள்ளையாக நரைத்துவிட்ட கூந்தல் கொண்ட முதிர்ந்த வயதுடைய தாய் தனது சிறிய மகன் யானை எதிர்த்துக் கொன்று மரணித்தான் என்கின்ற செய்தி கேட்டு, பெற்றேடுத்த பொழுதை விடப் பெரியதாக மகிழ்ந்தாள் என்பது பதியப்பட்டிருக்கின்றது. இங்கே அந்த வீரனுடைய இறப்பானது அவனது உயிர் இழப்பாகக் கருதப்படாது வீரத்தின் பிறப்பாகக் கருதப்பட்டு கொண்டாட்டத்திற்குரியதாகிறது.



தமிழர் வாழ்வியலில் மன்னனும் அவன்சார்ந்த போர் வாழ்க்கையும் படைப்பு வெளிகளை நிரப்பி நிற்கின்றன. தமிழர் நாட்டினை ஒரே நாடாகக் கனவு கண்ட கரிகால் சோழன் என்னும் மன்னன் தொடர்பான பாடல்களும் கதைகளும் மண்டியிடாத வீரத்தின் பதிவுகளுக்கு வலுச்சேர்க்கின்றன. அவனது தந்தை இளஞ்சேட்சென்னி இறந்துபட்டபோது கரிகாலன் மிகவும் இளையவனாக இருந்தான். அரசைக் கைப்பற்றும் சூழ்ச்சியுடன் அவனுடைய தாய்வழி மன்னர்கள் அவனைச் சிறைப்பிடித்து வைத்தனர். புலிக்குட்டியானது கூண்டுக்குள்ளே இருந்து தன் வஞ்சினத்தை வளர்ப்பது போல கரிகால்சோழனும் சிறையிலிருந்து எதிரியை அழிப்பதற்கான தன் பலத்தினைப் பன்மடங்காக்கினான் என்று கரிகால் சோழனின் வீரமானது உயர்வு நவிற்சியினூடாக பதியப்பட்டிருப்பதைக் காணலாம்.

'கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்த்தாங்குப்

பிறர் பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி

அருங்கரைக் கவியக் குத்தி குழிகொன்று

பெருங்கை யானை பிடிபுக் காங்கு'

(பட்டின. 221-224)

அதாவது புலிக்குட்டி கூண்டுக்குள்ளே இருந்து வளர்ந்தே பலம் பெறுவது போல எதிரிகளின் சிறைக்கூடங்களில் வாழ்ந்த போது கரிகாலன் வல்லவன் ஆயினான். ஒரு குழியில் யானை பிடித்து அடக்கப்படுகிறது. ஆனால் அதே குழியை நிரப்பி தப்பித்து ஓடி, பெண் யானையுடன் சேர்ந்துவிடும் இயல்பு அதற்கு உண்டு. அதே போல கரிகாலனும் நெஞ்சு நிறைய விடுதலையையும் வெஞ்சினத்தையும் வளர்த்து, சிறை மீள்கிறான். ஆட்சியைப் பிடித்தவுடன் தன் பகைவர்களைக் குறிப்பாக, தன்னை வஞ்சித்தோருக்குத் துணை நின்றவர்களை இல்லாதொழிக்கிறான்.

'ஆளி நல் மான் அணங்கு உடை குருளை

மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி

முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்

தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்

கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலு

மோங்கிருஞ் சென்னி மேம்ப மிலைந்த

விருபெரு வேந்தரு மொருகளத் தவிய

வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்

கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்

கண் ஆர் கண்ணி கரி கால் வளவன்' (பொரு 138)

சிங்கத்தின் குட்டியானது தன் வலிமை குறித்து மிகுந்த செருக்குக் கொண்டு தன்தாயிடம் முலைப்பால் குடித்தலைக் கைவிடாத இளம் பருவத்திலேயே முதன்முதலில் இரையைக் கொல்லும் தன் கன்னி வேட்டையிலேயே விரைந்து செயற்பட்டு ஆண்யானையைக் கொன்று வெற்றிகரமாக முடித்ததைப் போன்று கரிய பனந்தோட்டு மாலையும் வேப்பமாலையும் முறையே சூடிய இருபெரு வேந்தர்களாம் சேரனையும் பாண்டியனையும் ஒருசேர வெண்ணி என்னும் ஊரிலே போரிட்டுக் கொன்ற அச்சந்தரும் வலிய வீரத்தையும் முயற்சியையும் உடையவன் சோழன் கரிகாலன் என்கிறது பொருநராற்றுப்படை.

சிறையிலடைத்த எதிரிக்குத் தன் வேலால் மறுமொழி சொன்ன கரிகாலனின் பரம்பரையில் வந்த எம் இனம் இன்று திறந்தவெளிச் சிறையில் கூட தன் பலத்தினைக் கூட்டமுடியாத அளவிற்கு வீரத்தின் இலக்கணங்களை மறந்தும் மறக்கடிக்கப்பட்டும் எதிரியின் நிழலில் பாதுகாப்பை தேடுகிறார்கள். தன்னை வஞ்சித்த மன்னர்களை மட்டுமல்லாது, அம்மன்னர்களுக்கு துணைநின்றவர்களையும் போருக்கழைத்து வெட்டிச் சாய்த்து, புலிக்கொடியை நாட்டியவன் கரிகாலன்.

கரிகால் சோழனின் எதிரிகள் அவனை வஞ்சகத்தால் வீழ்த்த நினைத்திருந்தாலும் அவர்களின் வீரத்தையும் இலக்கியங்கள் பாடத்தவறவில்லை. வீரனுடன் போரிட்டவனின் வீரத்தை கூறுவது அந்த வீரனின் பேராண்மைக்கு இன்னமும் வலுச்சேர்க்கின்ற சாட்சியங்களாகும்.

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்

பொருது புண் நாணிய சேரலாதன்'

*(அகநானூறு 55: 10-11)*

கரிகால் சோழனோடு போரிட்டு தோற்றுப்போன மன்னன் போர்க்களத்திலே விழுப்புண் அடைந்து அவிப்பவி ஆகினான் என்ற செய்தியை அகம் பதிவுசெய்திருக்கிறது.

'காய்சின மொய்ம்பின் பெரும் பெயர்க் கரிகால்

ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்

சீர் கெழு மன்னர் மறலிய ஞாட்பின்

இமிழ் இசை முரசம் பொரு களத்து ஒழிய

பதினொரு வேளிரொடு வேந்தர் சாய'

*(அகநானூறு 246: 8-12.)*

கரிகால் சோழன் தன் எதிரியையும் அவன் சார்ந்தோரையும் வலிந்த தாக்குதல் மூலம் வெற்றிகொள்கிறான். சிறுவயதில் தன்னைச் சிறைப்பிடித்தோரை போர்க்களத்தில் கொன்று குவித்தது கரிகாலன் வீரம். கரிகால் சோழன் சேரமன்னன், பாண்டிய மன்னன், வேளிர் என அனைவரையும் தோற்கடித்துத் தமிழகத்தை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருகிறான். அத்துடன் அமைதியடையாத அவனது வாள் வட நாட்டுக்கும் சென்று இடையில் உள்ள மன்னர்களை எல்லாம் வென்று வந்தது. இமயம் வரை சென்று அங்குத் தன் நாட்டின் புலிக் கொடியை நாட்டியது கரிகாலனின் வாள்.

கரிகால் சோழன் சிறந்ததொரு கப்பற்படையையும் வைத்திருந்தானெனவும் அதன் வழி இலங்கை மேல் போர் தொடுத்து அதில் வெற்றியும் எய்தினான் எனவும் ஊகங்களும் இருக்கின்றன. ஆனால் தெளிவான ஆதாரங்கள் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தாலும் அங்கிருந்து பல்லாயிரக்கணக்கான வீரர்களைக் கொண்டு வந்து அவர்களைக் கொண்டு காவிரியாற்றின் கரையை உயர்த்தி அமைத்தான் என்ற வரலாறு பதியப்பட்டிருக்கின்றது.

தனித்தமிழ்நாடு என்ற கருத்தியலை புலிக்கொடியின் அசைவிலே நனவாக்கி, தமிழர்களை ஒரே குடையின் கீழ் இளைப்பாறச் செய்த பெருமையும் கரிகாலனைச் சார்ந்ததே. தமிழ்ப்பேரரசு ஒன்றினை நிறுவும் அவனுடைய ஓர்மத்தைச் சிறையும் பகைவன்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்கொண்ட வெஞ்சினமுமே கொடுத்தன எனலாம். ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டாலும் மனம் எனும் ஆயுதத்தினைக் கூர்மையாக வைத்திருக்கும் வெஞ்சினமானது, காலத்திற்காகக் காத்திருந்து தன் ஆயுதத்தினால் பேசும் திறன் வாய்ந்தது.

'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்

மெய்வேல் பறியா நகும்'

என்கிறது பொய்யாமொழி.

கையில் ஏந்திய வேலை ஒரு யானையின் மேல் எறிந்து துரத்திவிட்டு, வேறு வேல் தேடி வருகின்றவன் தன் மார்பில் பட்டிருந்த வேலைக் கண்டு பறித்து மகிழ்கின்றான். மார்பில் பட்டிருந்த வேலை எடுப்பது தற்கொலைக்கு சமமானது. தன்னுடைய வாழ்வின் இறுதிக்கணங்களிலும் போர் புரிந்து மடிய விரும்பும் வீரத்தை வள்ளுவமும் பதிவு செய்திருக்கிறது.

போர்க்களத்திற்குச் சென்ற வீரன் எந்தக் கணத்திலும் தனது நாட்டிற்காக இறக்கத் தயாராக இருந்திருக்கிறார்கள் என்ற வீரத்தத்துவத்தை,

'மருப்புத்தோ ளாக மதர்விடையிற் சீறிச்

செருப்புகன்று செங்கண் மறவன் நெருப்பிமையாக்

கைக்கொண்ட வெஃகங் கடுங்களிற்றின் மேற்போக்கி

மெய்க்கொண்டான் பின்னரு மீட்டு'

(புறப்பொருள் வெண்பா 140)

சிவந்த கண்ணினை உடையானான மறவன், போரினை விரும்பி, தான் கைக்கொண்ட வேற்படையினைப் பகைவரது கடிய யானையின்மேல் போக்கிவிட்டு, மதர்த்த எருமைக் கடாவைப் போலச் சீறியவனாகத் தன் தோள்களே கொம்புகளாகக் கொண்டு, பின்னரும் பொறிபிறப்ப விழித்தவனாகத் தனது மெய்வலியினாலே போரிட்டு வெற்றி கொண்டான் என்ற பாடல் பதிவு செய்திருக்கிறது.

ஆயுதங்களை இழந்த நிலையில் கூட, தன் வீரத்தின் பண்பில் சிறிதளவும் ஐயம் கொள்ளாது, எதிரியை நேருக்கு நேர் எதிர்கொள்வதே வீரம். இதனை

'படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமம்'

என்பர் தொல்காப்பியர் (புறத். 17).

அதாவது கைப்படையைப் போக்கி மெய்யாற் போர்செய்யும் மயக்கம் என்பது பொருள் ஆகும். அவ்வாறு போர் செய்து அவன் போர்க்களத்தில் இறந்துவிட்டானாயின் அவன் மாவீரனாகப் புகழ் பெறுவான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இது ஏம எருமை என்று தொல்காப்பியம் சுட்டுகிறது.

'செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினை.

ஒருவன் மண்டிய நல்லிசை நிலை'

(தொல், புறத். சூ.17)

என்பதே இதுவாகும் இதனைத் தன்னுறு தொழில் என்பர் இளம்பூரணர்.

புறமுதுகிட்டோடல் என்பது சிந்தனையில் வந்தால் கூட வீரம் கேள்விக்குள்ளாகிவிடும் என்ற கருத்தாக்கத்தில், எருமை மறம் ஒரு போரியலில் முக்கியமான விடயமாகச் சுட்டப்படும்.

'வெயர் பொடிப்பச் சினங்கடைஇப்

பெயர் படைக்குப் பின்னின் றன்று'

( தொல்காப்பியம் 35)

இத்துறை வியர்வை அரும்பச் சினம் கொண்ட வீரன் ஒருவன் புறமுதுகு காட்டிய தன் சேனைக்குப் பின்னே நின்று தன் வீரத்தை வெளிப்படுத்தியது என்ற குறிப்பிடுவதாகும்.

தொல்காப்பியம் கூறும் இந்தக் கோட்பாடானது புறநானூற்றில் மெய்ப்பிக்கப்படுவதனை,

'தன்வடிமாண் எஃகம் கடிமுகத்து ஏந்தி

ஓம்புமின் ஓம்புமின் இவண்என ஓம்பாது

தொடர்கொள் யானையின் குடர்கால் தட்பக்

கன்றுஅமர் கறவை மான

முன்சமத்து எதிர்ந்ததன் தோழற்கு வருமே'

(புறம் . 275)

என்ற பாடலின் மூலம் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவர்கள் தங்களுடைய படைகளைச் சூழ்ந்து கொண்டு அழிக்கின்ற நேரத்தில் வீரன் ஒருவன், தடைகள் எல்லாவற்றையும் கடந்து, தோல்வியைக் கண்டு கொண்டிருந்த தன் நண்பனைக் காப்பாற்றக் கன்றை விரும்பும் பசுவைப் போலப் பாய்ந்து சென்று நண்பனைக் காத்தான் என்பது பாடல்தரும் செய்தியாகும். இதில் நண்பன் தோல்வியுற்றுத் திரும்பும் நிலையில் வீரன் ஒருவன் பிணக்குவியல்களாயிருந்த தடைகளைக் கடந்து, தன் நண்பனைச் சூழ்ந்திருந்த படைகளை வெற்றி கொண்டு, நண்பனின் பக்கத்தில் சென்று அவனைக் காத்தான் என்ற செய்தியானது, ஒவ்வொரு வீரனும் தன் படைசார்ந்த வீரத்தை மட்டுமல்லாது, தன் சுயம் சார்ந்த வீரத்தினையும் போற்றுகின்றவனாக இருந்திருக்கிறான் என்பதைப் புலப்படுத்துகிறது.

'உடை படை ஒருவன் புக்கு ஒருவனைக்

கூழை தாங்கிய எருமையும்'

( தொல்காப்பியர் (புறத்.17).)

எதிரியின் தாக்குதலால் நிலைகுலைந்து உடைந்து சிதறிய தனது படையின் முன்னே நின்று, எதிரிப்படையினைத் தனியனாக எதிர்கொண்டு நின்று போராடும் வீரனது தோற்றப்பாடானது, சிலிர்த்து நிற்கும் எருமைக்கு ஒப்பிடப்படுவதால் இது எருமை மறம் என்று கூறப்படுகிறது. புறமுதுகிட்டோடும் படையுடன் வீரனும் புறமுதுகிடுவானாயின் அவனைப் பெற்ற தாய் கூட பழித்து, தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலையிலிருந்த மறச் சமூகத்தில் வீரனொருவன் ஒட்டுமொத்த எதிரியையும் தன்னந்தனியனாக எதிர்ப்பதென்பது இலகுவானதல்ல. ஆயினும் மறமும் தன் படைகளை எதிரி ஓடவைத்தான் என்ற வெஞ்சினமும் நெஞ்சிலே வேல் வாங்கும் வீரத்தினை வீரனுக்குக் கொடுத்திருக்கின்றன.

'கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி

நெடுங்கைப் பிணத்திடை நின்றான் – நடுங்கமருள்

ஆள்வெள்ளம் போகவும் போகான்கை வேலூன்றி

வாள்வெள்ளந் தன்மேல் வர'

(புறப்பொருள் வெண்பா மாலை)

தனது யானை கண்முன்னே இறந்து கிடக்கவும், படைகள் வெள்ளம் திரும்பிப் போகவும் எதிரிப்படையினது வாள்கள் வெள்ளம் போல தன்னை நோக்கி வந்ததைக் கண்ணுற்ற போதும் தனது கையிலிருக்கும் வேலை ஊன்றி எழுந்து நின்றான் வீரன் என்று வீரத்தின் உச்சத்தைச் சொல்லிச் சென்றது புறம்.

ஒரு வீரன் தன்னால் கொல்லப்பட்ட யானையுடன் தானும் வீழ்ந்து இறத்தலைக் களிற்றுடனிலை என்னும் ஒரு புறத் துறையாகும்.

'ஒளிற்றெஃகம் படவீழ்ந்த

களிற்றின்கீழ்க் கண்படுத்தன்று'

ஒளி பொருந்திய வேலை உடைய வீரன் ஒருவன் தன்னை எதிர்த்த யானையை வீழ்த்தி அதனோடு தானும் இறந்து பட்ட வீரச் செயலைக் கூறுவதாகும். பின்வரும் புறநானூற்றுச் சூழலினூடாக இதனை நாம் விளங்கிக்கொள்ளலாம்.

'ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ

குன்றத்து அன்ன களிற்றோடு பட்டோன்

வெஞ்சின யானை வேந்தனும் இக்களத்து

எஞ்சலிற் சிறந்தது பிறிதொன்று இல்லெனப்

பண்கொளற்கு அருமை நோக்கி

நெஞ்சற வீழ்ந்த புரைமை யோனே'

என்ற இப்பாடலில் போர்க்களத்தில் படைவீரன் ஒருவன் தான் வீழ்த்திய யானையோடு தானும் வீழ்ந்து இறந்து பட்டான். இதனைக் கண்ட அவ்வீரனின் தலைவனாகிய மன்னன் இப்போர்க்களத்தில் தானும் விழுப்புண் பட்டு புலவர்கள் பாடும் வண்ணம் இறந்து போவதே சிறந்தது என்று எண்ணித் தன் உயிரைப் பெரிதாகக் கருதாது இறந்து பட்டான் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. அவ்வாறு போர்க்களத்தில் இறந்த மன்னனை தனது வீரத்தை நிலைநிறுத்தி, தமிழர்களிற்கு தனிநாடு அமைத்த கரிகாலனை விடவும் சிறப்பான இடத்தில் வைத்துப் புலவர்கள் பாடுகிறார்கள்.

'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி

வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களி இயல் யானைக் கரிகால் வளவ!

சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற

வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே

கலிகொள் யானர் வெண்ணிப் பறந்தலை

மிகப் புகழ் உலகம் எய்திப்

புறப்புண் நாணி வடக் கிருந்தோனே!'

காற்றின் இயல்பை அறிந்து நீர் நிறைந்த பெரிய கடலில் மரக்கலத்தை ஓட்டிய வலியவர்களின் வழித்தோன்றலே! செருக்குடைய யானைகளையுடைய கரிகால் வளவனே! போருக்குச் சென்று உனது வலிமை தோன்றுமாறு வெற்றி கொண்டவனே! மிகுந்த அளவில் புதிய வருவாய் உள்ள வெண்ணி என்னும் ஊரில் நடைபெற்ற போரில், முதுகில் புண்பட்டதற்கு நாணி, வடக்கிருந்து மிக்க புகழுடன் விண்ணுலகம் எய்திய சேரமான் பெருஞ்சேரலாதன் உன்னைவிட நல்லவன் அல்லனோ?

களத்தில் வெற்றிகொண்டு தன் வீரத்தை பறைசாற்றிய கரிகாலனின் வீரம், போர்க்களத்தில் வடக்கிருந்து இறந்த மன்னனின் மண்டியிடாத வீரத்தின் முன் தோற்றுப் போய்விட்டது.

எமது விடுதலைப்போராட்டத்தின் ஆயுதங்களின் வீச்சம் பன்னாட்டு ஆயுதங்களின் மொழிகளுடன் பேரம்பேசி ஈடுகொடுக்க முடியாமல் மௌனித்துப்போயிருக்கிறது. ஆனால் இந்த மௌனம் எமக்கான, எம் இனத்திற்கான முடிவுரை அல்ல. முடிந்த முடிபும் அல்ல. எங்களுக்கான மொழி இன்னமும் இறந்துவிடவில்லை. எங்கள் விடுதலையை நோக்கிய ஆயுதங்களும் மௌனித்துப் போயிருக்கின்றனவேயொழிய செயலிழந்துபோகவில்லை. எம் அடையாளங்களும் எமக்கான மொழியின் எழுகைக்காக காத்திருக்கின்றன. எம் வரலாற்றின் தடங்களில் பயணிக்கவேண்டிய தேவையும் எமக்கிருக்கிறது. ஆனால் எம் விடுதலைக்கான தடம் சுயநலங்களால் விலங்கிட்டுக் கிடக்கிறது. விலங்கினை உடைத்து வரலாற்றை மீளெழுதவும் மீளெழும் வெளியினைத் தக்கவைக்கும் சோரம்போகாத வீரத்தின் தேவையும் கனத்துக் கிடக்கின்றன. ஆனால், அந்தக் கனதிகளின் பொருள் புரிந்தும் புரியாதவர்களாக சுயமிழந்து நிற்கிறோம். ஏதிலிகளாக எதிரியிடம் மண்டியிட்டுக் கிடக்கும் எம் இனத்தின் இழிநிலையை எமக்காக மாண்டுபோன எம் வீரர்களின் மறம் எள்ளிநகையாடும். தோற்றுப்போய் துவண்டுகிடந்தோம் என்று வரலாற்றுப் பதிவில் எம் சுயத்தை நாங்கள் அடகுவைக்கப்போகிறோமா? இல்லையேல் மண்டியிடாத வீரத்தின் எச்சங்கள் இன்னமும் மிச்சமிருக்கிறது என்பதை எப்போது எதிரிக்கு சொல்லப்போகிறோமா?

"உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலா தார்."

எதிரி ஆயுதம் ஏந்தாதவரை விமர்சனம் என்பதே ஆயுதம். அவன் ஆயுதம் ஏந்திவிட்டால் ஆயுதம் என்பதே விமர்சனம்.

**- கார்ல் மார்க்ஸ் -**

மனிதனின் வாழ்க்கையை அவனது மனசாட்சி நிர்ணயிப்பதில்லை. ஆனால், சமூக வாழ்க்கை தான் அவனது மனசாட்சியை நிர்ணயிக்கிறது.

**- கார்ல் மார்க்ஸ் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊன்றிவிட்டுச் செல்லுங்கள்

- திரு -

உந்த வேடுவரின் கற்களுக்கு
எப்பேனும்
இந்த மாதிரியாய் தேன் கூடு
வரலாற்றில்
வெந்து வீழ்ந்தடங்கி
தேனீக்கள்
நொந்து வீழ்ந்த
நூறொன்றாய்ச்
செத்தாலும்
சந்து பொந்துகளில்
மறைந்திருந்த
வேடரது
சங்குகளிற் போட்டுக்
கலைக்காமல்
விட்டதுண்டோ..!

எந்தக்காலத்தில்
இப்படியாய்த் தேனீக்கள்
கையுயர்த்திக் கால் மடங்க
வீழ்ந்ததுண்டு..?இதன் பின்னால்
கல்லில் எரி நெருப்பை
கண் செருகும் ஓர் மருந்தை
பூசி அதை வீசும் பக்குவத்தை
எறி வீச்சை



யாசித்து யாசித்து
உலகெல்லாம் கையேந்தி
கூசாமல் ஓர் குலத்தை
அழித்தார்கள், இதையுலகு
பேசாமல் பார்த்துவிட்டு
இருந்ததுடன் அதன் மேலால்
யோசனையும் சொல்லிக்
கொடுத்ததடி, தேன் கூட்டில்
உலகினெரி கற்களெலாம்
ஒருமித்துப் பட்டதனால்
திலகம் போலிருந்த
தேன் கூடு திக்கிழந்து
தீயினெரி நாக்குகளிற்
தீய்ந்ததடி மற்றபடி
வேடுவரால் எந்தவொரு
விரல் நுனியும் வீழவில்லை
ஆனாலும்
அடைக்கதவாய் இருந்து
அர்ப்பணித்த தேனீக்கள்
விடைபெற்ற நாளிருந்து
வீட்டடையிற் கதவில்லை
வேண்டியவன் வந்துவிட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகின்றான், தேனீக்கள்
கொடுக்கெடுத்துக் கொத்திக்
கலைக்காது என்கின்ற
தடித்திமிர் வேடனுக்கு
இருக்கட்டும், வீட்டுள்ளே
குழந்தைத் தேனீக்கள் தூங்குகிறார்
அவர் மேலே
காற்றோ அடைமழையோ
கடிக்கின்ற வி'யந்தோ
தோற்ற மன நிலையின்
துளியோ படாமலுக்கு
கீற்றுகளைக் கிழித்துப் பின்னி
ஓர் கதவை
மாற்றம் வரும் வரையில்
மறைத்திடுங்கள், அவர் வளர்ந்து
தோற்றம் பெற்றவுடன் திறப்பார்
கை உதறேல்..!
தேனாய் இருந்த வளம்
திருட்டுப் போய் விட்டாலும்
ஊனை உருக்கி
உயிர் கொடுத்து அதனுள்ளே
தேனைத் துளித்துளியாய்
தேடி வைத்த தேனீக்கள்
இறந்தும் இருளுள்ளும்
எங்கெங்கோ மறைந்தாலும்
பறந்தும் அதற்குள்ளால்
பாதைகளை ஊடறுத்த
சிறந்த மனத்தேனீக்கள்
சிலவுண்டு அவை மீண்டும்
பிறந்து வருவது போல்
வரக்கூடும்..!, ஏனென்றால்
ஏதோவோர் நூலிளையில்
இன்னும் அடை இருக்கு
பாதைகளில் எங்கும்
பரவிக் கிடக்கின்ற
விடியாத கனவில்
விழுந்திறந்த தேனீயின்
மடியாத வீர உரமுண்டு
அதன் மேலே
செடி ஒன்று வைக்க மாட்டாரோ..!
செழித்ததுவும்
விடியல் மணமுள்ள
பூப் பூவாய் வழி எங்கும்
கொடி போல பூத்துவிட மாட்டாதோ..!
அதன் வேரால்
உரமான தேனீயின்
உர மான எண்ணங்கள்
தரமான தேனாகத் தவளாதோ
பூவுக்குள்..!
விரைவாக இல்லை என்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலம்

உருவாகும் மெதுவாக மெதுவாக

தேனீக்கள்

சிறிதாகச் சிறிதாகப் பெரிதாகி

அத்தேனை

வறிதான அடைவாயில் வார்க்கும்

பருவத்தில்

அடைமாறித் தேன் கூடாய் ஆகும்

இதற்காக

எது செய்யப் போகின்றீர் நீவீர்..?

உம் கையில்

செடியுண்டு நீருண்டு

நட்டுற்ற மனமுண்டோ..?

இடம் கொஞ்சம்

மனத்துண்டு ஆயின் இப்போதே

உரத்துக்கு மேலொன்றை

ஊன்றி விட்டுச் செல்லுங்கள்

ஆடு கடிக்காமல் அவதானமாகவுந்தான்

உரத்துக்கு மேலொன்றை

ஊன்றி விட்டுச் செல்லுங்கள்....

சுதந்திரத்தை வென்றெடுக்காமல் போனால்

நாம் அடிமைகளாக வாழவேண்டும்.

தன்மானம் இழந்து தலைகுனிந்து

வாழவேண்டும். பயந்து

பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும்.

படிப்படியாக அழிந்துபோக வேண்டும். ஆகவே

சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர

எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

**- மேதகு.வே.பிரபாகரன் -**

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்

போராட்டமே எமது வாழ்க்கையாகவும்

வாழ்க்கையே எமது போராட்டமாகவும்

மாறிவிட்டது.

**- மேதகு.வே.பிரபாகரன் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகளுடன் மட்டும் நின்றுவிடாத இஸ்ரேலின் முடிவில்லாத குற்றங்கள் - மொழிபெயர்ப்பு:

## - முல்லை -

**இது "ஸ்டான்லி எல் கோஹேறன்" ஆல் எழுதப்பட்டு 29.12.2016 அன்று அல்ஜசீராவில் வெளியாகிய கட்டுரையின் ஒரு தொகுப்பு. "ஸ்டான்லி எல் கோஹேறன்" ஒரு வழக்கறிஞர் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர். இவர் மத்திய கிழக்கு மாற்றும் ஆபிரிக்காவில் தனது மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டவர்.**

**இஸ்ரேல் தனது இனவழிப்பு நடவடிக்கைகளை மிக வெளிப்படையாகவே நடத்துகின்றது.**

பாரிய இனவழிப்புக்குள்ளான, இன்னும் கட்டங் கட்டமாக இனவழிப்பிற்கு உட்படுகின்ற இனமாக எமது தமிழினம் இருப்பதனால் எமக்கான முக்கிய சில அறிவூட்டல்களை இப்பத்தி எடுத்தியம்புவதை கண்ணுற்ற காக்கை இதழ் காலத்தின் தேவை கருதி இதை தமிழாக்கம் செய்து தொகுத்து வழங்குகின்றது.

கடந்த இரு கிழமைகளுக்கு முன்னர் ஒட்டு மொத்த பன்னாட்டுச் சமூகமும், பலஸ்தீனியத்தின் மேற்குக் கரையில் இஸ்ரேல் உருவாக்கிய அத்துமீறிய குடியேற்றங்கள் சட்டவிரோதமானவை என ஐக்கிய நாடுகள் சபையால் மொழியப்பட்ட தீர்மானத்தில் தம் கவனத்தைப் பதித்திருந்தன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிற்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்தாலும் கொண்டுவரப்பட்ட தீர்மானமானது தெளிவற்ற மிகத்துல்லியமான சட்ட நுணுக்கங்களைக் கொண்டுள்ளதால் இது அனுபவம் நிறைந்த அரசியல் ஆய்வாளர்களால் விவாதத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.

சிலர் இத்தீர்மானமானது 1967 முதல் இஸ்ரேல் ஆனது அரபு, பலஸ்தீனிய கட்டுப்பாட்டிலிருந்த கிழக்கு ஜெருசலம் உள்ளடங்கலாக மேற்குக்கரை வரை அபகரித்த அனைத்து ஆக்கிரமிப்புக்களையும் புறந்தள்ளும் திறன் வாய்ந்ததாக கருதுகின்றனர்.

ஏனையோர் இதை செயற்றன்மையற்ற ஒரு ஆலோசனை மொழியாகவே பார்க்கின்றனர். இது ஏற்கனவே பரிந்துரை செய்யப்பட்ட இரு மாநில உருவாக்கம் ( யூதர்களுக்கு ஒரு மாநிலம், பலஸ்தீனர்களுக்கு ஒரு மாநிலம் ) சம்பந்தமான தீர்மானத்திற்கு துணை புரிவதாக இருப்பதனால் 15 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமைக்குச் செல்வதற்கான ஒரு அழைப்பாகவும் பார்க்கின்றனர். 15 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேல் 60% இற்கு குறைவாகவே மேற்குக் கரையை ஆக்கிரமித்திருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக இத்தீர்மானமானது நடைமுறைப்படுத்துவதற்குரிய எந்த ஒரு உந்துதல் பொறிமுறையையும் உள்ளடக்கவில்லை. இத்தீர்மானத்தின் திறனானது முக்கியமாக இஸ்ரேலின் மனச்சாட்சியில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டு இத்தனை காலமும் பன்னாட்டுச்சமூக சட்ட திட்டங்களை மீறி பயணித்த தன் பாதையிலிருந்து திரும்பிச் செல்வதிலேயே தங்கியுள்ளது. இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை பலஸ்தீனத்திலிருந்து களவாடிய பிரதேசத்தை மையப்படுத்தி தன்னை உருவாக்கிக் கொண்ட முதல் நாளிலிருந்தே ஆரம்பித்துவிட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணங்க மறுக்கும் நெதன்யாஹு

இஸ்ரேலின் பிரதமர் பெஞ்மின் நெதன்யாஹு மிகவும் கடிந்த சினத்துடன் பன்னாட்டுச் சமூகங்கள் மீது குற்றம் சுமத்தியுள்ளார். இது முன்னால் அமெரிக்க சனாதிபதி பராக் ஒபாமாவால் ஒழுங்கமைக்கப்பட்ட பன்னாட்டுச் சமூகங்களின் சதி எனவும் இத்தனை காலமாக இஸ்ரேலின் நலன் கருதி அமெரிக்கா கொண்டிருந்த ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து தன் வழியே ஒபாமா வெளியேறிய பின் திடீரென அமெரிக்கா இஸ்ரேலின் விடயங்களில் சமாளிக்கும் பதில்களைக் கொடுப்பதாகவும் மேலும் அவர் குற்றம் சாட்டினார். (இத்தீர்மானம் தொடர்பாக அமெரிக்கா வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது)

ஆனாலும் இஸ்ரேலின் இராணுவச் செலவுகளுக்கும் அதன் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளுக்கும் 38 மில்லியன் டொலர்களைச் செலவழித்த ஒரு நாடு இஸ்ரேல் மீது கொடுக்கும் இந்த அழுத்தத்தை நம்புவது சற்று கடினமாகவுள்ளது.

இத்தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கிய வறிய நாடுகளில் ஒன்றான சினேகல் மீதும் அவருடைய கண்டனங்கள் தொடர்ந்தன. சினேகல் தன்னுடைய பொருளாதார நெருக்கடிகளிற்காகவே இத்தீர்மானத்திற்கு ஆதரவளித்ததாகவும் மற்றும் அதன் குற்றம் என்னவெனில் தற்போது பன்னாட்டளவிலிருக்கும் சட்டதிட்டங்களை அதீதமாக நம்புவதும், இப் பன்னாட்டுச் சமூகங்களின் கட்டடத்திற்குள் 193 நாடுகளின் கொடிகளுடனும் மற்றும் நியூயோர்க்கின் கிழக்கு ஆற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் பலஸ்தீனத்துடனும் குடியிருப்பதேயாகும் என இஸ்ரேல் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா தொடர்பாகவும் அதன் தீர்மானம் தொடர்பாகவும் தான் என்ன நினைக்கின்றார் என்பதை குறிப்பாக ஆயிரக்கணக்கான புதிய வீடமைப்புத் திட்டத்தை அறிவிக்கும் போதே பன்னாட்டுச் சமூகங்களிற்குத் தெரியப்படுத்தினார். இஸ்ரேல் ஒருபோதும் தன்னுடைய மற்றக் கன்னத்தைக் காட்டாது என்றும் அத்துடன் ஐநா விற்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் பறைசாற்றினார். அத்துடன் உடனடியாக இத்தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கிய பிரித்தானியா, பிரான்ஸ், ரஸ்சியா, சீனா, யப்பான், உக்ரைன், அங்கோலா, எகிப்து, உருகே, ஸ்பெயின், ஸ்நேகல் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுடனான நடப்புறவுகளையும் நிறுத்திவிட்டார்.

## பலமுள்ள எதிரியாய்

நெதன்யாஹு மேலும் தொடராது நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவரால் அது முடியவில்லை. எந்த விதமான உந்துதலும் இருக்கவில்லை. வெறும் சொற்களில் மட்டுமே அமைந்த இஸ்ரேலின் கொள்கைகளைக் கண்டிக்கத்தக்க நூற்றுக்கணக்கான முன்னைய தீர்மானங்களைப் போல் இறுதியாக வந்த ஐக்கிய நாடுகள் சபையின் இக் கண்டனமும், கொடூரமான இனப்படுகொலைகள் புரிந்து அதன் ஊணிலிருந்து உருவாகிய ஒரு நாடு, நீதி கேட்டு அலறுமளவுக்கு எந்தவிதமான பெரிய மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.



நான் "வார்த்தைகளால் மற்றவர்களைத் துன்புறுத்துபவன்", "திமிர்பிடித்தவன்", "கொடூரமானவன்". ஆனாலும் ஒரு இரண்டு கால் மிருகம் உள்ளது. அது அப்பாவிகளை தன் உணவாகவே உண்ணுகின்றது. அது போல் நான் இல்லை. நெதன்யாஹு இந்த வகையான ஒரு மிருகம் தான். இருட்டு சூழ்ந்த ஒரு உலகில் வாழும் கொடிய சிந்தனைகளைக் கொண்ட ஒரு அசுரன். தன் நட்புகளுக்கு தன் பொய்யான தோற்றத்தைக் காட்டுபவர். தன் நண்பனுக்கு நேர்மையற்றவர். மரணம் அவரது தூதர். தமது பிரதேசத்தைச் சூழவுள்ள காற்றைச் சுவாசிப்பதும் ஒரு சுதந்திரமான நிம்மதியான வாழ்க்கையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுவதையும் தவிர எந்த விதமான குற்றமும் புரியாத பல அப்பாவிப் பொதுமக்களை இவரது பயங்கரவாத அரசு பலியுண்டதால் இவர் உலக நாடுகளை அவமரியாதையும் செய்பவர்.

நமது காலப்பகுதியிற்குரிய வரலாறு நேர்மையாக எழுதப்படும் போது சந்தேகம் இல்லாமல் நெதன்யாஹு இன் கொடுமைகளும், அவருக்கு முன்னர் அவர் இடத்தில் இருந்தவர்களின் கொடுமைகளையும், உலகை ஏற்கனவே ஒரு விளையாட்டுத் திடலாகப் பார்த்து கொடுமைகள் புரிந்த கொடியவர்களின் பட்டியலுடன் இணைக்கப்படும்.

யோசப் ஸ்டாலினின் உலகில் "மரணதண்டனையும்", "நாட்டை விட்டு வெளியேற்றலும்" அவரால் எதிரியாக கருத்தப்பட்டவர்களை அகற்றத் துணை புரிந்தாலும் "பட்டினியிடல்" என்பது தேர்விற்கான (தெரிந்தெடுத்தல்) ஒரு முக்கிய ஆயுதமாக இருந்தது.

ஹென்றி கிஸ்ஸிங்கர் இற்கு இந்த உலகம் முக்கியமாக இந்தோசீனா ஒரு சதுரங்கப் பலகையாக இருந்தது. எந்த விலை கொடுத்தும் உலகம் தொடர்பான இவரது மதிப்பிடலை பரீட்சிக்க உயிரியல் மற்றும் வேதியல் போர்க்கூறுகளை உள்ளடக்கிய உயர் தொழிநுட்ப ஆயுதங்கள் மூலம் தம்மைத் தியாகம் செய்யும் பகடைக்காய்களாகப் பொதுமக்கள் பயன்படுத்தப்பட்டனர். இவருடைய இந்த மூளை விளையாட்டிற்காக மில்லியன் கணக்காணோர் தமது வாழ்வைத் தொலைத்துள்ளார்கள்.

போல் பெட் இற்கு போராட்டம் என்பது சுத்திகரிப்பை விட சிறிது அதிகமாக பட்டினி மூலமாகவும், அதீத வேலைத்திணிப்பு மூலமாகவும்,கால்வாசி மக்களை மரண தண்டனை மூலமாகவும் அழித்தல் என பொருள் கொள்ளப்பட்டது. இந்த மக்கள் செய்த ஒரே குற்றம் அவருக்கு முரணாகத் தமது வாழ்க்கையைப்பார்த்தது மட்டும் தான். அவர்கள் எவ்வளவு மென்மையானவர்கள் அல்லது இவர் எந்த அளவுக்குக் கீழ்த்தரமானவர் என்பதெல்லாம் அங்கு எந்த விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

ருவண்டாவில் அரை மில்லியன் கணக்கான பெண்கள் பாலியல் ரீதியாக சிதைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். இவர்களுடன் சம எண்ணிக்கையான ஹுட்டு மாநிலத்தின் எதிரியாக கருதப்பட்ட ஆண் ருட்ஸிகளும் கொல்லப்பட்டனர்.

**மெதுவான இனப்படுகொலை**

இவை மெதுவான கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கள். ஆனால் சில, தீவிரமான பாரியளவிலான படுகொலைகள், கற்பழிப்புக்கள், பட்டினியிடல் உள்ளடக்கிய மோசமான இனவழிப்பு நடவடிக்கைகளாகின்றன. பெரும் குவியலான உடல்களை உருவாக்கும் பாரிய பயங்கரமான வெடிகுண்டு அழிவுகளை மட்டும் இனவழிப்பாக கருதுவதில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் இனப்படுகொலைக்கான சட்டரீதியான வரைவிலக்கணம் 1948 இல் (இஸ்ரேல் உருவாகிய அதே ஆண்டு ) ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் உருவாக்கப்பட்டது. கீழ்வரும் செயல்கள் ஏதாவது ஒன்றையேனும் ஒரு தேசியத்தை ஒரு இனத்தை மொழியை அல்லது மதக்குழுவை முற்றாகவோ பகுதியாகவோ அழிக்க செயற்படுத்தினால் அது இனப்படுகொலையாகக் கருதப்படுகின்றது.

1) ஒரு குழுவிற்குள் அடங்கும் மக்களைக் கொன்றழித்தல்

2) அக்குழுவில் அடங்கும் மக்களை உடல்ரீதியாக அல்லது உளரீதியாக பாதிப்பிற்குள்ளாக்கி தீங்கு செய்தல்

3) முற்று முழுதாகவோ பகுதியாகவோ அக்குழுவுக்குள் வாழுகின்ற பௌதிகச் சூழலைப் பாதிப்பிற்குள்ளாக்கி அழிப்பதற்குத் தேவையானவற்றைக் கணிப்பிட்டு அதற்குரிய சூழ்நிலையை வேண்டுமென்றே அம்மக்களிடம் திணித்தல்.

இஸ்ரேல் எந்தவொரு பொறுப்புக் கூறலும் இல்லாமல் இதிலுள்ள ஒவ்வொரு செயலையும் நடத்தி பெருமையின் உச்சத்திலுள்ளது. 1948 முதலிருந்தே இஸ்ரேல் எண்ணிலடங்காக் கொடுமைகளை பலஸ்தீனத்திற்கு எதிராகப் புரிந்துள்ளது.

பாரிய வெளியேற்றம், கற்பழிப்பு மற்றும் படுகொலைகளை நக்பாவின் தொடக்கப்பகுதியில் ஆரம்பித்த இஸ்ரேல் 68 ஆண்டுகளாக இந்த இடைவிடா இனவழிப்பு நடவடிக்கைகளில் தன்னை அர்ப்பணித்துள்ளது. காற்று வாங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவது போல் தனது ஆயுதங்களை சீரமைக்கவும் மாற்றவும் மட்டும் சிறு இடைவெளியை எடுத்துக் கொள்கின்றது.

தம் மூதாதையர்களின் தாயகப்பகுதியிலிருந்து துப்பாக்கி முனையில் வெளியேற்றப்பட்ட ஏழு இலட்சம் பலஸ்தீனியர்கள் அகதிகளாயினர். இந்த இடம்பெயர்வு மேலும் தொடர்ந்து ஏழு மில்லியன் ஆக அதிகரித்துள்ளது.

**முடிவில்லாத வன்முறைகள்**

இத்தனை ஆண்டுகாலமாக இஸ்ரேல் நாலு இலட்சத்திற்கு மேற்பட்ட பாலஸ்தீனியப் பொது மக்களைக் கொல்லவும் அதை விட இரண்டு மூன்று மடங்கு அதிகமாக (பத்தாயிரக்கணக்கான பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளடங்கலாக) மக்களைப் படுகாயத்திற்கு உட்படுத்தி முடமாக்குவதற்காக பல்வேறு வழிகளைக் கண்டுபிடித்துள்ளது. பீரங்கிகள் மூலமாகவோ கொத்துக் குண்டுகள் மூலமாகவோ பொஸ்பரஸ் குண்டுகள் மூலமாகவோ பாதிப்பை உண்டு பண்ணல் என இவை எல்லாம் திட்டமிட்ட கொடூரமான குழுப்படுகொலைகளுக்கான புதிய வரைவிலக்கனத்தைக் கொடுக்கின்றன.

இஸ்ரேலின் அத்த பாலஸ்தீனிய இனவழிப்புத் தாகமானது ஜெனீவா உடன்படிக்கையில் நெறிமுறை 1 இல் கூறப்பட்டவற்றை மீறி பஞ்சம் பட்டினிகளை பாலஸ்தீனிய மக்களிடத்தில் உருவாக்கியது. இந்த வழியிலான போர் ஆனது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள உணவுப்பொருட்கள் , உணவுப்பயிர்கள் மற்றும் கால்நடைகளை இலக்கு வைத்துள்ளது.

மேலும் இந்தப் போர் ஒரு மில்லியன் ஒலிவ் மரங்களை அழித்துள்ளது. இந்த மரங்கள் பாலஸ்தீனிய கலாச்சாரத்தின் முக்கிய தூணாக மட்டுமல்லாது ஏனைய நூறாயிரக்கணக்காக அழிக்கப்பட்ட பழமரங்களுடன் சேர்த்து பாலஸ்தீனியர்களின் தேசிய பொருளாதாரத்தைத் தீர்மானிப்பதில் மிக முக்கிய பங்கு வகித்தன.

வரலாற்றுக் குற்றவாளிகளே வெட்கமும் பொறாமையும் கொள்ளுமளவுக்கு இஸ்ரேலானது தனது கொடூர புத்தியுடன் காஸாவிலுள்ள மருத்துவமனைகள், பாடசாலைகள், மழலைகள் பராமரிப்பு நிலையங்கள், பல அடுக்கு மாடிக்கட்டடங்கள், ஐக்கிய நாடுகளின் நிவாரண முகாம்கள் மற்றும் மனநல மருத்துவ மையங்கள் ஆகியவற்றை இலக்கு வைத்துத் தாக்கியது.

இந்த வன்முறைகள் ஆயிரக்கணக்கான கடின உழைப்பில் கட்டப்பட்ட வீடுகளை பாழடைந்ததாக மாற்றியுள்ளது.




இது பாலஸ்தீனியர்களை உள்நாட்டிலேயே இடம்பெயரவைத்து ஏதிலிகளாக்கி நட்டாற்றில் விட்டுள்ளது.

பாலஸ்தீனம் மீதான ஏற்றுமதித்தடைகளை கடந்த தசாப்தங்களாக ஏற்படுத்தியதன் மூலம் இஸ்ரேலானது காஸாவை வாழ்வதற்குத் தகுதியற்ற ஒரு பிரதேசமாக மாற்றியிருக்கின்றது. இந்த ஏற்றுமதித் தடையானது மக்களுக்கு கலோரிப் பற்றாக்குறை, தண்ணீர்ப் பற்றாக்குறை மற்றும் மருத்துவப் பற்றாக்குறை ஆகியவற்றை மட்டும் ஏற்படுத்தாது 1.8 மில்லியன் உயிர் தப்பிய மக்களிற்கு தேவையான கட்டட புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வேலைகளுக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களுக்கும் தடைகளை ஏற்படுத்தியது.

உடல்ரீதியான கொடுமைகள் புரிந்தும் திருப்தியடையாத இஸ்ரேல் உலகில் வேறு எங்கிலும் காண முடியாத மன உளைச்சலை ஏற்படுத்தும் மன வியாதிகளைத் தூண்டும் பெரும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துகின்றது. அனைத்து இனவழிப்பு நடவடிக்கைகளாலும் பாதிப்படைந்த காஸா 2020 ஆம் ஆண்டளவில் மக்கள் வாழ்வதற்கு உகந்ததல்லாத பிரதேசமாக மாற்றமடையும். இன்னொரு தடவை பல மில்லியன் கணக்கில் மக்கள் பாதிப்பிற்குள்ளாகி ஏதிலிகளாகி வீதியில் விடப்படும் ஆபத்தான புலப்பெயர்வை எதிர்நோக்குவர்.

1967 இல் நக்பா தொடங்கும் போது ஆரம்பித்து 531 கிராமங்களிலும் மற்றைய ஏனைய இடங்களிலும் மக்களை வெளியேற்றி முற்றாக அழித்ததோடு திருப்தியடையாமல் இஸ்ரேல் பெருமளவில் கிழக்கு ஜெருசேலத்தையும் மேற்குக்கரைப்பகுதிகளையும் ஆக்கிரமித்துள்ளது. ஜெனிவா உடன்படிக்கையில் நிபந்தனை 4 ஆனது, ஆக்கிரமித்த பகுதிகளில் ஆக்கிரமிப்பாளர்கள் தமது சொந்தப் பாதுகாப்பிற்காக தளங்களை உருவாக்குவதற்குத் தடை விதித்துள்ளது. ஆனால் இதையெல்லாம் மீறியே இஸ்ரேல் தன் நடவடிக்கைகளை நகர்த்தியுள்ளது. இந்த சட்ட விரோத நில அபகரிப்பு நடவடிக்கையில் இஸ்ரேல் 800,000 குடியேற்றவாசிகளுக்கு சட்ட விரோதமாக வீடுகளை அமைப்பதற்கு தேவையான நிதி உதவி செய்வதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது. அதேவேளை இது 50,000 பாலஸ்தீனிய வீடுகளையும் கட்டடங்களையும் அழித்து பத்தாயிரக்கணக்கான பழங்குடி மக்களை வீடற்றவர்களாக்கி ஏற்கனவே ஆதரவற்றவர்களிற்கு அடைக்கலம் கொடுத்து நிரம்பிவழியும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலேயே இவர்களும் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கியுள்ளது

**எப்போதும் போலவே எதற்கும் அடங்காத தன்மை**

இஸ்ரேலின் இந்த இழிவான கொடூரமான வரலாற்றை மிகைப்படுத்திக் கூறவும் ஆதாரமற்ற வதந்திகளாகப் பேசப்படுவதற்கும் எந்த காரணிகளும் துணை புரியாது. மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இஸ்ரேலில் நடப்பது இனவழிப்பு நடவடிக்கை எனத் திரட்டப்பட்ட பல ஆதாரங்களுடன் அடுத்த கட்டச் செயற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் கோரிக்கை விடுத்தாலும் அவை மேற்கொண்டு எந்த வித நடவடிக்கைகளுக்கும் இடமின்றி தொடர்கின்றன. உண்மையென்னவெனில் இஸ்ரேல் வெளியில் தெரியாத இனவழிப்புக்களை நடத்தவில்லை. வெளிப்படையாகவே அத்தனை கொடூர நடவடிக்கைகளையும் மேற்கொண்டு விட்டு உலகிற்கு நாங்கள் தான் இதைச் செய்தோம். நாங்கள் பன்னாட்டுச் சமூகங்களில் தற்போது நடைமுறையிலிருக்கும் சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என தம்மை வெளிப்படுத்தி ஆணவத்தோடு நடந்து கொள்கின்றது.

ஆம், பிரதமர் அவர்களே உங்கள் தணல் தெறிக்கும் சினம் கொண்ட உரையை மேலும் தொடராது நிறுத்தியிருக்க வேண்டும். இன்று இஸ்ரேல் சட்டரீதியான ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டதற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நாளை எல்லாம் சரியாகலாம். ஆனாலும் உண்மையில் இஸ்ரேல் தகுதிவாய்ந்தவர்களைக் கொண்ட பன்னாட்டுச் சமூகங்களின் நீதிக்கூட்டிற்குள் இனப்படுகொலைக்கான விசாரணையை எதிர் நோக்க வேண்டும்.

நான் சாகடிக்கப்படலாம்
ஆனால் ஒருபோதும்
தோற்கடிக்கப்படமாட்டேன்
**-சே.குவேரா -**

நான் தோற்றுப் போகலாம். அதன்
பொருள் வெற்றி சாத்தியமற்றது
என்பதல்ல
**-சே.குவேரா -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை மீட்க வீறு கொண்டெழ வேண்டுமெனின் எழுதாத வரலாற்றை உள்வாங்க முன் வர வேண்டும்!

## - வண்டார்குழலி -

**நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்**

**நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம்**

**ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்**

**இன்பமே எந்நாளும் துன்பமில்லை"**

இலங்கைத்தீவின் குடித்தொகையில் இரண்டாவது இடத்தைப் பெற்றதும் இலங்கைத் திருநாட்டின் காடுகளை வெட்டிக் களனிகளாக்கிப் பொருண்மியக் கூனை நிமிர்த்தத் தன்னைத் தேய்த்துக்கொண்ட ஓர் தேசிய இனத்தின் துன்பியல் வரலாறு பேசாப்பொருளாக, எழுதாத வரலாறாக அந்த மலை முகடுகளில் முடக்கப்பட்டுள்ளன. பிரித்தானியாவின் அருங்காட்சியகத்திலும் இலங்கை சுவடிகள் கூட்டுத்தாபனத்திலும் சுருண்டு கிடக்கின்றன. அன்று தொட்டு இன்று வரையிலும் கூட அசட்டையாக அலட்சியமாக மட்டுமல்ல, திட்டமிட்ட இரீதியாக மறைக்கப்பட்டும் மழுங்கடிக்கப்பட்டும் வருகின்றன. காயடிக்கப்பட்டது வரலாறு மட்டுமல்ல, தமிழர் என்ற இனத்துவ இரீதியாகவும் பிரதேச இரீதியாகவும் தான் என்று சொன்னால் மிகையாகாது. தன் சூழ்நிலை தகிப்பு தாங்க முடியாது, நிலை துடித்து, தலை நிமிர்ந்து எழும் போதெல்லாம் கருவறுக்கப்பட்டதுடன் நயவஞ்சகத்துக்குள்ளாக்கப்பட்டு அதல பாதாளத்துக்குள் தள்ளப்பட்ட தேசிய இனம் தான் மலையகத் தமிழ்த் தேசிய இனம். ஆனால் பாதிப்புக்களையும், அடக்கு ஒடுக்கு முறைகளின் வெண்மையையும் உணர்ந்திருந்த மலையகத் தமிழினமானது, எங்கெல்லாம் அடக்குமுறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் போராட்டங்கள் வெடிக்கின்றதோ அங்கெல்லாம் அவர்களுடனான போரட்டங்களில் தன்னை இணைத்துப் போராடித் தன்னை அழிவிற்குள்ளாக்கிய வரலாறுகளையும் கொண்டுள்ளது. உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்துக்கு இரண்டு பக்கத்திலும் அடி என்பது போல் இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினையில், இடம்பெற்ற இனவன்முறைகளில், உயிர், உடைமை எனத் தமது இருப்புகளை இழந்து இடப்பெயர்வுகளையும் சந்தித்தனர். ஆனால் அவை எவையும் சரியான முறையில் ஆவணப்படுத்தப்படவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்புகளைச் சுமந்து கொண்டு தமிழ்நாட்டுக்கு, வட-கிழக்குக்குப் போனவர்களில் மிஞ்சியவர்கள் மௌனமாக அழுதழுது அழுத்த வாழ்வினைத் தான் கழித்தனர். கழிக்கின்றனர். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் மலையகத் தமிழினத்தின் உரிமையுடனான இருப்பினை வலியுறுத்தும், பேரம் பேசும் தன்மைகளை அவர்களின் மேய்ப்பர்கள் எனச் சொல்லித்திரியும் கூட்டம் இதுவரையிலும் செய்ய முன் வரவில்லை.

1948ம் ஆண்டு மலையகத் தமிழரின் குடியுரிமையினைப் பறித்தமைக்கு இடதுசாரிகளுடனான கூட்டிணைவு பெரும் பங்கினை வகித்தது. அதன் பின்பு எழுந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முகிழ்ந்த அனைத்து இயக்கங்களிலும் வட-கிழக்குக்கு இடம்பெயர்ந்தவர்கள் மட்டுமல்ல மலையக மண்ணிலிருந்தும் பலர் இணைந்து கொண்டார்கள். மறைமுக உதவிகளை நல்கவும் அவர்கள் பின் நிற்கவில்லை. இன்றும் சிறைகளில் பலர் வாடுகின்றனர். போர்ப் பின்னடைவிற்குப் பின்னர், வடக்கில் அவர்கள் முகம் கொடுக்கும் அரசியல், பொருண்மிய, பண்பாட்டுப் பிரச்சினைகள் ஏராளம். அதே போல், மக்கள் விடுதலை முன்னணியில்(ஜே.வி.பி) 1971ம் 88 ம் ஆண்டுகளில் இணைந்து தம்மை இழந்தவர்கள் ஏராளம். ஆனால் மலையகத் தமிழர்களின் உரிமைப் போராட்டங்களில் யாரும் மனமுவந்து இணைந்து போராட முன் வரவில்லை. மலையகத்தமிழரின் வாழ்வில், நேரடி அடக்குமுறைகளும், காட்டிக்கொடுப்புகளும், மறைமுக இரண்டகங்களும் நிறைந்திருந்தன. எனினும் தத்தளித்துத் தள்ளாடித் தானாக தவழ்ந்து எழுந்து நின்று வாழும் நிலையைத் தானே வகுத்துக் கொண்டுள்ளது. எனினும், சிங்கள பௌத்த பேரினவாத பகைப் புலத்தில் அடிப்படை உரிமைகள் பல இழந்த நிலையில், தொடுவானம் போல பல பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் இருக்க, தமது இருப்பிற்கான போராட்டத்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக எதிர்கொண்ட வண்ணமே உள்ளார்கள் மலையகத்தமிழர்கள்.

இனம் அல்லது இனத்துவ சமூகமானது தன்னைக் காத்துக்கொள்ள மற்றவர்கள் உதவ வேண்டுமோ அல்லது உதவ வரவில்லை என்றோ புலம்பித் திரிவது அழகல்ல. தனது விடுதலையை உணரும் எந்த மனிதமும் அடுத்தவர் விடுதலையைப் பற்றிச் சிந்திக்கும் இயல்பை இயல்பாகக் கொண்டிருத்தல் என்பது இயற்கையானது என்பதற்காகவே அவற்றைத் தொட்டுக் காட்ட வேண்டியிருந்தது. தவிர, மலையகத்தமிழரைப் பொறுத்தவரை அவர்கள் மீதான அடக்கு ஒடுக்கு முறைகளுக்கு மூன்று பெரும் காரணங்கள் முதன்மைப் பங்கினை வகித்தன.

1. தமிழர்களாக இருந்தமை

2. அதிகம் தொழிலாளர் வர்க்கத்தினைச் சார்ந்தவர்களாக இருந்தமை

3. தமிழ்நாட்டிலிருந்து வந்தவர்கள்

(இந்தியர்கள் என அடையாளப்படுத்தப்பட்டவர்கள்)

பாம்பு கூட மிதித்தால் கடிக்கும். மென்மையான பசுக்கூட சினந்து சிலவேளை முட்டும் நிலைமை உண்டு. அப்படி இருக்க மலையகத்தமிழரின் மீதான தாக்குதல்களுக்கு எதிராக அவர்கள் போராடவில்லையா? ஏன் போராடவில்லை? என பல கேள்விகள் எழுந்தவண்ணமுள்ளன. ஏனெனில், அவர்களின் போராட்ட வரலாறுகள் பேசாப்பொருளாக இருக்கின்றன. இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. தொழிற்சங்கப் போராட்டமாக மட்டும் இல்லாமல், தமது உரிமைகளுக்காகவும் மொழிக்காகவும் போராடித் தமது இன்னுயிர்களை ஈகையாக்கியுள்ள வரலாறு அவர்கள் சார்ந்த மலையகத்தமிழினத்துக்குக் கூடச் சரிவரத்தெரியவில்லை என்பது தான் விந்தையிலும் விந்தை. தவிர, அந்தப் போராட்டங்கள் ஒன்றும், ஓரிரவிற்குள் தானாகத் தோன்றிவிடவில்லை. அதற்கு ஓர் வரலாறு உள்ளது. கருத்தியல் இரீதியாகக் கட்டப்பட்டு வளர்க்கப்பட்ட வரலாறு அது. இதைத் தவிர்த்து மலையகத்தைப் பார்ப்பது கட்புலனற்றவர் யானையைப் பார்த்தமைக்கு ஒப்பானதாகும்.

தமிழகத்தை தமது மரபாகக் கொண்ட மலையகத்தமிழர் தமது அரசியல், பொருண்மிய, பண்பாட்டுக் கோலங்களைத் தமிழகத்தின் சுவட்டிலிருந்தே வழியொழுகத் தொடங்கினர். காலங்கள் மாறும் போதும், உலக நடப்புகள் மாறும் போதும், கு(ச)முக மாற்றங்கள் நிகழ்கின்றன. ஆனாலும் வரலாறுகளை நாம் திரும்பிப் பார்க்கும் போது, நிகழ்வுகளை ஐயம் திரிபறக் கூறி வைக்க வேண்டியுள்ளது. அன்றைய சூழலில் திராவிடர் கழகம் தமிழ்நாட்டில் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிகரமான சக்தியாகத் திகழ்ந்தமையைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனாலும் திராவிட சிந்தனைக்குள் வீழ்த்தப்பட்டதனால் தமிழின மரபுகளை தமிழர்கள் இனங்காண மறந்ததும், திட்டமிட்டு மடை மாற்றம் செய்யப்பட்டதனால் தான், இன்று தமிழகத்தின் விடுதலையாகட்டும் ஏனைய தமிழர்களின் விடுதலையாகட்டும் பின்னடைவை அடைந்துள்ளது என்ற குற்றச்சாட்டுகளிலும், மீள் வாசிப்புகளிலும் உண்மைகள் இருக்கின்றன. எனினும் அன்றைய சூழலில் தமிழரல்லாத தந்தை பெரியாரால் முன் வைக்கப்பட்ட பகுத்தறிவு- சுயமரியாதைக் கொள்கையில், தமிழகத்தின் தொன்மரபின் தாக்கத்தினால் தமிழர் எழுச்சியும் ஊடுபாவாக உள்ளோடி இருப்பதையும் மறுப்பதற்கில்லை. அந்த வகையில் கொழும்பில் தொடங்கி மலையகம் வரை பரவி வட-கிழக்கு வரை விரிந்த இலங்கை திராவிட இயக்கம், தமிழகத்தின் மாற்றங்களை அப்படியே உள்வாங்கிக் கொண்டிருந்தாலும், தமிழகத்திலிருந்து மாறுபட வேண்டும் என்ற பலத்த உள்முரண்களை அமைப்புக்குள் ஏற்படுத்தியிருக்கின்றன. எனினும் இளஞ்செழியன் அவர்களின் தலைமையிலான திராவிட கழகம் பெரியாரின் திருமணத்தின் பின், திராவிட முன்னேற்றக் கழகமாக மாறி பின்னர், மண்ணின் மணத்துடனும் பிரச்சினைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காக இலங்கை திராவிட இயக்கமாகியுள்ளதை இங்கு முன் விளக்கமாகக் கூறி வைக்க வேண்டியுள்ளது.

1926 இல் தமிழகத்தில் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டது. 1932 இல் பெரியார் மொஸ்கோ பயணத்தை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பும் வழியில் கொழும்பு வந்தார். 1932.10.17 அன்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் தி.க தொடங்கி வைக்கப்பட்டது. சாதி ,மத மூட பழக்க வழக்கங்களுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கியது. விடுதலை, குடியரசு, மாலைமணி போன்ற வெளியீடுகள் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தின. 1946 இல் மலையகத்தின் கண்டி கடுகண்ணாவை கிரிமெட்டிய தோட்டத்திலிருந்து இரண்டாம் உலக யுத்தத்தின் போது பிரித்தானிய காலனித்துவ இராணுவத்தில் இணைந்து பணி புரிந்து விட்டு, வீடு திரும்பிய குணசீலன் என்பவர், பகுத்தறிவுக் கருத்தாக்கங்களினால் ஈர்க்கப்பட்டுத் தனது தங்கை சௌந்தரம்பாளின் வாழ்க்கை ஒப்பந்தத்தை பார்ப்பனரைத் தவிர்த்து சீர்திருத்த முறையில் நடத்துவதற்கு இளஞ்செழியன் அவர்களைக் கண்டிக்கு அழைத்தார். இதுவே மலையகத்தில் திராவிட கொள்கைகள் பரவ முதற்காரணியாகியது. இடைச்செருகலான இந்துத்துவக் கொள்கையினால் மூழ்கியிருந்த மலையகத்திலும் தொடக்கத்தில் எதிர்ப்புகள் தோன்றின. அதன் பின்னர் அவர்களின் செயற்பாட்டுத் தன்மைகளை உணர்ந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவினை வழங்கத் தொடங்கினர்.

திருக்குறள் மன்றங்கள் அமைத்து, மலையகமெங்கும் கிளைகள் அமைத்து மலையகத்தமிழர்களின் துன்பியல்களை நாடகக் கருவாக்கி மேடையேற்றி மக்கள் மத்தியில் கொண்டு சென்றனர். பார்ப்பனிய சாத்திர கபடங்களை எதிர்த்தல், மத மறுத்தல், சுய மரியாதை, பகுத்தறிவு என்ற பாதையில் தமிழ்மொழித் தூய்மையினைக் கடைப்பிடித்தலில் மிக உறுதியாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்படியான சீர்திருத்த விடயங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இவர்களின் செயற்பாடுகள், உலக மனித உரிமைகள் நாளன்று, 1948ம் ஆண்டு மார்கழி 10 அன்று மலையகத்தமிழர்களின் குடியுரிமைகள் பறிக்கப்பட்ட பின்னர் தீவிரம் பெற்றது.



நாளாந்த பிரச்சினைகளில் ஊன்றித் தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர். 1951



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் தமிழகத்தில் இடம்பெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டங்களுக்கு, இ.தி.முக ஆதரவு நல்கியதுடன், தமது உறுப்பினர்களை அங்கு அனுப்பி, மலையகத்தமிழரின் துன்பியல் செறிந்த வாழ்க்கையினை முன்னிறுத்தி, கொழும்பில் "கண்ணீர்" என்ற நாடகம் நிகழ்த்தி அதில் பெறப்பட்ட பணத்தினை தமிழக தி.மு.க விற்கு அனுப்பி வைத்த நிகழ்வுகளும் நடந்தேறிய போதும், இந்தியத் தலைவர்களை நம்புவதும் இந்திய அடையாளத்தை எமக்குள் வைத்திருப்பதும் கேடு என்பதையும், சென்னையிலிருந்தும் எமக்கான விடுதலை கிடைக்காது என மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பல செயற்பாடுகளை முன்னெடுக்கத் தொடங்கினர். பின்னர் தி.மு.க 1957 இல் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவெடுத்த பின்னர், இ.தி.மு.க கூடி தி.மு.க வுடனான தொடர்பினைத் துண்டிப்பதெனவும், இலங்கைப் பிரச்சினையில் மட்டும் தாம் ஈடுபடுவோம் எனவும் சுயமரியாதைக் கொள்கையினை முன் எடுப்பதெனவும் முடிவெடுத்தது என்பது முக்கியமான திருப்பமாகும். 1956ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிங்கள அரசமொழிச்சட்டம் என்ற விடயம் இ.தி.மு.கவின் செயற்பாட்டினை மென்மேலும் தீவிரமடையச் செய்தது. வெறுமனே தொழிற்சங்கப் போராட்டமாக இல்லாமல் அக்காலகட்டத்திலேயே மனித உரிமைப் போராட்டங்களை முன் எடுத்தது. தமிழ்மொழிக்கு சரி நிகரான உரிமைகளைத் தர வேண்டும் என மலையகத்தில் மட்டுமல்லாது சிங்களவர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களிலும் தமது போராட்டத்தினை முன்னெடுத்தது. வடகிழக்கிலும் தமது செயற்பாட்டினைத் தொடர்ந்தது. அங்குள்ள அரசியல் கட்சிகளுடனும் அமைப்புகளுடனும் இணைந்து போராட்டங்களை மேற்கொண்டது. அதனால் தென்னிலங்கையில் இனவாதம் தலை தூக்கியது. 1956 ம் ஆண்டு பண்டாரவளை சீவலி வித்தியாலயத்தில், தமிழ் மொழிக்கு சரிநிகர் உரிமை கோரி விழிப்புணர்வு கோரி தமது முதலாவது மாநாடு நடத்தப்பட்டது. தமிழ் மொழிக்குச் சமவுரிமை கொடு! இந்தியவம்சாவழிக்கு குடியுரிமை வழங்கு!நாட்டை சோசலிச பாதைக்கு கொண்டு செல்வோம்! என்பன போன்ற முழக்கங்கள் அடங்கிய பதாதைகளை மக்கள் சுமந்து சென்றனர். இவ்வூர்வலத்தை சிங்கள இனவாதிகள் தாக்க முயற்சி செய்தனர். இம்மாநாட்டைத் தொடர்ந்து, வட-கிழக்கிலும் தமது விழிப்புணர்வுக் கூட்டங்களை முன் எடுத்தது. மூன்று கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. அவையாவன சாதி ஒழிப்பு, இந்திய வம்சாவழிக்கு குடியுரிமை, தமிழ் மொழிக்கு சமவுரிமை என்பனவையாக இருந்தன. 1956.8.15 அன்று அரியாலை தமிழ் மகா வித்தியாலயத்தில் முதல் முதலாகத் தமது கூட்டத்தினை நடத்தினர். அங்கும் பகுத்தறிவுக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டுப் பகுத்தறிவு மன்றம், திருக்குறள் மன்றம் என அமைத்துச் செயற்பட்ட யாழ்ப்பாணத்து அறிவுசீவிகள் பலர் இவர்களுடன் இணைந்து செயற்படத் தொடங்கினர். யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் எனக் குமுகத்தால் கூறப்பட்ட மக்கள் மத்தியில் இ.தி.மு.க வேரூன்றத் தொடங்கியது. பருத்தித்துறை ,வட்டுக்கோட்டை, பலாலி,நெல்லியடி வேலணை, தொண்டமனாறு, உடுப்பிட்டி, கரவெட்டி, இமையாணன், கரணவாய்தெற்கு, கொடிகாமம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, புலோலி என ஒரே ஆண்டில் தமது கிளைகளை அமைத்தது. மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை போன்ற நகரங்களிலும் சிற்றூர்களிலும் கால் பதித்துச் செயலாற்றத் தனிச்சிங்களச்சட்டம் பெருங்காரணியாக அமைந்தது.

1957 இல் பருத்தித்துறைக் கடற்கரையில் கூட்டப்பட்ட கூட்டத்தில் சாதிய இரீதியாக மக்களைக் கயிறு கட்டிப் பிரித்திருந்ததன் காரணமாக, சாதிய முறைமையையும், கடவுள் கொள்கையையும் சாடி இளஞ்செழியனின் பேச்சு அமைந்திருந்தமையால், சாதியவாதிகளாலும் மதவாதிகளாலும் மேடையை நோக்கிக் கற்கள் வீசப்பட்டன. இரு தரப்பினருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. அப்படியான தொடர் செயற்பாடுகளினால் வட- கிழக்கில் செல்வாக்குப் பெற்ற இ.தி.மு.க வினருக்கு எதிராக அங்குள்ள மரபுசார்ந்த அமைப்புகள், சுதந்திரன் பத்திரிகை போன்றன எதிர்ப்பிரச்சாரங்களைச் செய்யத் தொடங்கின. இவ்வாறான எதிர்ப்புகளை முறியடிக்க அனைத்துத் தமிழ் மக்களையும் தம் பால் இழுக்க இ.தி.மு.க பின்வரும் கொள்கை விளக்கத் திட்டத்தினை முன் வைத்தது.

## இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகக் கொள்கை விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைத் தாயகமாகக் கொண்ட திராவிட மக்கள் (தமிழ் பேசும்) நலன் பேணிக்காப்பதே இ.தி.மு.கவின் குறிக்கோள்கள்.

**1. அடிப்படை நோக்கங்கள்**

பன்னெடுங்காலமாக அனுபவித்து வந்த உரிமைகளையிழந்து சொந்த நாட்டிலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக்கப்பட்டுள்ள இலங்கை திராவிட மக்களது (தமிழ் பேசும் மக்கள்) இழிவை மாற்றவும் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று சகல துறைகளிலும் சம வாய்ப்பும் சம சந்தர்ப்பமும் கிடைக்கச் செய்யவும் மத வேறுபாடற்ற முறையில் தமிழ் பேசும் மக்களை ஓரணியில் திரட்டுதலும்.

**2.நாடற்றவர்**

பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பதாக இந்நாட்டின் நிலத்தைப் பண்படுத்தவும் பொருள் வளத்தைப் பெருக்கவும் கொண்டுவரப்பட்டு அந்நாள் முதல் இந்த நாள் வரை வாழையடி வாழையாக இந்நாட்டின் உயிர் நாடியான பொருள் வளத்தைப் பெருக்கும் பெருந்தொழிலில் ஈடுபட்டுப் பிறப்பாலும் வாழ்நாள் முழு அளவாலும் இலங்கைக் குடிமக்களாக அங்கீகரிக்கப்பட வேண்டிய மலையகத் திராவிடத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கி இந்நாட்டு மக்களோடு கூடி வாழும் நிலையைச் சீரழித்து இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் அமைந்துள்ள போக்கை மாற்றி குடியுரிமை வாக்குரிமை பெற்ற இலங்கைக் குடிகளாக வாழ வகை செய்வது.

**3 மொழி**

தமிழ்மொழியை இரண்டாவது தேசிய இனமான திராவிட(தமிழ்த்தேசிய) இனத்தின் தேசிய அரசியல் மொழியாக அங்கீகரிக்கப்போராடுதல்.

**4.சமுதாயம்**

மொழி, கலை, பண்பாடு, மனோநிலை ஒரு குடிமக்கள் என்ற உணர்ச்சி வரலாற்று பாந்தத்துவம் போன்ற இயல்புகளால் ஓரின மக்களென்று தேசிய உணர்வோடு வாழ்ந்த திராவிட மக்களின் வாழ்வின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கவும், சீரழிக்கவும் இடையிற் புகுத்தப்பட்ட சாதிப் பிரிவினைகள் அவற்றை நம்ப உண்டு பண்ணிய புராணங்கள், இதிகாசங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள், திராவிட மக்களின் சிந்தனையைக் குழப்பவும் நிதானத்தையிழக்கவும் அறியாமையில் ஆழ்த்தவும் கற்பிக்கப்பட்ட கற்பனைக் கதைகள், முறைகள், ஏற்பாடுகள் போன்றவைகளை இயலால், இசையால், கூத்தால், எழுத்தால் களைந்தெறிதல், பிறப்பால் தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்ற மனப்பான்மையை அகற்றி ஒரே இனமக்களென்ற பழங்கால திராவிட மக்களது தேசிய வாழ்க்கை முறையை நிலை நாட்டுவதும் திராவிட மக்களுடைய சிந்தனையைப் பகுத்தறிவு அடிப்படையில் முறைப்படுத்தி விரிவு படுத்துவதும்.

**5 அரசியல் பொருளாதாரம்**

பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற இன,சாதி, சமய பேதமற்ற ஒரு சமதர்மக்குடியரசு அமைவு பெறுவதற்குத் துணை செய்தல். இவை இலங்கை தி.மு.க பொதுக்குழுவால் அங்கீரிக்கப்பட்ட அடிப்படைக் கொள்கைகளாகும்(16)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியில் அரச கரும மொழிச்சட்டம் அமுல்படுத்தப்பட்டபின், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பலைகளுக்கு, இ.தி.முகவின் இக்கொள்கை முன்னெடுப்பானது பெரும் வரவேற்பைப் பெற்றது. மாற்றுக்கருத்துடையோரும் இணைந்து செயற்பட இசைந்தனர்.எனினும் மொழிப்பிரச்சினை மற்றும் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாகத் தமிழரசுக்கட்சித் தலைவர். செல்வநாயகம் அவர்களுக்கும், பண்டாரநாயக்காவிக்குமிடையே நடந்த பேச்சு வார்த்தையின் போது, தமிழ்மொழி அமுல்படுத்தல் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் வட-கிழக்கு பகுதிக்கு மட்டும் இணக்கம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தும் வகையில் 1957.5.17 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்பதும் நினைவுகூரத்தக்கது. இது இ.தி.மு.கவை மட்டுமல்லாது பல முற்போக்காளர்களையும் திகைக்க வைத்தது. எது எப்படி இருந்த போதும் தொடர்ந்தும் சிங்களப் பேரினவாதம் அனைத்துத் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் மோசமான போக்கினைக் கொண்டிருந்ததால் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் ஒன்றிணைந்த போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமிருந்து வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. வட-கிழக்கைச் சார்ந்தோர் மலையகத்திலும் மலையகத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்தோர் வட கிழக்கிலும் மாநாடுகளில் சத்தியாக்கிரகங்களில் கலந்து கொண்டனர். மலையகத்திற்கு இராணுவத்தை அரசு அனுப்பும் நிலையும் எற்பட்டது. அரசியல் தலைவர்கள் பல சறுக்கல்களை கொண்டிருந்தாலும் மக்கள் ஒன்றுபட்ட சிந்தனைகளில் ஐக்கியமாகி இருந்தமையை குறிப்பிட்டாக வேண்டும்.

1962.4 21-22 அட்டனில் நடந்த இரண்டாவது மாநாட்டில் தமிழரசுக்கட்சியின் தலைவர் செல்வநாயகமும் ஏனையவர்களும் கலந்து கொண்டனர். வட-கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியொன்றும் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஓர் சீர்திருத்த இயக்கமும் ஒன்றுபட்டு, மொழியுரிமை, குடியுரிமை என்பவற்றுக்காக இணைந்து போராடுவோம் என சூளுரைத்தமை பௌத்த சிங்கள பேரினவாதத்தைக் கிலிகொள்ள வைத்தது. அதன் விளைவாக, தமிழக தி.மு.க வுடன் தொடர்புபடுத்தி இவர்கள் இங்கும் திராவிட நாடு கோரப் போகிறார்கள் என்று கூறி சிங்கள அரசியல் கட்சிகள் மட்டுமல்லாது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு சில உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில், இ.தி.மு கவை தடை செய்ய அழுத்தம் கொடுத்ததன் விளைவாக 1962.7.22 நள்ளிரவு அவசரகாலச் சட்டத்தினைப் பயன்படுத்தி இ.தி.மு.கவை சிறிமாவின் அரசு தடை செய்தது. அதன் பின்னர் இ.தி,மு.வின் பொதுச் செயலாளர் இளஞ்செழியன் உட்பட அனைவரும் தலைமறைவு வாழ்க்கையினைத் தொடர்ந்தனர். இவ்வேளை தமிழரசுக் கட்சியானது இ.தி.மு.கழகத்துடனான தொடர்பினைக் குறைத்துக் கொண்டது. அவர்களினூடாகக் கிடைத்த அறிமுகத்தைப் பயன்படுத்தி இலங்கைத் தொழிலாளர் கழகம் என தொழிற்சங்கத்தை உருவாக்கித் தோட்டத் தொழிலாளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தனர். தோழமை சிக்கலில் இருக்கும் போது, எவ்வித ஒத்தாசைகளையும் செய்யாத தமிழரசுக் கட்சியின் இந்நடவடிக்கையானது பல விமர்சனங்களுக்குள்ளானது.

1963ம் ஆண்டு அவசரக்காலச் சட்டம் நீக்கப்பட்டவுடன் இ.தி.மு.க வின் தடையும் நீங்கியது. அதன் பின்னர் 1963 இல் இந்திய பிரதமர் நேரு இலங்கை வருவதாகவும் சிறிமா அரசு அவருடன் நாடற்றவர் பிரச்சினை பற்றிப் பேசப்போவதான நிகழ்வுகள் இடம்பெறவிருந்தமையால், அவர்கள் இருவரும் எடுக்கும் முடிவு எமைக் கட்டுப்படுத்தாது என்பதை அவர்களுக்கு அறிவிக்கவும், நாடற்றவர் பிரச்சினை பற்றித் தமது முடிவைத் தெரிவிக்கவும் 1962.7.15 அன்று பண்டாரவளை நகர மண்டபத்தில் நாடற்றவர் மாநாடு நடத்த இ.தி.மு.க முடிவு செய்து மக்கள் மத்தியில் இப்படி விழிப்புணர்வு செய்தது.

**"அடிமைத்தளை தகர்க்க அனைவரும் திரண்டு வாரீர்"**

**இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம்**

**நாடற்றவர் மறுப்பு மாநாடு**

**"எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்"**

இம்மாநாட்டுக்கான பல விரிவான புரட்சிகரமான கொள்கை விளக்கங்களை இ.தி.மு முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இம்மாநாட்டினை ஊதிப் பெருப்பித்துக் குழப்புவதற்காகச் சிங்களப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளின. தமிழகத்தில் ஆதித்தனார் அவர்களால், தொடங்கப்பட்ட நாம் தமிழர் இயக்கம் இளஞ்செழியன் அவர்களின் தலைமையில் மலையகத்தில் இயங்குவதாகவும் சிங்களவர்களுக்கு ஆபத்து எனவும் சிங்களவர்களை அச்சமூட்டின. தவச, சவச, ரிவி தின போன்ற பத்திரிகைகள் இரகசியமாக நாம் தமிழர் உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் புற்கள் வளர்ந்த இடங்களில் காணப்படும் இரகசிய அறைகளில் பேச்சு வார்த்தைகள் இடம்பெறுவதாகவும், நாம் தமிழர் அமைப்பு இம்மாநாட்டுக்கான உணவுப் பொருட்களை நாம் தமிழர் உறுப்பினர்கள் வீடுகளில் பகுதி பகுதியாகக் களஞ்சிப்படுத்துவதாகவும் பரப்புரைகள் செய்தன.மலையகத்தமிழரின் மனித உரிமைகள் பிரச்சினைகளை முன்னிறுத்தி ஓர் தீர்மானத்திற்கு வருவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளைத் தடுக்கும் இரண்டக முயற்சிகளினால் தமிழரசுக்கட்சி, இடதுசாரிகள் உட்பட எந்த அரசியல் கட்சிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. ஆனலும் மாநாடு இடம்பெற்றது. சிங்களக் காடையர்களின் தாக்குதலுக்குப் பின்னரும் ஊர்வலம் நடத்தப்பட்டு மாநாடு நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடு முடிய மறைந்திருந்த சிங்களவர்கள் மாநாட்டுக்கு வந்தவர்கள் மேல் தாக்குதல்கள் தொடுத்தனர். பெண்களும் தாக்கப்பட்டனர். தமிழர்களின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. தமிழர்களும் எதிர்த்தாக்குதல்களில் ஈடுபட்டனர்.



அதனால் பண்டாரவளையைச்சுற்றி இனக்கலவரம் நடந்தது. நான்கு தமிழ் இளைஞர்களும், பதினொரு சிங்கள இளைஞர்களும் அபுத்தளை பங்கட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இப்படியான அனுபவங்களுக்குப் பின்னரே சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்திய பிராந்திய வல்லூறும் சிங்களமும் இலட்சக்கணக்கான மக்களை கண்ணீரும் கம்பலையுமாக நாடு கடத்தும் திட்டத்தினைச் செயற்படுத்தினர். இரண்டாவது முறையாக மலையகத்தமிழினம் மிகமிக மோசமாக வஞ்சிக்கப்பட்டது. அதன் பின்னரும் திட்டமிட்ட பல கோரங்களைச் சந்தித்தது. இப்பின்னணியில், மலையகத்தமிழினம் பல போராட்டங்களையும், உயிர் ஈகங்களையும் ஈந்துள்ளது. 1939 இல் முல்லோயா கோவிந்தன் முதன் முதலாகக் களப்பலியானார். பல வீரியம் மிகுந்த போராட்டங்களில் வீழ்ந்து போனவர்கள் பலர். 1958ல் சிங்கள "ஸ்ரீ" எழுத்து எதிர்ப்புப் போராட்டத்தில், பொகவந்தலாவை கொட்டியாகொலை தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களான பிரான்சிஸ், அய்யாவு என்ற இளம் கன்றுகளின் உயிர் காவு கொடுக்கப்பட்டுள்ளது. சிறிமா இடதுசாரிகளின் கூட்டு அரசியலில் மலையகத்தமிழினத்தின் மண் பறிப்புக் கொள்கை முன்னெடுக்கப்பட்டுத் தொழிலாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டார்கள். டெவன் தோட்டத்தில் ஏழாயிரம் ஏக்கர் காணி அபகரிக்கும் திட்டத்திற்கு எதிராகப் போராட்டம் வெடித்தது. ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என அனைவரும் போராடினர். இந்நிலையில், 1977 ஆம் ஆண்டு பதினெட்டு வயது இளைஞனான சிவனு இலட்சுமணன் தன் இன்னுயிரை ஈந்து மண் காத்து மாவீரனானான். இப்படி எத்தனையோ போராட்டங்களையும் துன்பங்களையும் தாங்கி, தாண்டி மலையகத்தமிழினம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அன்றுள்ள நிலையை விட இன்று பாரிய சவால்களையும் பிரச்சினைகளையும் கொண்டுள்ள மலையகத்தமிழினம் மாலுமி இல்லாக் கப்பலாகத் தடுமாறிக்கொண்டிருக்கிறது. திட்டமிட்ட கட்டாயக் கருத்தடை காரணமாக இனத்துவப் பிறப்புச் செறிவைத் தொலைத்து நிற்கிறது. அடையாளம் தொடர்பான விடயத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையிற் தமது இன விகிதாசாரத்தின் உண்மைத் தொகையினை இழந்து நிற்கிறது. தோட்டத் தொழிற்துறை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படாமையினால் உரிமைகள் மறுக்கப்பட்டு ஊமையாய்த் தவிக்கிறது. இழப்புகளும் தவிப்புகளும் நீண்ட நாட்கள் நீடிக்காது என்பதே வரலாறு என்பதை, சிங்கள பௌத்த பேரினவாதமும் அதனை அடிவருடி நக்கிப் பிழைக்கும் அரசியல் தொழிற்சங்கவாதிகளும் உணரும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதைக் கூறி வைக்க வேண்டியுள்ளது.

"நாம் யாருக்கும் குடியல்லோம்" எனும் முதுமொழி எக்கருத்தாக்கத்தினைக் கொண்டதாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்! ஆனால் மலையகத்தமிழினத்திற்கு அன்றும் இன்றும் என்றும் அழுத்தமான மொழியாக இருந்திருக்கிறது. இருக்கிறது. இருக்கும். ஏனெனில், வாழ்க்கையே போராட்டமாகி உழைத்துக் களைத்து உருவேறிய உடற்பலமும் உளப்பலமும் அதனிடம் உள்ளது. தொடர் வஞ்சிப்புத் தொடர்ந்தால் இளைய மலையகம் எழ வேண்டும் என்பதே தனை ஈந்து மண் காத்தவருக்கு நாம் செய்யும் ஈகம் என்பதை உணர வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலை நோக்கிய தாய்த் தமிழ்நாட்டின் இயங்காற்றல் குறித்த மீளாய்வு

**- நெடுஞ்சேரன் -**

**ஒரே மரபினத்தைச் சார்ந்த இரத்த உரித்துகள் என்ற உடன் பிறப்பு உணர்வாலும் இந்திய அரச பயங்கரவாதத்தால் வஞ்சிக்கப்படும் விடுதலை வேண்டி நிற்கும் இரண்டு தேசிய இனங்கள் என்பதாலும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் வாழ்பவர்கள் என்ற நெருக்கத்தாலும் ஈழ விடுதலையும் தமிழ்நாட்டு விடுதலையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன.**

தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு என்பதாக தமிழீழ விடுதலைக்காக அந்த மண்ணிலுள்ளவர்களால் அந்த மண்ணிலிருந்து மட்டுமே உறுதியாகப் போராட முடியும். தமிழ்நாட்டில் அதற்கான தார்மீக ஆதரவுத் தளத்தைக் கட்டுவதோடு தமிழினப் பகையான இந்திய அரசை எதிர்த்தே போராட முடியும். அதே போல், தமிழ்நாட்டு விடுதலைக்காக அந்த மண்ணிலிருந்து அந்த மக்களாலேயே போராட முடியும். எண்ணிக்கையில் எவ்வளவு பெரும்பான்மையினராக தமிழ்நாட்டுத் தமிழர்கள் இருப்பினும் முப்பதாண்டுகள் ஆயுதந்தூக்கிப் போராடியமையால் பெற்ற ஆற்றல்களினையும் படிப்பினைகளையும் பயன்படுத்தித் தாய்த் தமிழ்நாட்டுத் தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக ஈழத்தமிழர்களால் தார்மீக ஆதரவினைக் கொடுக்க முடியும். ஒரு இனவழிப்பிற்குட்பட்டு வெந்து போய் எஞ்சி நிற்கும் ஈழத் தமிழினம் இன்று உலகெங்கும் ஏதிலிகளாகப் பரந்து வாழினும் தமிழர்கள் எங்கேனும் பாதிக்கப்பட்டால், தாம் ஏதிலிகளாக அலையும் நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களை முற்றுகையிட்டுப் போராடுவது என்ற எச்சரிக்கை உணர்விற்கு வந்து விட்டனர் என்பது கர்னாடகாவில் தமிழர் தாக்கப்பட்ட போதும் ஆந்திராவில் 20 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போதும் உலகெங்கிலும் உள்ள இந்தியத் தூதரங்கள் முற்றுகையிடப்பட்டுப் போராடப்பட்டமையிலிருந்து துலாம்பரமாகின்றது. தமிழ்நாடு விடுதலை குறித்து சிறிதும் ஈழத்தமிழர் பேசுவதில்லை எனக் குறைப்பட்டு வந்த தமிழ்நாட்டுத் தமிழ்த் தேசியர்கள் தமது மனக்குறை தீர்ந்துவிட்டதாகவும் இவ்வாறான புத்தெழுச்சி மாற்றங்கள் தமக்குள் இருக்கும் விடுதலை உணர்வை வீறுகொண்டெழச் செய்வதாகவும் உணர்ச்சிப் பெருமிதத்துடன் கருத்துகளைப் பகிருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

தமிழ்நாட்டில் தமிழின உணர்வும் தமிழ்த் தேசிய உணர்வும் வீறுகொண்டு எழுச்சி பெறத் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏதுவாய் இருந்தது. ஆனால் தனித் தமிழ்நாட்டு முழக்கங்கள் தமிழீழத்தில் தனிநாட்டுக் கோரிக்கை ஏற்படுவதற்கு முன்பே ஆரம்பித்து விட்டன. மறைமலை அடிகளார், தேவநேய பாவாணர், ஆதித்தனார், பெருஞ்சித்திரனார், புலவர் கலியபெருமாள், தமிழரசன் எனத் தொடர்ச்சியாகத் தனித் தமிழ்நாடு கோரிய முழக்கங்கள் தமிழ்நாட்டில் 1930 களின் இறுதியிலிருந்தே வலுப்பெற ஆரம்பித்து விட்டன. தமிழீழம் தமிழினத்தின் இன்னுமொரு நாடு என்ற உணர்வும் உரிமையும் தமிழகத் தமிழர்களுக்கு எப்போதும் இருக்க வேண்டும். மலையகத் தமிழர்களின் இன்னல்கள் குறித்து தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள் 1980 களின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது, உலகில் எங்கேனும் தமிழர்கள் அடக்குண்டிருந்தால் மலரப் போகும் தமிழீழம் வந்து தமிழீழக் குடிமகன்களாக வாழலாம் என்று குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டுவது தமிழின ஒருமைப்பட்டினைக் கோடிட்டுக் காட்ட உதவுவதாகவிருக்கும்.




ஈழத் தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் என்ற மிகவும் தொன்மமான மரபினத்தைச் சார்ந்த உலகின் மிக மூத்த குடியினர். தமிழீழத் தமிழ்த் தேசியம், மலையகத் தமிழ்த் தேசியம் என இரண்டு தனித்தனித் தேசியங்களாக இலங்கைத் தீவிலும் தமிழ்நாட்டில் தமிழ்நாட்டுத் தமிழ்த் தேசியமாகவும் உலகின் மூத்த மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு வாழும் உலகின் மூத்த குடியான தமிழர் என்ற மரபினத்தினை, ஆரியச் சித்தாந்தத்தில் கட்டியமைக்கப்பட்டுள்ள இந்தியாவானது தனது வாழ்நாள் பகையாகக் கருதித் தமிழின விரோதச் செயற்பாடுகளைத் திட்டந்தீட்டிச் செயலாற்றி வருகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தொடக்க காலத்திலிருந்து தமிழ்நாட்டிலுள்ள தமிழுணர்வுச் செயற்பாட்டாளர்கள் தார்மீக உதவிகளை வழங்கினார்கள், மிகச் சிலர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தும் போராடினார்கள். இராசீவ் சாவின் பின்னர் இப்படிப் பல இனவுணர்வுச் செயற்பாட்டாளர்கள் வேட்டையாடப்பட்டார்கள். சிறைப்பட்டார்கள். உளவுத்துறையின் தாங்கொணாத் தொடர் துன்புறுத்தல்களுக்கு உள்ளானார்கள். 1995ம் ஆண்டு யாழ்மாவட்டத்திலிருந்து 5 இலட்சம் மக்கள் வெளியேறியபோது தமிழ்நாட்டு அரசிடம் அவர்களுக்கு ஆதரவு கேட்டு 15-12-1995 அன்று அப்துல் ரவூப் திருச்சியில் தீக்குளித்தார். இவரே, ஈழத் தமிழர்களுக்காக தமிழ்நாட்டில் முதன் முதலாக தன்னைத் தானே எரியூட்டிக் கொண்டவர். நெய்தல் நில மக்கள் இறுதிவரை தமிழீழ மக்களுக்குத் தேவையான கள மருத்துவப் பொருட்களையும், எரிபொருட்களையும் உணவுகளையும் தமது உயிர் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது அனுப்பி வைத்தனர்.

தமிழ்நாட்டில் பெருமளவு மக்கள் தமிழின உணர்வின் பாற்பட்ட அரசியலில் தெளிவற்று இருக்கும் நிலைகண்டு பொறுக்க முடியாமல், மக்களைத் தெளிவுபடுத்தி எழுந்து போராட வைப்பதற்காக ஈகி முத்துக்குமார் தீக்குளித்துத் தன்னை ஆகுதியாக்கி விடுதலைச் செம்மல் ஆனார். இப்படி எப்பேர்ப்பட்ட உயர்ந்த தியாகங்களைச் செய்யினும் இவை எல்லாம் தமிழீழ ஆதரவுப் போராட்டங்களாகவே வகைப்படுமேயன்றி, தமிழீழ விடுதலைப் போராட்டச் செயற்பாடுகளெனில் அது அந்த மண்ணிலிருந்து அந்த மண்ணிற்குரிய மக்களால் மட்டுமே முன்னெடுக்க முடியும்.



தமிழகத்தை மாறி மாறி ஆண்டு வரும் இரு பெரும் திராவிடக் கட்சிகளும் ஈழச் சிக்கலைத் தமது நலன்களுக்கேற்ப பயன்படுத்திக் கொண்டு தமது போக்கிரித்தனங்களை அரங்கேற்றும் அதேவேளை, தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவுக் கட்சிகளோ இந்த இரண்டு திராவிடக் கட்சிகளுடனும் சேர்வதும், தேர்தல் பாதை திருடர் பாதை என்று கூறித் தம்மைக் கொள்கைக் குன்றுகளாகக் காட்டும் அமைப்புகளோ தமது இருப்பிற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதாவதொரு அணியை ஆதரித்துச் சந்தர்ப்பவாத அரசியல் நடத்துவதுமாய் தமிழ்நாட்டு அரசியல் நகருகின்றது. இதில் முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னர் உருவான "நாம் தமிழர்" என்ற கட்சி தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுத்திருப்பினும் தமது வரையறுகளுக்குட்பட்டு இயலுமான வரையில் தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கூறுகளைத் தானும் பேசு பொருளாக்கி, பெரிய ஊடக பலமுமில்லாமல் தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் அந்த அரசியலை எடுத்துச் செல்ல அரும்பாடுபட்டு வருகின்றது. அத்துடன் அந்தக் கட்சி தேர்தல் அரசியலில் இருப்பினும் எவருடனும் கூட்டுச் சேராமல் தனித்து நின்று இதுகாலவரையிலும் தவறான கூட்டணிக்குச் சென்று திசை மாறாமல் ஓரளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்கோட்டில் பயணிப்பதானது தமிழ்த் தேசிய அரசியலை நேசிப்பவர்களுக்கு ஓரளவேனும் ஆறுதலாகவுள்ளது. எனினும் இந்திய அரசியலமைப்புக்கு உட்பட்டு இருக்கும் ஒரு தேர்தல் அரசியலில் இருக்கும் கட்சி எதுவரை தனது பயணத்தைக் கொண்டு சேர்க்குமோ என்ற பதைபதைப்பு தமிழ்த் தேசியத்தை நெஞ்சில் தாங்கும் ஒரு சாராரிடம் இருக்கவே செய்கின்றது.

ஈழத்தமிழர்களின் அழிவில் தனது வாரிசுகளின் எதிர்காலம் குறித்து டெல்லியுடன் பேரம்பேசலில் ஈடுபட்டிருந்த நரியார் திருவாளர். கருணாநிதி அவர்கள், காலை உணவுக்கும் மதிய உணவுக்குமிடையில் உண்ணாவிரதமிருந்து நாடகமாடி ஒட்டுமொத்த தமிழரையும் தனது நடிப்பாற்றலால் எள்ளி நகையாடினார்.

இந்திராகாந்தியின் அவசரகாலநிலை அடாவடிகளினால் ஏற்பட்ட அவலங்கள் அடங்குவதற்கு முன்பாகவே காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தும் பின்னர் மாந்த குல விரோதியான பா.ஜ.கவுடன் கூட்டுச் சேர்ந்து குஜராத் படுகொலையின் பின்னரும் இன்னும் கெட்டியாகப் பா.ஜ.க கூட்டணியில் நிலைத்திருந்த பகுத்தறிவுப் பகலவன் பாசறையில் வளர்ந்த கருணாநிதி அவர்கள் மாநில அதிகாரங்களுடன் மத்திய அரசின் அமைச்சுகளைப் பெற்றுப் பல்லாயிரம் கோடி தொழிற்றுறைகளை தன்வசப்படுத்தி, தனது குடும்பத்தை ஒரு தரகு முதலாளித்துவக் குடும்பமாக்கினார்.

*1991* தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதற்கு ராசீவ் காந்தி துண்டு துண்டாகிச் செத்ததைப் பயன்படுத்திக் கொண்ட செயலலிதா அம்மையார் 40 தொகுதிகளையும் தனக்கு வழங்கினால் பிரதமர் பதவியைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்து தமிழீழம் வாங்கித் தருவதாகச் சொல்லி இனவழிப்பில் வகைதொகையின்றி ஈழத்தமிழர் மடிந்து கொண்டிருந்ததிலும் தனக்கான அரசியல் அறுவடை செய்தார்.

*10* இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமைகளைப் பறித்து, அவர்களை நாடற்ற ஏதிலிகளாக்க முயன்ற சிங்கள அரசிற்குத் துணை நின்றதும், தனது மேலாதிக்கத்துக்கு உடன்படச் செய்வதற்காக தமிழீழ- தமிழகத் தமிழர்களின் இணைப்புப்பாலமான கச்சதீவை சிங்கள அரசிற்குத் தாரை வார்த்துக் கொடுத்ததும், ஈழப்போராளிகளுக்கு உதவுவதாக ஏமாற்றித் தனது பிராந்திய மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக அவர்களைக் கூலிப்படைகளாக்க உளவுத்துறை மூலம் வேலை செய்ததும், ராசீவ்- ஜே.ஆர். ஒப்பந்தத்தைத் தமிழர் மீது திணித்து அதனை ஏற்க மறுத்த புலிகளை அழிப்பதெனக் கங்கணம் கட்டி நின்றதும், ராசீவ் சாவினைக் காரணம் காட்டி ஈழ ஆதரவாளர் மீது அடக்குமுறையை ஏவியதுமான காங்கிரசுடன் கூட்டணி வைத்துக் கொண்டு தமிழகத்தில் அரசியலில் ஈடுபட முடிகின்றதெனின், இதுகால வரையிலும் தமிழக அரசியலில் ஏற்பட்ட மாற்றந்தான் என்னவென்ற சினத்துடன் வெளிவரும் வினாவுக்கான பதிலை நேர்மையாகச் சொன்னால் தமிழர்கள் நாம் மொட்டாக்குடன் தான் திரிய நேரும்.

ராமதாஸ், திருமாவளவன், வைகோ, நெடுமாறன் போன்ற பெருந்தகைகள் இந்தியாவின் தலையீட்டைக் கோரித் தமிழரைக் காப்பாற்ற வேண்டுவதானது, விரைவில் போரை முடித்து அதன் பின்னரான அபிவிருத்திப் பணிகளில் தமது ஆளும் வர்க்கத்திற்கான பங்கு பிரிப்பில் இன்னும் இன்னும் அதிகமாக ஒதுக்கும் படியும் ஏனெனில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பை அடக்கத் தாம் அரும்பாடுபட்டதாக சொல்லும் நிறை பலன் அடையத் தக்கவாறு சிறிலங்காவுடன் பேசுவதற்கு இந்திய அதிகாரிகள் கொழும்பு செல்ல நல்வாய்ப்பை இந்தியாவிற்கு வழங்குவதோடு, ஏதோ தமது இராசதந்திரம் மூலம் இந்திய அதிகாரிகள் சிறிலங்கா சென்று பாரிய அழுத்தத்தை சிங்கள அரசிற்கு வழங்குவதாக ஒரு மாயத் தோற்றத்தை வழங்கி ஒட்டுமொத்த தமிழர்களையும் கேனையர்களாக்கவும் செய்தது. போர் நிறுத்தம் என்ற கோரிக்கை தமிழகத்தில் வலுப்பெறத் தொடங்கிய போது, அத்தகைய போராட்டங்கள் இந்திய மேலாதிக்கத்துக்கு எதிராக மாறிவிடாமல் தடுக்கும் நோக்கில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி, காங்கிரசுடன் சேர்ந்து மனித சங்கிலிப் போராட்டம் நடத்திய கருணாநிதியின் கபட நோக்கத்தைத் தோலுரித்துக் காட்ட இங்கிருந்த ஈழ ஆதரவு அமைப்புகள் ஏன் துணிந்தெழவேயில்லை?

ஈகி முத்துக்குமாரின் தீக்குளிப்பும், வழக்கறிஞர்கள் போராட்டமும் தமிழகத்தில் ஈழ ஆதரவு உணர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன. அதனால் ஏற்பட்ட மாணவர்களின் எழுச்சியைத் தங்களுக்கான அரசியல் அறுவடைகளாக்கும் நோக்கில் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ ஆதரவு இயக்கங்களும் செயற்பட்டு வந்தன. விடுதலைப் புலிகளின் அறிவிக்கப்படாத அதிகாரபூர்வ பிரதிநிதிகளைப் போல நடந்து கொள்ளத் தொடங்கிய தமிழகத்திலிருந்த ஈழ ஆதரவு அமைப்பின் தலைமைகள் ஈற்றில் தமிழீழத்தின் கொள்கை வகுப்பாளர்கள் போலவும் பீற்றலாயினர். இன விடுதலைக்கான அணி திரட்டலை இவர்கள் யாரும் செய்யவேயில்லை.

இவ்வாறாக பா.ம.க, ம.தி.மு.க, வி.சி.க போன்ற கட்சிகள் இந்தியாவை மனிதாபிமான முறையில் தலையிட்டு தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்கக் கூறுவதன் மூலம் இந்தியாவின் சிறிலங்கா மீதான மேலாண்மைக்கு வழி தேடிக் கொடுக்கும் ஏமாற்று அரசியலுக்கப்பால் விடுதலை அரசியல் நோக்கி எந்தவொரு வேலைத் திட்டத்தினையும் செய்யவில்லை.செத்து மடிந்து கொண்டிருந்த ஈழத்தமிழ் மக்களிற்கு 2009 இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தல் ஒரு விடிவைத் தரப்போவதாக ஒரு போலி நம்பிக்கை ஈழத்தமிழர்களிற்கு இந்த அமைப்புகளால் ஊட்டப்பட்டது. ஆனால், ஈழத்தமிழர்களுக்கான ஆதரவு தமிழகம் எங்கும் ஒரு எழுச்சியின் வடிவமாக எங்கும் வியாபிப்பதாகச் சொல்லப்பட்டதற்கு முற்றிலும் மாறுபட்டதாகவே தேர்தல் முடிவுகள் அமைந்தன.



ஆளும் வர்க்கங்களினால் தீர்மானிக்கப்படும் அரசியல் பொருண்மிய கொள்கைகளின் விளைவாக சொந்த மண்ணிலிருந்து தமிழ்நாட்டு மக்களை வெளியேற்றி அதனைப் பன்னாட்டு முதலாளிகளுக்கு உறுதி எழுதிக் கொடுக்கும் சுரண்டல்களைத் தடுத்து நிறுத்த மக்களை பெருந்திரளாய் அணி திரட்ட வக்கற்றவர்களால் திக்கற்று நிற்கும் ஈழத்தமிழர்களுக்காக என்ன தான் செய்து விட முடியும்?

தமிழர்களின் தேசிய உரிமைகளை மறுதலித்து சிறிலங்காவின் மீதான மேலாதிக்கத்திற்காக அவாப்பட்டால், ஈற்றில் தமிழகத்தையே இழக்க நேரும் என்ற பீதியை ஆளும் வர்க்கங்களிற்கு ஏற்படுத்துவதை விடுத்து, விளைவேதும் கிடைக்கப் பெறாத உப்புச்சப்பற்ற விசிலடிச்சான் அரசியல் செய்வதில் என்ன பயன்? ஈழத்தமிழினத்தின் தன்னுரிமைக் கோரிக்கை என்ற அடிப்படைப் புரிதலை தமிழக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லாமல், ஈழத்தமிழர் சிக்கலை தமிழ்த் தேசியச் சிக்கலாக எடுத்துக் கூறாமல், வெறுமனே அரசியல் நீக்கஞ்செய்யப்பட்ட விளைதிறனான அரசியற் பெறுதியை ஏற்படுத்த இயலாத உணர்ச்சியை மட்டும் தூண்டி எந்தப் பலனும் இல்லாமல் அடங்கச் செய்யும் வெற்றுக் கோசங்களை எழுப்பி, இந்திய அரசு ஈழச்சிக்கலில் தலை இடுவதற்கு தக்கவாறு ஒரு காரணத்தை உருவாக்கிக் கொடுப்பவர்களே இந்த ஈழ ஆதரவு பேசி மாறி மாறிக் கூட்டணி சேரும் அல்லது மாற்றி மாற்றி ஆதரவு தெரிவிக்கும் ஈழ ஆதரவுத் தமிழக அமைப்புகள் எனச் சொல்லின் தவறேதுமில்லை.

ஈழ மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காக ஈழ ஆதரவு அமைப்புகள் என்போர் எடுத்துக்கொண்ட சித்தாந்தம் என்ன? அந்தச் சித்தாந்தத்தினை மக்களிடம் எடுத்துச் செல்லும் நடைமுறை என்ன? ஈழ விடுதலை நோக்கிய வேலைத் திட்டங்களை முனைப்புறுத்த விடாமல் உள்ளிருந்தும் வெளியிருந்தும் இடையூறு செய்யும் எதிரிகள் யார்? இந்தத் தேசிய இன விடுதலை குறித்து நட்புச் சக்திகளாக இருக்க வல்லோர் யார்? போன்ற விடுதலை அரசியல் வேண்டிய நகர்வுக்கான எந்தவொரு அடிப்படையும் இன்றி எப்படித் தான் இவர்களால் ஒரு சிறு துரும்பைத் தானும் ஈழ விடுதலைக்காக பயனுறுதியுடன் நகர்த்த முடியும்?

இந்திய பிராந்திய மேலாதிக்க அரசை எதிர்த்துப் போராடுவதும் அதன் பொருட்டுப் பிற தேசிய இன விடுதலை இயக்கங்களினதும் தேசிய இன விடுதலையின் மாண்பினை மதிக்கும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவையும் திரட்டுவதல்லவா சரியான நடைமுறை?

தமிழ்நாட்டிலும் இந்திய ஒன்றியத்தில் கட்டுண்டு கிடக்கும் பிற மாநிலங்களிலும் சேர்த்து மொத்தமாக எட்டரைக் கோடி தமிழர்கள் வாழ்கின்றனர். இந்திய ஆளும் வர்க்கங்களும் அவற்றின் நலனை உறுதிப்படுத்துவதை முதன்மைப் பணியாகக் கொண்ட இந்திய அரசும் மிரளும் படியாக எந்தவொரு மக்கள் திரள் போராட்டத்தையும் கட்டியமைக்கும் வல்லமையில்லாமல் எண்ணிக்கையில் பெரிதான எட்டரைக் கோடி தமிழர்களை வைத்துக் கொண்டு இங்குள்ள ஈழ ஆதரவு அமைப்புகள் பயனுள்ள எதையும் சொல்லும்படியாகச் செய்யாமல் வெறும் அடையாளப் போராட்டங்களை நடத்துவதன் மூலம் தமது ஆற்றலினளவு எச்சிறியதென்பதை வெளிக்காட்டி விட்டனர். மனித சங்கிலி போராட்டம் போன்ற அனுமதிக்கப்பட்ட போராட்டங்களை விடுத்து ஈகிகளின் தீக்குளிப்புத் தியாகங்களைக் கூட பெரும் எழுச்சி மிகு மக்கள் திரள் போராட்டங்களாக வளர்த்தெடுத்து ஆளும் வர்க்க நலன்களுக்கு கேடாக நடந்து அவற்றை மிரளச் செய்ய வக்கற்றவர்களாகவோ இல்லை விரும்பாதோர்களாகவோ தான் ஈழ ஆதரவு பேசும் தமிழக அமைப்புகள் இருந்து வந்துள்ளது.

அன்புமணியும் வேலுவும் அமைச்சர் பதவியினை டெல்லியில் அனுபவிக்கையில் கருணாநிதியை பதவி விலகச் சொல்லி ராமதாஸ் அவர்கள் கோரியதிலிருந்து அவர் கருணாநிதிக்குச் சற்றும் சளைத்தவரல்ல எனத் தமிழ் மக்கள் உணரத் தலைப்படலாயினர்.

கருணாநிதியுடன் கூடவேயிருந்து அவரின் எல்லா நாடகங்களையும் பூசி மெழுகி அவரின் மூத்த மகனாக நடந்துகொண்ட திருமாவளவன் அவர்கள் ஈகி முத்துக்குமாரின் இறுதி நிகழ்வின் எழுச்சியை அடக்க எவ்வாறு கேவலமாக நடந்து கொண்டார் என்பதிலிருந்தும், "அன்னை சோனியா வாழ்க" எனப் பரவசமாகிக் குரல் கொடுத்ததிலிருந்தும், தமது வளர்ச்சிக்கான ஆரம்பகாலத்தில் புலிகளின் பெயரை எல்லா இடத்திற்கும் எடுத்துச் சென்று தமது வளர்ச்சியை உறுதிப்படுத்தி தன்னை தீவிர புலியாக மக்களுக்குக் காட்டிக் கொண்டு, விடுதலைப் புலிகள் வெள்ளாள மேட்டுக்குடிக்காக மட்டுமே போராடுகின்றார்கள் என்று பொய்ப்பிரச்சாரம் செய்யும் ரவிக்குமார் போன்ற நச்சுப் பாம்புகளைக் கூடவே வைத்திருப்பதிலிருந்தும், ராஜபக்ச முன்னால் கூனிக் குறுகி நின்ற விதத்திலிருந்தும் அவரைத் தமிழ் மக்கள் ஒரு நல்ல சந்தர்ப்பவாத அரசியல்வாதி என அடையாளங்காணலாயினர்.

"ஈழத்தை ஆதரித்துப் புரட்சித் தலைவி பேசியது இயற்கையின் கொடை" என்று புகழாரம் சூட்டிச் செயலலிதாவின் சந்தர்ப்பவாத அரசியல் அறுவடைக்குப் புரட்சிப் பூச்சுப் பூசித் தமது பேச்சலாற்றலால் தமிழரை ஏமாளியாக்கிய வைகோ அவர்களும் ஈழத்தமிழினத்தின் விடுதலைக்கு ஏதேனும் பெரிதாகச் செய்து விடுவார் என நம்புவது வேடிக்கையானதே.

விமானப்படைத்தள முற்றுகை, இந்திய அரசின் வருமான வரி, உற்பத்தி வரி அலுவலகங்களை முற்றுகையிடும் போராட்டம் போன்ற இந்திய ஆளும் வர்க்க நலன்களுக்கு கெடுதியாக அமையவல்ல போராட்டங்களைக் கூட வெறும் அடையாளப் போராட்டங்களாகவே மேற்கொண்டு ஆளும் வர்க்க நலன்கள் கேடாகாத வண்ணமே இங்குள்ள ஈழ ஆதரவு அமைப்புகள் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

மாபெரும் மக்கள் திரள் போராட்டங்கள் மூலம் இந்திய ஆளும் வர்க்க நலன்களுக்கான இந்திய ஒன்றிய அரசைப் பணிய வைக்கலாமே தவிர ஒருபோதும் இறைஞ்சி மன்றாடி இந்தியாவைத் தமிழர்களின் பக்கம் சாய்க்க முடியாது என்ற பாலபாடத்தில் கூடத் தெளிவில்லாமல் ஈழ ஆதரவு அமைப்புகளைத் தமிழ்நாட்டில் நடத்துகின்றார்களா? இல்லை எல்லாந்தெரிந்தும் வேறெதுவொன்றின் மீதுள்ள பீதியின் பாற்பட்டு இவ்வாறு நடந்துகொள்கின்றனரா? இல்லை ஆளும் வர்க்க நலன்களிற்கெதிராகப் போராடுவது தமது இருப்பினைக் கேள்விக்குள்ளாக்கிவிடும் எனக் கணித்துக் காலத்தை சில வெற்றுக் கோசங்களுடன் கடத்தி விடுவது என முடிவெடுத்துள்ளார்களா? எனப் பல பல வினாக்குறிகள் இவர்கள் முகங்களைப் பார்க்கும் போது தமிழர்களின் மனக் கண்களில் வந்து போகின்றன.

தமிழக மண் சார்ந்த ஆயிரம் சிக்கல்கள் இருக்கையில், மண் சார்ந்த சிக்கல்களுக்கெதிரான போராட்டங்களை வலுப்பெறச் செய்து பெரும் மக்கள் திரள் போராட்டங்களாக அவற்றை வளர்த்தெடுத்து இந்திய ஒன்றியத்தின் ஆளும் வர்க்க நலன்களுக்கெதிராகப் போராடினாலேயன்றி, மிகப் பெரும் மக்கள் திரள் போராட்டங்களை முன்னெடுக்க வல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமையை தமிழ்நாட்டிலுள்ள ஈழ ஆதரவு அமைப்புகள் உள்ளிட்ட எந்தவொரு அமைப்பும் பெறாது.

தமிழ்த் தேசிய சிந்தையை ஒவ்வொரு தமிழனினதும் ஒவ்வொரு தமிழிச்சியினதும் நெஞ்சில் நிறுத்தி, தமிழர் மொழி, தமிழர் தாயகங்கள், தமிழர் பொருண்மியம், தமிழர் தொன்மம் மற்றும் தமிழர் பண்பாடு என்றவாறு மண் சார்ந்து இனவுணர்வின்பாற்பட்டுச் சிந்திக்கக் கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கான வேலைத் திட்டங்களை ஆர்முடுக்க வேண்டியது உலகத் தமிழின விடுதலைக் கோட்பாட்டை நோக்கி நகர்ந்து தமிழினத்தின் எல்லாத் தேசிய இனங்களையும் விடுதலையடையச் செய்ய அவசியமானதாகும்.

தமிழ்த் தேசியத்தைச் சித்தாந்தமாக முன்வைத்து, தமிழ்நாட்டின் அரசியல், பொருண்மிய, வாழ்வியல் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் போராட்டங்களை முதன்மைப்படுத்தி தமிழ்நாட்டு மண் சார்ந்த சிக்கல்களை முனைப்புறுத்திப் போராடுவதன் மூலம் மக்கள் திரள் போராட்டங்கள் தமிழ்நாட்டில் சாத்தியப்படுவதுடன் இவை இந்திய ஆளும் வர்க்கங்களின் நலனைத் தமிழ்நாட்டு மண்ணில் வைத்துத் தகர்த்தெறியவல்லனவாக வளர்ச்சியடையும். விளைவாகத் தமிழ்நாட்டின் இயங்கு ஆற்றல் அதிகரித்து, ஈற்றில் அது தமிழீழ விடுதலை குறித்துத் தீர்மானகரமாக செயற்பட வல்லதாக வளம் பெறும். இவ்வாறு தமிழின விடுதலையின் முதன்மை எதிரியான இந்திய ஆளும் வர்க்க நலன்களுக்கான இந்திய அரசின் கொட்டம் துண்டு துண்டாகச் சிதறினாலேயே தமிழின விடுதலையானது தமிழீழத்திலோ, மலையகத்திலோ அல்லது தமிழ்நாட்டிலோ சாத்தியமாகும்.

தமிழின ஓர்மையை வேண்டி "எங்கு பிறப்பினும் தமிழன் தமிழனே" என்று உலகத் தமிழர் கோட்பாட்டின் வழியில் சிந்திப்பதில் பெரு வாஞ்சையுடையவராகவே இப்பத்தி எழுத்தாளர் பெரும்பாலான அமைப்புகளைச் சாடுகிறாரேயன்றிப் பகையுணர்வாலல்ல என்பதைச் சொல்லியாக வேண்டியுள்ளது. மெய்நிலை திரித்துத் தமது ஆற்றல்களை மிகைப்படுத்தி வாய்ச்சவடால் மட்டும் அடித்து விட்டு, எந்தப் பயனுள்ள செயற்பாடுகளையும் செய்து இந்திய ஆளும்வர்க்க நலன்களுக்கான இந்திய அரசிற்கெதிராக மக்கள் திரள் போராட்டங்களை நடத்தித் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தவில்லையென்பதால், தமிழீழ விடுதலை நோக்கிய தாய்த் தமிழ்நாட்டின் இயங்காற்றல் குறித்த மீளாய்வு செய்தேயாக வேண்டியதாயிற்று. தமது சொந்த அரசியல் நலன்களுக்கும் பிழைப்பிற்குமாக பல சித்து விளையாட்டுகளைச் செய்து கொண்டு ஈழத்திற்காக தீர்மானகரமாக எதையும் செய்யாமல் ஈழ ஆதரவுச் செயற்பாட்டாளர்கள் எனக் காட்டித் தமது அரசியலை தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான அமைப்புகள் நகர்த்துகின்றார்கள் என்கின்ற கசப்பான உண்மையைத் தமிழீழ விடுதலையை ஆத்மார்த்தமாக நேசிப்பவர்களும், தமிழீழ விடுதலைக்காகப் போராடுபவர்களும், தமிழீழ மக்களும், தமிழ்நாட்டு மக்களும், உலகெங்கும் பரவி வாழும் ஏனைய தமிழர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

எனினும் தமிழின விடுதலையில் உறுதியாகவுள்ள நூறாயிரக் கணக்கான மக்களும் சில அமைப்புகளும் இருக்கின்றார்கள். ஆனால் அந்த அமைப்புகள் தமக்குள் ஒரு பொது வேலைத் திட்டத்தினை ஏற்படுத்தித் தமது இயங்காற்றல்களை அதிகப்படுத்தி, தமிழினப் பகையாம் இந்திய அரச பயங்கரவாதத்தின் கதை முடிக்கத் தமிழ்நாட்டில் பாரிய மக்கள் திரள் போராட்டங்களைச் செய்ய வேண்டும். தமிழ்நாடு விடுதலையடைய வேண்டும். தமிழீழம் விடுதலையடைய வேண்டும். மலையகம் விடுதலையடைய வேண்டும்.இவற்றுக்கெல்லாம் முதலில் இந்திய அரச பயங்கரவாத்தினைத் தமிழ்நாட்டில் வைத்துத் தகர்க்க வேண்டும்.

**"என்மொழி என்னினம் என்நாடு நலிகையில்**

**எதனையும் பெரிதென எண்ணமாட்டேன் "**

**வேறு**

**எவரையும் புகழ்ந்துரை சொல்லமாட்டேன் !"**

என்கின்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயாவின் கவி வரிகளினை உள்வாங்கியவர்களாக எமது சிந்தனைகளைச் செம்மைப்படுத்தி செயலுறுத்த முனைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளுக்கு ஒரு மடல்



**அன்பார்ந்த உறவுகளே!**

தமிழ்த்தேசிய இன விடுதலை மீது நம்பிக்கையிழந்து, எமது இன அடையாளங்களைக் காக்கத் தவறி, எமது தாய்த்தமிழ்த்தொன்மத்தை மீட்க மறந்து, சிறீலங்காத் துடுப்பாட்டத்துக்கு கைதட்டி, சிங்கள அதிகார வர்க்கத்திற்குக் கூழைக்கும்பிடு போட்டு, சிறீலங்காவின் குடிகளாக வாழப்போகும் இழிநிலைக்கு வந்துவிட்டதா எம்மினம்? போரினதும் இடப்பெயர்வினதும் அவலங்களின் எச்சங்களல்லவா நாங்கள்? எம் ஒவ்வொருவரையும் சுற்றி இருக்கும் எம்மவர்களையும் அவர்களின் வாழ்நிலையையும் பற்றி மெய்யாலுமே சிந்தித்திருக்கிறோமா என ஒரு கணமேனும் சிந்தியுங்கள். அவர்களில் பலர் கொடிய போரினால் இடம்பெயர்ந்த அவல வாழ்விற்குப் பின்னர் மீண்டும் மண்திரும்பி வாழ்ந்து கொண்டிருக்கலாம். சிலர் தமது அவயவங்களை இழந்திருக்கலாம். இன்னும் சிலர் தமது உறவுகளை இழந்து தவித்துக்கொண்டிருப்பவர்களாக இருக்கலாம். இன்னும் சிலரின் அன்புக்குரியவர்கள் காணாமலாக்கப்பட்டிருக்கலாம். சிலரின் உறவுகள் இன்னமும் சிங்களத்தின் சிறைகளில் தாங்கொணாத துயரத்தினை அனுபவித்துக்கொண்டிருக்கலாம். இன்னும் சிலரின் உறவுகள் பாரிய உளவியல் பாதிப்புக்களுக்கு ஆளாகியிருக்கலாம். சிலர் இன்னும் கண்டறியப்படாத சுவாசத் தொற்றுகளுக்கும் புற்றுநோய்த் தாக்கங்களுக்கும் கதிர்வீச்சின் பாதிப்புகளுக்கும் உள்ளாகி நோய்களில் உளன்றுகொண்டிருக்கலாம். இன்னும் சில பேர் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, பயணிக்க பணமுமின்றி அவலவாழ்வில் சிக்கித் தவித்தவாறு இருப்பினும் உங்களைக் கடக்கையில் அவர்களின் உதடுகள் புன்முறுவல் பூத்திருக்கலாம். இன்னும் சிலரோ சொந்த நிலம் திரும்ப வழியின்றி அவர்களின் ஏதிலி வாழ்வின் இன்னொரு பகுதியை உங்கள் வீட்டுக்கருகில் கழிக்கலாம். அவர்களில் சிலரோ இத்தனை இன்னல்களையும் ஒருசேர அனுபவித்து, நொந்தும் வெந்தும் தமது மீதி வாழ்க்கையைக் கடத்திக்கொண்டிருக்கவும் கூடும். இத்தனை துன்பங்களையும் ஒருசேர தாங்கிக்கொள்ளவல்ல ஆற்றல் உலகத்தில் எவருக்கேனும் இருக்குமா? ஆனால் அவற்றையெல்லாம் கடந்துசெல்கிறீர்களே.. எப்படி முடிகின்றது?

உங்களிற்கு முந்திய தலைமுறையின் இளமைக் கனவுகளின் புதைகுழிகளின் மேல் நீங்கள் நின்றுகொண்டிருக்கின்றீர்கள். உங்களுக்காக உங்களின் விடிவுக்காக நஞ்சுமாலையணிந்தவர்களை உங்களுக்கு நினைவிருக்கின்றதா? இன்னமும் அறிவிக்கப்படாத பல தியாகங்களிற்கு சொந்தக்காரர்கள் அவர்கள். இன்று ஒவ்வொரு கணமும் பல கேள்விக்குறிகளுடன் வாழ்க்கை அவர்களை நடத்திக்கொண்டிருக்கின்றது. உங்களின் நண்பன் இன்னமும் அவனது தந்தையைத் தேடிக்கொண்டிருக்கும் தாயுடன் அலைந்துகொண்டிருக்கக்கூடும். உங்களின் நண்பி தன் அண்ணனுக்காகக் காத்துக்கொண்டிருக்கக்கூடும். இத்தனை அவலவாழ்வுகளும் எமது இனத்திலிருக்கையில் அத்தனை இலகுவாகக் கடந்துசெல்ல எப்படி முடிகிறது?

**உறவுகளே!**

இனமாகச் சிந்தித்துப் பார்த்தால் இத்தனை துன்பங்களும் ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டல்லவா? இவ்வளவு துன்பங்களையும் ஒருசேர சுமப்பவர்களாகவல்லவா நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் இருக்கவேண்டும். எனில் நாம் இத்தனை துன்பங்களையும் தாங்கும் ஆற்றல் பெற்றவர்களா? ஆனால், நாம் அத்தனை களியாட்டங்களிலும் அல்லவா ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். சிரிக்கின்றோம். களிக்கின்றோம். வாழ்க்கையைக் கொண்டாடுகின்றோம். உலகமயமாதல் பண்டங்களையெல்லாம் நுகரும் பிண்டங்களாக இருக்கின்றோம். இதனை எவ்வாறு விளங்கிக்கொள்வது? ஒருசேர ஓரினமாகச் சிந்திக்கும் ஆற்றல் எங்களிடம் இல்லை என்பதா? அல்லது தமிழராய் எங்களை நாங்கள் உணர்ந்ததே இல்லை என்பதா? பாரிய இன அழிப்புக்குப் பின்னரும் நாங்கள் யாரென சிந்திக்காமல் ஒரே இனமாக உணராமல் இருப்பது மிகவும் கேவலமான விடயம் அல்லவா?மந்தைகள் கூட கூர்ப்படைந்து கூர்ப்படைந்து ஓரினமாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றனவே. ஆனால் நாம்? தமிழராய் எங்களை நாங்களே எப்போது உணரப் போகின்றோம்?

எங்களில் பலர் எதிரியை மறந்து எதிர்க்கவேண்டியவற்றையெல்லாம் மறந்து ஒன்றாகவேண்டியவற்றையல்லவா எதிர்த்துக்கொண்டிருக்கிறோம். இதையல்லவா அரசியல் என்று அலட்டிக்கொண்டிருக்கின்றோம். உலகிலுள்ள அத்தனை களியாட்டங்களையும் அதுசார் நுகர்வுகளையும் ஆடம்பர நுகர்வுகளையும் நுகர்வோராக மாறிக்கொண்டிருக்கிறோம். பொருளற்ற ஆடம்பர நிகழ்வுகளுக்காக எந்தவித நீண்டகால நோக்கங்களுமின்றி வெறுமனே போட்டிபோட்டுக்கொண்டு பணத்தை வாரியிறைத்துக்கொண்டிருக்கின்றோம். சினிமா சின்னத்திரை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினுள் ஊறித் திளைப்பவர்களாகவும் திண்டு கொழுத்து சமிபாடு அடைய வழியில்லாமல் நாடு நாடாக உல்லாசத்திற்கு அலைந்து திரிபவர்களாகவும் எம் பண்புகளை நாமே பொதுவெளிகளில் விற்றுக்கொண்டிருக்கின்றோம். இதைப் பற்றி என்றாவது சிந்தித்திருக்கிறோமா? அல்லது இவற்றையெல்லாம் சிந்திக்கும் அளவிற்கு எங்களின் சிந்தனை வளம் பெற்றிருக்கின்றதா? எங்கள் இனத்தின் துன்பச் சுமைகளை இன்னமும் சுமக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை எம் இளைய தலைமுறை உணரவில்லையா? பாடுகள் சுமந்தோர் இன்னமும் இரத்தவாடைகளில் கிடக்கின்றனர். எம் இனத்தில் இருக்கத் தகுதியுள்ளவர்களா நாங்கள்?



அறிவற்ற மாற்றார்களது வாழ்வியல் முறைகளை இறக்குமதி செய்து அவற்றை அனுபவிப்பதே தமது வாழ்நாள் பெருமையாக நினைத்து அதில் பணத்தினையும் கொட்டிச் செலவழித்து பெருமிதம் கொள்ளும் பகுத்தறிவற்றவர்களாகவும் எம்மில் பலர் இருக்கின்றோம். உழைப்பையும் செலுத்தாமல் உற்பத்தியையும் நிகழ்த்தாமல் மாற்றானின் பண்டங்களைக் கூவி விற்கும் அடிமைத் தரகர்களாகவும் வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தில் கூத்தடிக்கின்ற மனசாட்சியற்றவர்களாகவும் வார்த்தைகளால் வடித்துவிட முடியாத தியாகங்களை எல்லாம் கொச்சைப்படுத்தி, படைப்புகள் என்ற பெயரில் அறிவார்ந்த பண்பார்ந்த தமிழ்ச் சமூகத்திற்குள் கெடுதி விளைவிக்கக்கூடிய நயவஞ்சகக் கருத்துகளைப் பரப்பிவிட்டு, சிங்கள இந்திய அரச பயங்கரவாதங்களின் நிகழ்ச்சி நிரலினை பிசகாது முன்னெடுப்பதினை தமது வாழ்வின் இலட்சியமாகச் சிலர் முன்னெடுப்பவர்களாகவும், பன்னாட்டு அதிகார வர்க்கம் எதிர்பார்க்கும் கண்டதையும் நுகரும் சமூகமாகி, அறிவார்ந்து ஆய்ந்தறிந்து விடயங்களை அணுகும் ஆற்றலற்றவர்களாகவும் அப்படி இருப்பதனையே நாகரீகமாகக் கருதும் கேவலங்கெட்ட வாழ்வியல் கோலங்களைக் கொண்டுள்ளவர்களாகவும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஞ்சையற்ற, சிந்தனைத் தெளிவற்ற ஒரு மடைமைச் சமூகமாகவும் எம்மில் பலர் இன்னும் வாழ்ந்துவருவதானது நாம் பேசும் மொழிக்கும் நாம் பிறந்த மண்ணுக்கும் நாம் பிறந்த இனத்துக்கும் எம் மூத்தோர் வாழ்ந்த வாழ்வுக்கும் எமது உறவுகள் செய்த தியாகங்களுக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும் இரண்டகம் செய்யும் இழிசெயல்களாகும். இந்த இழிநிலையை விட்டெறிந்து, அத்தனை கேவலமான மடைமைகளையும் தூக்கியெறிந்து நெஞ்சில் இன மான உணர்வுடன் எமது இனம், எமது மொழி, எமது மண், எமது மரபு, எமது பண்பாடு, எமது வாழ்வியல், எமது மூத்தோர் தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் என்பவற்றை சிந்தையில் நிறுத்தி, இவற்றையெல்லாம் இழந்தால் எம் இனம் அழிந்துபோகும் என்ற பெரும் அவலத்தை உணர்ந்தவர்களாக, ஓரினமாக ஓரணியில் நின்று இத்தனை அவலங்களுக்கும் ஒரு முடிவுகட்டி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற நினைப்புடன், எமது மண்ணில் எமது மொழி பேசி எம்மை நாமே ஆளவேண்டும் என்ற திடத்துடன் வீறுகொண்டு பயணிக்க வேண்டியது இந்த அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தில் பிறந்த ஒவ்வொருவரினதும் தட்டிக்கழிக்க முடியாத தார்மீகக் கடமையல்லவா?




இத்தனை துன்பங்களுக்கும் முடிவுகட்டாமல் இன மானமுள்ள எவராலும் படுத்துறங்க முடியாதே!!

விடுதலை அடையும்வரை வேறு என்னதான் செய்ய முடியும்? விடுதலை அடையும்வரை மன உந்துதல் உள்ள ஒரு தமிழனுக்கு வேறு என்ன வேலை இருக்க முடியும்? உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். போராடுவதைத் தவிர வேறேதும் வழியுண்டா? இந்த உலகில் வாழ்கின்ற மற்றைய மாந்தர்களைப் போலல்லாமல் எமக்கு ஆயிரம் சுமைகள் இருக்கின்றனவல்லவா? இவற்றைச் சுமப்பதற்கான தோளுறுதியும் நெஞ்சுறுதியும் பெற எமது வாழ்வியலை ஒப்பாரும் மிக்காருமில்லாத் திறன்வழியாம் தனிவழியில் கட்டமைப்பதுதான் காலம் எமக்கு விட்ட கடமையல்லவா!!

**நாம் தமிழர்கள்**

**எமக்கு ஆயிரம் பொறுப்புக்கள் உண்டு**

**மற்றவர்கள் போல் நாம் இருக்க முடியாது.**

**நாம் வென்றெடுக்க வேண்டியது விடுதலை..**

**நாம் மற்றவர்களிலிருந்து தனித்துவமானவர்களாய் இருக்க வேண்டும்.**

**ஆம்.. தனித்துவமானவர்களாய் இருந்தேயாக வேண்டும் ..**

**இவண்**

**அருள்வேந்தன்**




படங்கள் : இணையம் மற்றும் செ அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வணிகம்! தமிழர் கையில்!!

# தமிழர் வணிகக்களம்

1. ஒவ்வொரு நகரங்களிலும் தமிழர் வணிகப் பரிந்துரை முனையத்தை உருவாக்குதல்
2. தமிழர்களில் தொழில் முனைவோரை உருவாக்குதல்
3. தமிழர் உற்பத்திப் பொருட்களை தமிழர்களால் சந்தைப்படுத்துதல்
4. தமிழ் உற்பத்தியாளர், வணிகர் மற்றும் தொழில்முனைவோரை இணையவழி இணைத்தல்
5. தமிழ் வணிகர்களுக்கான மூலதனக்கடன் ஏற்பாடு செய்தல்
6. தமிழர்களின் வணிகத்தை ஒருங்கிணைத்தல்
7. தமிழர்களிடமே தமிழர்கள் பொருட்களை வாங்க பரப்புரை செய்தல்

எங்களுடன் இணைத்துக்கொள்ள
உங்கள் பெயர், தொழில், முகவரி, தொடர்பு எண்
அனைத்தையும் எங்களுக்கு அனுப்பவும்

எண்.40, காவலான் கேட், காஞ்சிபுரம்,
(மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்)

9789251125 9444474848

# வானகம் பதிப்பகம்

புத்தகங்கள் மற்றும் சிற்றிதழ்
வடிவமைப்பு

தமிழ் ஆங்கில மொழியாக்கம்

ஓவியங்கள் வரைதல்

தட்டச்சு செய்தல்

மிகவுயர்ந்த தரத்தில் நேர்த்தியாகவும்
மிகக் குறைந்த செலவிலும்
வடிவமைத்தும் அச்சிட்டும் தரப்படும்.

*0044 7403871826*
*0044 7403871826*
*0044 7403871826*
*vaanakampathippakam@gmail.com*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காக்கை

கற்போம் - கற்பிப்போம் - களமாடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org